VOLUME : 4 ISSUE - 3

# வைகறை வெளிச்சம்

₹ 15

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

மே– ஜூன்2011
ஜமாதுல் ஆஹிர் – ரஜப் 1432







## மோடியைக் காப்பாற்றும் உச்சநீதிமன்றம்

## என் வழி இந்துத்துவா வழி



## ஒசாமா கொலை நடந்தது என்ன?

(துங்களின் சதிகளை) மனிதர்களிடமிருந்து இவர்கள் மறைத்து விடுகின்றனர்; (ஆனால் அவற்றை) அல்லாஹ்விடமிருந்து இவர்கள் மறைக்க முடியாது – (ஏனெனில்) அவன் திருப்திப்படாத பேச்சை அவர்கள் இரவில் (பேசி சதி) ஆலோசனை செய்யும் பொழுது அவன் அவர்களுடன் இருக்கின்றான் – அல்லாஹ் அவர்கள் செய்கின்றவற்றைச் சூழ்ந்து அறிகிறவனாக இருக்கிறான்

***(அல்குர் ஆன் 4:108)***


**வைகறை வெளிச்சம்**

மே- ஜூன்2011 உ

ஜமாதுல் ஆஹிர் - ரஜப் 1432

**Volume : 4 Issue : 3**

ஆசிரியர்

**மு. குலாம்முஹம்மது,** M.A. (Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்

**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

தனி இதழ் ரூ. 15/-

**ஆண்டுச் சந்தா**

உள்நாடு ரூ.180/-

வெளிநாடு ரூ. 1500/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**வைகறை வெளிச்சம்**

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு : 9444239594

VAIGARAI VELICHAM

52/1, Mannadi Street,
4th Floor, Room-7, Mannadi,
Chennai - 600 001.

**Phone: 044-45566909**

**Mob: 9444239594**

E-mail: darultrust@yahoo.com

Website : www.darulislam.in


## உள்ளே. . .



கவர் ஸ்டோரி

**ஒசாமா கொலை நடந்தது என்ன?**

பக்கம்

**50**


| | |
|---|---|
| தரீக்குல் குர்ஆன் ................................ | 5 |
| முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? ................................ | 10 |
| நாம் பிரிந்துவிட வேண்டாம் ................. | 14 |
| 60 வயதுக்கு பிறகு. . . ....................... | 19 |
| இனப்படுகொலை புகழ்: மோடியைக் காப்பாற்றும் உச்சநீதிமன்றம் | 30 |
| உச்சநீதிமன்றம் வழி அம்பலத்திற்கு வரும் மோடியின் அந்தரங்கம்! ...................... | 39 |
| கோத்ரா: உண்மைகளின் பின்னணிகள் என்ன? ........................................... | 43 |
| எகிப்தின் புரட்சி இன்றைய நிலை! .......... | 48 |
| பின்லேடன் மரணத்தில் மட்டுந்தான் அமெரிக்கா பொய் சொன்னதா? ............. | 56 |
| அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள் .. | 62 |
| கர்கரேயை கொலை செய்தது யார்? ....... | 65 |
| கம்ப்யூட்டர் கல்வி ............................... | 71 |
| பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை ......... | 74 |



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.

## தலையங்கம்

# ‘அண்ணா ஹஸாரேயும் ஊழலும்’

“Corruption and government are like Fish and Water” - **Bishma Ptamah Chanakya**

“ஊழலும் ஆட்சியும் மீனும் அது வாழும் தண்ணீரும் போல்” என கூறியவர் இந்திய அரசியலில் அதிசயமான ஆட்சியை நடத்தியவர் என அறியப்படும் சாணக்கியர்தான்.

*விதிகளை மீறுவதற்காகவும் லஞ்சம் வாங்குகிறார்கள். கடமையைச் செய்வதற்கும் லஞ்சம் வாங்குகிறார்கள். ஆமாம் இந்தியாவில் கடமையைச் செய்வதற்கு அரசிடம் ஊதியமும் மக்களிடம் லஞ்சமும் வாங்குகின்றார்கள் அரசு ஊழியர்கள்.*

*இந்த லஞ்சம் ஒழிக்கப்பட வேண்டுமென வரலாறு முழுவதும் போராட்டங்கள்! ஆர்ப்பாட்டங்கள்!!*

*தொடங்கப்படும் அனைத்து அரசியல் கட்சிகளும் இதனை முன்வைத்தே தொடங்கப்படுகின்றன. ஆனால் ஆட்சியில் அமர்ந்தும் லஞ்சத்தை வாங்கிடுவதில் எங்களுக்கு நிகர் நாங்களே என்றாகிவிடுகின்றார்கள்.*

*நாட்டில் நடப்பிலிருக்கும் சட்டங்கள், லஞ்சம் கொடுப்பதும், தண்டனைக்குரிய குற்றமே என்கின்றன.*

*இந்தப் பின்னணியில் 80களில் நமது நாடாளுமன்றத்தில் ஒரு விவாதமும் நடந்தது. அந்த விவாதத்தில் உறுப்பினர் ஒருவர், “லஞ்சம் வாங்கியதற்காக ஆங்காங்கே ஒரு சிலர் தண்டிக்கப்படும் செய்திகள் அவ்வப்போது எதிர்படுகின்றன. ஆனால் லஞ்சம் கொடுத்ததற்காக யாரேனும் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்களா?” எனக் கேட்டார். மொத்த உறுப்பினர்களும் சிரித்தார்கள்.*

*இதற்கு மிகவும் வேடிக்கையாக சபாநாயகர் டி.எஸ். தில்லான் அவர்கள். “குடிமக்கள் அனைவரையும் தண்டிக்க முடியாது” என்றார்கள்.*

*மீண்டும் ஒரு பெரும் சிரிப்பொலி, கரவொலி. கொடுப்பவர்கள் இருக்கின்ற வரை வாங்குபவர்களும் இருப்பார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.*

*எந்தக் குடிமக்கள் லட்சக்கணக்கில் குமுமி லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்கின்றார்களோ, அவர்கள் தாம் அடுத்தவர்கள் உரிமையை அபகரிக்கவும், “தங்கள் காரியம்” முடிய வேண்டும் என்பதற்காகவும் யாரையும் விலைக்கு வாங்க விரைபவர்கள்.*

*புதிய புதிய சட்டங்கள் லஞ்சத்தை ஒழிப்பதைவிட லஞ்சத்தை வளர்க்கவே செய்யும் என்பதே இந்தியாவின் வரலாறு.*

*இப்போது அண்ணா ஹஸாரே லஞ்சத்தை ஒழிக்கப் பிறந்த மாவீரன் என அடையாளப் படுத்தப்படுகின்றார். அவரும் நிவாரணமாக சில சட்டங்களையே சொல்லுகின்றார். அத்தோடு இணைத்து அவரே தன் வாயால் இஃது முழுமையான தீர்வாகாது எனத் தீர்ப்புக் கூறுகின்றார்.*

*அவர் சொல்லும் லோக்பால் சட்டம் அவருடைய மூளையில் முகிழ்ந்த புதிய சரக்கு அல்ல. 1968 முதலே இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.*

*1963இல் நியமிக்கப்பட்ட* Administrative Reforms Committee *நிருவாக சீர்திருத்த குழு இதனை பரிந்துரைத்தது.*

*ஆனால் ஒரு லோக்பால் குழுவுக்கும் நமது அரசியல்வாதிகள் சம்மதம் தந்திடவில்லை.*

*1988இல் லஞ்ச தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதே போல் முதன்மை கண்காணிப்பு ஆணையர் என்ற சிறப்பு அதிகாரியும் நியமிக்கப்பட்டார்.*

இவையெல்லாம் லஞ்சத்தை ஒழிக்கவில்லை, மாறாக லஞ்சத்தை வானாளவ வளர்த்தே இருக்கின்றன.

பதவியிலிருப்பவர்கள் அந்தப் பதவியை லஞ்சம் என்ற விலையை கொடுத்து வாங்கித்தான் பதவியில் அமருகின்றார்கள். அரசியலில் லஞ்சத்தின் வேர், இன்னும் ஆழமாக வேரூன்றிவிட்டது. நாடாளுமன்ற உறுப்பினராக "சீட்" வாங்கவே கட்சி தலைமைக்கு லஞ்சம் தருகின்றார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளராக நிற்கவே லஞ்சம் தருகின்றார்கள்.

இப்படி தலைவன் தொண்டனிடம் லஞ்சம் வாங்கும் வகையில் ஊழலும், ஊதாரித்தனமும் தலைவிரித்தாடுகின்றது.

ஊடகங்கள், பத்திரிகைகள் இவையெல்லாம் லஞ்சம் வாங்குகின்றன. தங்களுக்கு லஞ்சம் தருபவர்கள் தாம் சிறந்த வேட்பாளர்கள் என்று செய்திகளை சித்தரிக்கின்றனர். மக்களை ஏமாற்றுகின்றனர். இதனை Paid News விலைக்கு வாங்கிய செய்தி என்கிறார்கள். உண்மையில் அது பொய் புனைந்துரை.

ஆகவே லஞ்சம் வாங்காதவர்களே இல்லை என்ற நிலை தொடருகின்றது.

தேசியம் - நாட்டுப்பற்று என்றெல்லாம் கோஷம் போட்டார்கள் சங்கப் பரிவாரத்தினர். அவர்கள் பதவிக்கு வந்தபோது தான், இறந்த இராணுவ வீரர்களின் உடலை அடக்கம் செய்யும், சவப் பெட்டியிலும் லஞ்சம் வாங்கிட முடியும் என்பதை செய்து சாதித்தார்கள்.

எதிர் கட்சியாக அமர்ந்த போது கேள்வி கேட்பதற்கு லஞ்சம் வாங்க முடியும் என்ற புதிய சாதனையை படைத்தார்கள்.

இவர்களும், இப்போது லஞ்ச ஒழிப்பு அணியில் தலையை நுழைத்திருக்கின்றார்கள்.

2009, 2010 பட்ஜட்களில் அம்பானிகளுக்கு வரி சலுகைகள் அள்ளித் தந்தது. அதற்காக லஞ்சம் வாங்கியது காங்கிரஸ் அரசு. அதனை நாடாளுமன்றத்தில் விவாதமாக ஆக்காமலிருக்க லஞ்சம் வாங்கியது எதிர்கட்சியான சங்கப் பரிவார பாரதீய ஜனதா கட்சி.

லஞ்சம் வாங்கியவர்களெல்லாம் சேர்ந்து லஞ்சத்தை ஒழிப்போம் என்று வரட்டு வேதாந்தம் பேசுகிறார்கள்.

இந்தியாவிற்கு இப்போது தேவைப்படுவது ஒரு முழு சமுதாயப் புரட்சி. அதன் மூலம் மொத்த சமுதாயமும் சரியானதொரு அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அந்த அடிப்படை, மனிதர்கள் அனைவரும் (இந்தத் தலைப்பின் கீழ் சொன்னால்) லஞ்சம் கொடுப்பவர்களும் லஞ்சம் வாங்குபவர்களும் இந்த உலக வாழ்க்கையைப் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றிட வேண்டும்.

மரணம் என்றேனும் ஒரு நாள் நம்மை அழைத்துச் கொள்ளும் அதன் பின். . . ? வாழ்க்கை முடிவுற்றுவிடுகின்றதா இல்லை தொடருகின்றதா என்பதையும் அவர்கள் அறிந்திட வேண்டும்.

இவற்றை தெரிந்திட அவர்கள் இந்த உலகைப்படைத்தவனையும், அவன் இந்த உலக மக்களுக்கு அருளிய வழிகாட்டுதலையும் தெரிந்திட வேண்டும்.

அந்த வழிகாட்டுதல்கள், மனிதனை இறைவனே படைத்தான். அவன் ஏகன், தனித்தவன். அவனே இந்த உலகை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவான். நமது வாழ்க்கையையும் அவனே ஒரு நாள் ஓர் முடிவுக்குக் கொண்டு வருவான். உலக முடிவு நாளுக்குப்பின் ஒரு நாள் எல்லோரும் உயிர் தந்து எழுப்பப்படுவார்கள். அந்த நாள் தீர்ப்பு நாள். அந்நாளில் நாம் இந்த உலகில் எப்படி வாழ்ந்தோம் என்பது பற்றிய தெளிவான கணக்கொன்று அங்கே வரும். அதில் மிகவும், உன்னிப்பாக, நாம் எப்படி சம்பாதித்தோம், எப்படி செலவு செய்தோம் என்பவைப் விரிவான பரிசீலனைக்கு உள்ளாக்கப்படும்.

*அடுத்தவர்கள் உரிமைகளைப் பறிக்கவும் பொதுமக்களுக்கு உரிதானவற்றை தமதாக்கிடவும் லஞ்சம் கொடுத்தோம், அதன் மூலம் ஏழைப்பாளைகளின் உரிமைகளை உண்டோம் என்றால் நிச்சயமாக நரகம் நமக்குச் சன்மானமாகத் தரப்படும்.*

*அதே போல் லஞ்சம் வாங்கி, வயிறு வளர்த்தோம். அனாதைகள், சிறுவர்கள் இவர்களுக்கு சேர வேண்டியதையெல்லாம் அபகரித்தோம், என்றால் அப்போது கடுமையான தண்டனைகள் தரப்படும், தப்பிட முடியாது.*

*நாங்கள் அடுத்தவர்களின் உரிமைகளை அபகரிக்க அல்ல. எங்கள் உரிமைகளை தக்கவைத்திடத்தான் லஞ்சம் தருகின்றோம் என யாராவது சொன்னால் அவர்களை விட கோழைகள் யாரும் இருக்க முடியாது.*

*தங்களது உரிமைகளைப் பெற்றிடும் நெஞ்சுரம் எல்லோருக்கும் வேண்டும்.*

*அந்த நெஞ்சுரமும் அந்த ஏக இறைவனை ஏற்றுக் கொண்டால் நிச்சயமாக வரும். ஏனெனில் அந்த ஏக இறைவனின் வழிகாட்டுதல்கள். உன் உரிமை மீட்பில் நீ உன் உயிரை இழந்தால் நல்ல சுவர்க்கம் நிச்சயமாக உண்டு என வாக்களிக்கின்றது.*

*அதே நேரத்தில் அடுத்தவர்களின் உரிமைகளை அபகரித்தால் தண்டனை உண்டென எச்சரிக்கின்றது.*

*அதே போல், ஆட்சியாளர்களும் மக்கள் மீது பொறுப்புகளை வகித்தவர்களும் அவர்கள் எப்படி ஆட்சி செய்தார்கள். பொறுப்புகளை எப்படி நிறைவேற்றினார்கள், என்பது குறித்து பதில் சொல்லியே ஆக வேண்டும்.*

*மரணத்திற்குப்பின் வரும் அந்த வாழ்க்கையில் யாருக்கும் அணுஅளவு அநியாயம் செய்யப் படமாட்டாது.*

*இப்படி மறுமையை மனதிற்கொண்டு வாழுகின்ற சமுதாயமாக இன்றைய சமுதாயத்தை மாற்றினால் மட்டுமே ஊழலும் அதனால் வளரும் ஊதாரித்தனமும் ஒழியும். அல்லாமல் ஆயிரம் சட்டங்கள் வந்தாலும், இவர்கள் கொடுப்பதை தடுக்க முடியாது. அவர்கள் வாங்குவதை தடுக்க முடியாது.*

*மேலே நாம் சொன்னவை இஸ்லாத்தின் உன்னத வழிகாட்டுதல்கள். இந்தக் கொள்கையால் மட்டுமே லஞ்சத்தை ஒழிக்க முடியும். அந்த வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம்.*

*இறைவன் கூறுகின்றான்.*

***-பூமி அதிர்ச்சியடையும் போது,***

***இன்னும் பூமி தன் சுமைகளை வெளிப்படுத்தும் போது அதற்கு என்ன நேர்ந்தது என்று மனிதன் கேட்கும் போது அந்நாளில், அதுதன் செய்திகளை அறிவிக்கும்***

***அது இறைவனின் கட்டளை!***

***அந்நாளில் மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள்.***

***எனவே எவர் ஓர் அணுஅளவு நன்மையைச் செய்திருந்தாலும் அதற்குரிய நன்மையை அவர் கண்டு கொள்வார்.***

***அன்றியும் எவர் ஓர் அணு அளவு தீமையைச் செய்திருந்தாலும் அதற்குரிய பலனையும் அவர் கண்டு கொள்வார்.***

***அல்குர்ஆன்: 99:1-8***

*இந்த வழி காட்டுதல்கள் நமக்கு இப்போது எப்போதையும் விட அதிகமாகத் தேவைப்படுகின்றது.*




**வசனம் 51**

**நாம் மூஸாவுக்கு (தவ்ராத்தை வழங்குவதற்காக) நாற்பது இரவுகளை வாக்களித்ததை எண்ணிப் பாருங்கள். பிறகு அவர் (அதைப் பெறச்) சென்ற பின்னர் நீங்கள் அநீதி இழைத்தவர்களாக காளைக்கன்றை (கடவுளாக) எடுத்துக் கொண்டீர்கள்.**

وَإِذْ وٰعَدْنَا مُوسٰى أَرْبَعِينَ لَيْلَةً
ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِنْ بَعْدِهٖ وَأَنْتُمْ ظٰلِمُونَ

கொடுங்கோல் மன்னன் ஃபிர்அவ்ன் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டு மாண்டு மறைந்து போனான் என்பதை எளிதாக ஏற்றுக் கொள்ளவில்லை இஸ்ரவேலர்கள்.

பிர்அவ்ன் இன்னும் சாகவில்லை. அவனுக்கு சாவு என்பதே கிடையாது என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் கூறிய பின்னர் கூட அவர்கள் நம்பவில்லை. உடனே அல்லாஹ் ஃபிர்அவ்னின் உடலை கடற்கரையில் ஒதுங்கவைத்தான். சிவப்பு நிற மாடுபோல் அவன் இருந்தான். அதை இஸ்ரவேலர் கள் கண்ணாரக் கண்டனர்.

இதன் பின்னர் (ஃபிர்அவ்ன் இனி திரும்ப வர மாட்டான் என்று) நிம்மதி அடைந்தனர். அதன் பிறகு தரை வழியாக ஃபிர் அவ்னின் நகரங்களுக்குள் சென்று அதன் பொக்கிஷங்களை தமதாக்கிக் கொண்டு ஆடம்பரத்தில் மூழ்கினார்கள் பனூ இஸ்ரவேலர்கள்.

**(குர்த்துபீ)**

அல்லாஹ்வின் மிகப் பெரும் ஆற்றலால் செங்கடல் பிளந்து மூஸா நபிக்கும் அவர்தம்

சமுதாயமான இஸ்ரவேலர்களுக்கும் வழிவிட்டது. இஃதோர் பேரற்புதம். அவ்வாறு செங்கடலைக் கடந்து சென்ற இஸ்ரவேலர்கள் வழியில் சிலைகளை வணங்கிக் கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்தைக் கண்டனர். அவர்கள் "கன்ஆனிஈன்" என்ற கூட்டம் என்று சில திருமறை விரிவுரையாளர்கள் கூறு கின்றனர். அச்சிலைகள் மாடு போன்ற வடிவத்தில் இருந்தன என்று பேரறிஞர் இப்னு ஜரீர் (ரஹ்) கூறுகின்றார்.

**(நூல்: இப்னு கதீர்)**

சுன்ஆனிஈன்கள் சிலைகளை வணங்கிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டவுடன் இஸ்ரவேலர்களுக்கும் சிலை வணக்கத்தின் மீது ஆசை பிறந்தது. அந்த ஆசையை இறைத்தூதர் மூஸா (அலை) விடமும் அவர்கள் கூறினர். அதைக் கேட்ட மூஸா நபி அம் மக்களை வன்மையாக கண்டித்து எச்சரித்தார்கள். இதோ அல்லாஹ் கூறுகிறான்.

"நாம் இஸ்ராயீலின் வழித் தோன்றல்களை கடல் கடந்து (அழைத்துச்) சென்றோம். அப்போது (வழியில்) தங்களுடைய சிலைகளை வணங்கிக் கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினரைக் கடந்து சென்றனர். உடனே அவர்கள் "மூஸாவே அவர்களிடமிருக்கும் கடவுள்கள் போல எங்களுக்கும் ஒரு கடவுளை ஆக்கிவைப்பீராக" என்று கூறினார்கள். அதற்கு 'நிச்சயமாக நீங்கள் அறிவில்லாத கூட்டத்தினராக இருக்கிறீர்களே' என்றார் (மூஸா நபியவர்)கள்."

"நிச்சயமாக இம்மக்கள் ஈடுபட்டிருக்கும் இந்த (இணைவைப்பு எனும்) மார்க்கம் அழியக் கூடியது அவர்கள் செய்பவை அனைத்தும் வீணானதே என்றும்,

"அல்லாஹ் அல்லாதவற்றையா உங்களுக்கு நான் தெய்வமாகத் தேடித் தருவேன்?! அவன் தான் அகிலத்தார்களை விட உங்களை மேன்மையாக்கி வைத்தான்" என்றும் மூஸா நபி கூறினார்கள்.

**(அல்குர்ஆன் 7:138,139,140)**

இந்த திருமறை வசனங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்ற அழுத்தந்திருத்தமான உண்மை என்ன வென்றால் இஸ்ரவேலர்கள் பலஹீனமான மனநிலை கொண்டவர்களாக, உறுதியற்றவர்களாக இருந்தனர். இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரவேலர்களை நேர்வழியை நோக்கி அழைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். சில அறிவிப்புக்களின் படி நபி மூஸா (அலை) அவர்கள் ஃபிர்அவ்னிடம் ஏகத்துவத்தை எடுத்துரைத்த பின்னர் அவனுடைய கொடுமையிலிருந்து இஸ்ரவேலர்களைக் காப்பாற்றி எகிப்திலிருந்து கடல் கடந்து அழைத்து வந்தது வரை இஸ்ரவேலர்களிடம் மூஸா நபி இருபத்துமூன்றாண்டு காலம் களப்பணியாற்றியிருக்கிறார்கள்.

சோதனைகள் நிறைந்த இருபத்து மூன்றாண்டு கால களப்பணியையும் கடல் பிளந்து வழி பிறந்து தப்பித்து வந்த அற்புத நிகழ்வையும் இஸ்ரவேலர்கள் மறந்துவிட்டனர். அதுவும் அல்லாஹ்வுக்கு இணையாக சிலைகளை வைத்து வணங்கிடும் ஒரு கும்பலைக் கண்டவுடன் அவர்கள் முந்தைய காலச் செயல்பாடுகள் அனைத்தையும் மறந்து விடுகின்றனர் என்றால் இஸ்ரவேலர்கள் எவ்வளவு மோசமான பலஹீனத்தில் இருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அது மட்டுமல்ல, இது போல் தங்களுக்கு வணங்கி வழிபட ஒரு சிலை வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள தாங்களே ஒரு சிலையை வடிவமைத்துக் கொண்டால் கூட அது பாரதூரமான ஒன்றாகத் தோன்றாது. ஆனால் பனீ இஸ்ராயீல்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? ஏகத்துவத்தை நிலை நாட்ட வந்த, இணை வைப்பு எனும் இழிவை இல்லாமலாக்கிட இறைவனால் அனுப்பப்பட்ட தூதராம் நபி மூஸா அவர்களிடமே எங்களுக்கு ஒரு சிலையை வடித்துத் தாருங்கள் என்று கேட்டார்கள். அப்படியானால் இவர்கள் எவ்வளவு ஆழமான அறியாமையில் வீழ்ந்து கிடந்தார்கள் என்பதைப் பாருங்கள்.

இப்படி ஆழமான அறியாமையிலும் கொள்கை உறுதியற்ற நிலையிலும் மூழ்கிக் கிடந்த இந்த சமுதாயத்தை அல்லாஹ்வின் ஆட்சியை பூமியில் நிலை நாட்டுதல் (கிலாஃபத்) என்ற மகத்தான லட்சியத்தை அடையும் சமுதாயமாக ஆக்க வேண்டுமானால் இவர்களை செம்மைப்படுத்தவும் தயார் படுத்தவும் தனியானதோர் இறைத் தூது (வேதம்) அவசியம் என்றாகிவிட்டது. அதை அல்லாஹ்வும் நாடி விட்டான். அதை தன் திருத்தூதர் மூஸா(அலை) அவர்களுக்கே வழங்கவேண்டும் என்றும் நாடினான். இறைவேதம் எனும் மகத்தான பேருளைப் பெறுவதற்காக இறைத்தூதர் மூஸா நபியை அல்லாஹ் தயார்படுத்தினான்.

மூஸா நபியவர்கள் முப்பது நாட்கள் நோன்பிருந்து தனிமையில் இறைவணக்கத்தில் திளைத்திட வேண்டும். இந்த நாட்களில் உலகத்தின் தொடர்புகள் ஏதுமின்றி அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திட வேண்டும் என்று அல்லாஹ் கூறியிருந்தான். பின்னர் இன்னும் பத்து நாட்கள் அதிகமாக அது போலவே வணக்கத்திலும் நோன்பு நோற்பதிலும் ஈடுபடும் படி அல்லாஹ் கட்டளையிட்டான். அதன்படியே மூஸா நபியவர்கள் நாற்பது நாட்களை நோன்பு வைத்து இறைவணக்கத்தில் திளைத்து நிறைவு செய்து விட்டு அல்லாஹ் கூறிய படி (சூயஸ் கால்வாயின் கிழக்குச் கரையையொட்டி அமைந்துள்ள சினாய் எனும் இடத்திலுள்ள) தூர் எனும் மலைக்கு வந்தார்கள்.

அங்கே தான் மூஸா நபியவர்களுக்கு அல்லாஹ் 'தவ்ராத்' எனும் வேதத்தை வழங்கினான்.

**(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)**

**நாற்பது இரவுகள்**

ஒரேயடியாக நாற்பது நாட்கள் நோன்பிருக்கச் சொன்னால் அது மலைப்பாகத் தெரியும் என்பதற்காக முதலில் முப்பது நாட்கள் பிறகு பத்து நாட்கள் என்று தனித்தனியாக அல்லாஹ் கூறியிருக்கலாம்.

முப்பது நாட்கள் நோன்பிருந்து விட்டு வாக்களிக்கப்பட்ட இடத்துக்கு வரும்படி அல்லாஹ் கூறினான். அதன் படி மூஸா நபியவர்கள் முப்பது நாட்களை நிறைவு செய்து விட்டு அந்த இடத்துக்கு செல்லும் முன் பல்துலக்கி விட்டுச் சென்றார்கள். இதனால் அல்லாஹ் இன்னும் பத்து நாட்கள் நோன்பிருந்து விட்டு (பல் துலக்காமல் வாய் வாடையுடனேயே) வரும்படி கூறிவிட்டான்.

**(நூல் : இப்னு கதீர்)**

“நோன்பாளியின் வாய் வாடை அல்லாஹ் விடம் கஸ்தூரியை விட நறுமணம் மிக்கது” என்பது அண்ணல் நபியின் கன்னல் மொழியாகும்.

**அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)**
**(நூல்: புஹாரி, முஸ்லிம்)**

இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் நோன்பு நோற்று வணக்க வழிபாட்டில் திளைத்த அந்த நாற்பது நாட்கள் துல்கஃதா மாதத்தின் முப்பது நாட்கள் துல்ஹஜ் மாதத்தில் முதல் பத்து நாட்கள் ஆகும் என்று பெரும்பான்மையான விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். இதே கருத்தையே முஜாஹித் (ரஹ்) மஸ்ரூக் (ரஹ்) இப்னு ஜுரைஜ்(ரஹ்) ஆகியோரும் கூறுகின்றனர்.

இதன்படி, (யவ்முன் நஹ்ர்) பெருநாள் அன்று தான் மூஸா நபியவர்கள் அல்லாஹ்விடம் பேசினார்கள் என்று தெரிகிறது. இதே நாளில் இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கும் அல்லாஹ் இஸ்லாத்தை பரிபூரணமாக்கித் தந்தான்.

“இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன். உங்கள் மீது என் அருள் கொடையை முழுமையாக (தந்து) விட்டேன். உங்களுக்காக இஸ்லாத்தையே நான் திருப்தியுடன் தந்துள்ளேன்” (5:3) என்ற வசனத்தையும் அல்லாஹ் அன்று தான் இறக்கியருளினான் என்று இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள்.

**(நூல்: இப்னுகதீர்)**

நாற்பது நாட்கள் என்பதைக் குறிக்க திருமறை வசனத்தில் 'அர்பஈன லய்லத்தன்' என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளது. இதன் பொருள் நாற்பது இரவுகள் என்பதாகும். எனினும் இதற்கு நாற்பது நாட்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும். இது கருத்து வேறு பாடுகளுக்கு இடமில்லாத ஏகோபித்த கருத்து ஆகும்.

**தெய்வமான காளை**

அல்லாஹ்வின் அருள் கொடையான தவ்ராத் வேதத்தைப் பெறுவதற்காக தூர்சினாய் சென்ற மூஸா நபியவர்கள் தம் சமுதாய மக்களிடம் வாக்களித்த படி முப்பது நாட்களைவிட அதிகமாக (மொத்தம் நாற்பது நாட்கள்) இருந்திட நேர்ந்தது பற்றி இம்மக்கள் அறிந்திருக்கவில்லை. மூஸா நபியவர்கள் ஊர் திரும்பிவரத் தாமதமானதற்குக் காரணம் பத்துநாட்கள் கூடுதலாக நோன்பிருக்கும் படி அல்லாஹ் கட்டளையிட்டதே.

இந்த இடைவெளியைப் பயன்படுத்தி இஸ்ரவேலர்களை வழிகெடுக்க ஒருவன் முயன்றான். அவன் பெயர் 'சாமிரீ' என்பதாகும். இவன் மாட்டை வணங்கும் கூட்டத்தைச் சார்ந்தவன். இஸ்ரவேலர்களுடன் சேர்ந்து ஏகத்துவ நம்பிக்கை கொண்டவன் என்று தன்னைக் கூறிக் கொண்டாலும் மாட்டு வணக்கத்தின் மீது இவனுக்கு விருப்பம் இருந்து வந்தது. இவன் அசல் பெயர் 'மூஸா பின் ழப்ர்' என்பதாகும் என்று ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி)

**அந்தச் சிலை உயிரற்ற அசைவற்ற வெறும் உடலாக மட்டுமே இருந்தது. இது பற்றிப் பேசுகின்ற 20:88 வசனத்தில் 'ஜஸதன்' என்ற பதம் இடம் பெற்றுள்ளது. இதன் பொருள் உயிரற்ற உடல் என்பதாகும்."**

கூறுகின்றார்கள். அவன் சாமிரா என்ற ஊரைச் சார்ந்தவன் என்பதால் சாமிரீ என்று அறியப் படுகிறான் என்று ஹழ்ரத் கத்தாதா (ரழி) கூறு கின்றார்கள்.

**(நூல்:இப்னு கதீர்)**

செங்கடலைக் கடந்து சென்ற போது இஸ்ரவேலர்களுக்கு உதவுவதற்காக வானவர் கோமான் ஜிப்ரீல் (அலை) அவர்கள் பூமிக்கு வந்தார்கள். அவர்களின் பாதம் அல்லது அவர்கள் (ஏறி அமர்ந்து வந்த) குதிரையின் பாதம் பட்ட இடங்களில் புல் முளைத்ததை சாமிரீ கண்டான். அந்த மண்ணுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றல் இருக்கலாம் என்று அவன் கணித்தான். எனவே அம்மண்ணை கொஞ்சம் எடுத்து வைத்திருந்தான். காண்க (20:96)

ஏற்கனவே மூஸா நபி திரும்பி வருவது தாமதமாகிக் கொண்டே போனதாகக் கவலை யடைந்து குழம்பித் தவித்துக் கொண்டிருந்த இஸ்ரவேலர்களை தன் மாட்டு வணக்க கொள்கையை நோக்கித் திருப்பிடத் திட்டமிட்டான் சாமிரீ.

"உங்களிடமுள்ள தங்க ஆபரணங்களை என்னிடம் தந்தால் நானே உங்களுக்கு நீங்கள் வணங்க வேண்டிய கடவுளைக் காட்டி விடுவேன்" என்று இஸ்ரவேலர்களிடம் சாமிரீ கூறினான். எகிப்தில் வாழ்ந்து கொண்டிருந்த போது அங்குள்ள உயர்குலத்தவர்களான கிப்தீகுல பெண்களிடம் இஸ்ரவேல் பெண்கள் இரவலாகப் பெற்றிருந்தவை தான் அந்த ஆபரணங்கள்.

சாமிரீயின் பேச்சில் மயங்கி அதை உண்மை என்று நம்பிய அம் மக்கள், நகைகளை ஒப்படைத் தனர். இந்த நகைகளை நாங்கள் பயன்படுத்தவது ஹராம் ஆகும். (ஏனெனில் இது எங்களின் நகை அல்ல) எனவே இதை நாங்கள் தருகின்றோம் என்று இஸ்ரவேலர்கள் கூறினர். சாமிரீயும் தன் பங்குக்கு சில நகைகளை ஒப்படைத்தான்.

அவன் அவற்றையெல்லாம் உருக்கி ஒரு காளைக் கன்றாக வடிவமைத்தான். ஏற்கனவே தான் எடுத்து வைத்திருந்த காலடி மண்ணை அச்சிலை மீது போட்டான். உடனே அது கத்தத் தொடங்கியது.

உடனே சாமிரீ இதே இதோ இது தான் உங்கள் தெய்வம். இதை மறந்துவிட்டு மூஸா எங்கோ திரிந்து கொண்டிருக்கிறார். எங்கே போனார் என்றே தெரியவில்லை என்று அவர்களிடம் கூறினான். இதனை நம்பிய இஸ்ரவலர்கள் காளைக் கன்றுச் சிலையை வணங்கிட ஆரம்பித்தனர். இவ்வாறு பெரும்பான்மையான விரிவுரையாளர்கள் கூறு கின்றனர்.

இதுபற்றி 'தாஹா' என்ற இருபதாவது அத்தியாயம் விரிவாகப் பேசுகின்றது. அல்-பகரா அத்தியாயத்துக்கு முன்னர் இறக்கியருளப்பட்ட தாஹா அத்தியாயத்தில் இது விரிவாகக் கூறப் பட்டுவிட்டதால் இந்த வரலாற்றை இங்கே (2:51)ல் சுருக்கமாகவே அல்லாஹ் சுட்டிக் காட்டுகிறான்.

**(நூல்: பீழிலாலில் குர்ஆன்)**

சாமிரீ என்பவன் தங்க ஆபரணங்களை உருக்கி வடிவமைத்த இந்த காளைக் கன்று மீது அந்த மண்ணைப் போட்டதும் ரத்தமும் சதையும் கொண்ட உயிருள்ள காளைக் கன்றாக அதுமாறி விட்டதா? அல்லது தங்கச் சிலையான அதனுள் காற்று நுழைந்து சப்தத்தை எழுப்பும் வகையில் அது வடிவமைக்கப் பட்டிருந்ததா? என்பதில் விரிவுரையாளர்களிடையே இரு கருத்து நிலவுகிறது.

சிலர் அது உயிருள்ள காளைக் கன்றாக மாறிவிட்டது என்கின்றனர். இன்னும் சிலர் அது உயிரற்ற சிலையாகவே இருந்து. ஆனால் காற்று அதனுள் நுழையும் போது மாடு சப்தமிடுவது போல் "ஹுவார்" என்று அது சப்தமிடும் என்கின்றனர்.

**(நூல்: இப்னு கதீர்)**

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்: "காளைக் கன்றின் சிலையில் சில ஓட்டைகளை அமைத்தான் சாமிரீ. அவற்றினுள் காற்று சுற்றிவரும் போது மாட்டின் சப்தம் போன்ற சப்தம் கேட்க ஆரம்பித்தது. தங்கச் சிலையொன்று சப்தமிடுவதைக் கண்ட இஸ்ரவேலர்கள் அதில் மனதைப் பறிகொடுத்து ஏக இறைவனாம் அல்லாஹ்வை மறந்து விட்டனர். அந்தச் சிலை உயிரற்ற அசைவற்ற வெறும் உடலாக மட்டுமே இருந்தது. இது பற்றிப் பேசுகின்ற 20:88

*வசனத்தில் 'ஜஸதன்' என்ற பதம் இடம் பெற்றுள்ளது. இதன் பொருள் உயிரற்ற உடல் என்பதாகும்."*

***(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)***

*பின்னர் மூஸா நபியவர்கள் சாமிரீயை எச்சரித்து சாபமிட்டு அனுப்பினார்கள். காளைக் கன்றுச் சிலையை நெருப்பிலிட்டுப் பொசுக்கி சாம்பலாக்கி அதை கடலில் கரைத்திடச் செய்தார்கள். இவ்வாறு அதை எரித்துச் சாம்ப லாக்கியதற்குக் காரணம் அந்தச் சிலையால் அதனை வடிவமைத்தவனையோ ஏன் தன்னைத் தானே கூட காப்பாற்றிக் கொள்ள இயலாது என்று வழிதவறிய இஸ்ரவேலர்களுக்கு உணர்த்திக் காட்டத்தான்.*

*"(மூஸா, சாமிரீயிடம்) நீ இங்கிருந்து போய்விடு, நிச்சயமாக இந்த உலக வாழ்க்கையில் நீ எவரைக் கண்டாலும் "என்னைத் தீண்டாதீர்" என்று சொல்லித் திரிவது தான் உனக்கு உள்ளது. (மறுமையில்) நிச்சயமாக உனக்கு வாக்களிக்கப்பட்ட தண்டனையும் உண்டு. அதை விட்டும் நீ தப்பவே முடியாது. இன்னும் நீ வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்த (போலி) தெய்வத்தைப் பார். நிச்சயமாக நாம் அதனை எரித்து சாம்பலாக்கி பின்னர் அதை கடலில் கரைப்போம் என்று கூறினார்."*

***(அல்குர்ஆன் 20:97)***

*இறைத்தூதர் மூஸா அவர்கள் புனிதமான வேதத்தைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று சென்றிருக்க அதன் முக்கியத் துவத்தையும் பெருமையையும் உணராத மூடர் களான இஸ்ரவேலர்கள் இணைவைப்பு எனும் கீழ்த்தரமான நடவடிக்கையில் ஈடுபட்டனர். மிகப் பெரும் அக்கிரமம் புரிந்த அவர்களின் இந்த வரலாற்றை பின்வரும் தலைமுறைக்கு அல்லாஹ் எடுத்துக் கூறுகிறான்.*

*இவ்வளவு பயங்கரமானதோர் அக்கிரமத்தை நீங்கள் செய்தபோதும் அல்லாஹ் உங்களை மன்னித்தான். இது அல்லாஹ்வின் மிகப் பெரும் அருளாகும், என்று சுட்டிக் காட்டுகிறான் அல்லாஹ். அவர்கள் மன்னிக்கப்பட்ட செய்தி அடுத்த வசனத்தில் இடம் பெறுகிறது.*

*இன்ஷாஅல்லாஹ்*

தொடரும்


## இறைவனின் அழகிய வழி காட்டுதல் அனைவருக்கும்!

மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்?

இந்த வினாவிற்கான முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை. அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பை பெற்றிட

கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்!

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**
52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி, அறை எண் : 7,
மண்ணடி, சென்னை - 600 001.

**குறிப்பு :**
**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**

## தமிழன் தொலைக்காட்சியில் தஃப்ஸீருல் குர் ஆன்

***வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி-யின் திருக்குர் ஆன்விரிவுரை தமிழன் தொலைக்காட்சி யில் ஒளிபரப்பாகிறது.***

***வாரந் தோறும் செவ்வாய்க் கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப் பாகும் இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது. காணத் தவறாதீர்கள்!***

**இது வரை ஒளிபரப்பான உரைகள் குறுந் தகடுகளாகவும் (DVD) கிடைக்கும்**

தொடர்புகளுக்கு : **காயல் தர்வேஷ்**
**9841898044**

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? -3

# ரோம் அழிந்து கொண்டிருந்தது


### பேரறிஞர் அபுல்ஹசன் அலி நத்வி


### மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி


கிழக்கத்திய ரோம ராஜ்யத்தில் சமூகம் சீரழிவின் ஆழத்தில் கிடந்தது. மக்கள் பெரும் துன்பத்தில் உழன்றனர். அதை விடக் கடுமையாக இருந்தன அவர்கள் மீது விதிக்கப்பட்ட சுங்க வரிகளும் கலால் வரிகளும்.

இதனால் அரசை மக்கள் பழித்தனர். திட்டித் தீர்த்தனர். அந்நிய அரசு எவ்வளவோ மேல் என்று கருதினர்.

பொதுமக்கள் மீது தாங்கவொண்ணா வரி களைச் சுமத்தி அவற்றை கட்ட முடியாதவர் களின் சொத்துக்களை அரசு பறிமுதல் செய்ததால் சகஜ வாழ்வு சீர் குலைந்தது. மக்கள் புரட்சியும் கொந்தளிப்பும் வெடித்துக் கிளம்பிற்று.





கி.பி. 532 ஆம் ஆண்டில் நடந்த புரட்சியில் தலைநகரில் மட்டும் சுமார் முப்பதாயிரம் மக்கள் கொலை செய்யப்பட்டனர்.

(Source : Encylopedia Britanica, see Justin)

பொருளாதாரத்தில் வளம் பெற வேண்டும் என்ற வெறி மக்களிடம் இருந்த அதே அளவுக்கு ஊதாரித்தனமும் இருந்தது. அனாவசியமான வீண் செலவுகளில் ஈடுபட்டு பள்ளத்தாக்கில் வீழ்ந்தனர்.

அக்கால மக்களின் ஒரே லட்சியம் என்ன வென்றால், எந்த வழியிலாவது பொருளீட்ட வேண் டும். பின்னர் அதனை ஆசாபாசங்கள், கேளிக்கைகள், கூத்துக்கள் மனோ இச்சைகள் ஆகிய வழியில் செலவு செய்து தீர்த்திட வேண்டும் என்பதே.

அங்கே நற்குணங்களின் அஸ்திவாரங்கள் உறுதி குலைந்து உருகிப் போயிருந்தன. அறநெறி களின் தூண்கள் நொறுங்கிச் சரிந்திருந்தன. மனம் போன போக்கில் தம் உடல் இச்சைகளைத் தணித்துக் கொள்ளும் தீய நோக்கத்தில் இல்லற வாழ்வை விட பிரம்மச்சாரிய வாழ்வே மேலானது என்று மக்கள் நம்பத் தொடங் கினர். (Source: Edwerd Gibbon: the history of decline and fall of Roman Emprie V,3 P.327)

# உண்மையைச் சொன்னால், ஏழாம் நூற்றாண்டில் எகிப்தில் வாழ்ந்த மக்களுக்கு ஆன்மீகம் அரசியலை விட ஆபத்தானதாக இருந்தது!

அறிஞர் சேல் கூறிடுவது போல, "நீதி கடைச்சரக்கானது. அது வழங்கப்பட வில்லை. வாங்கப் பட்டது. விற்கப் பட்டது. லஞ்சமும் மோசடியும் மக்களிடத்தில் கூச்ச மின்றி துணிச்சலாக நடந்து கொண்டிருந்தது."

(Source: Sale's Translation: P.72- 1986)

"(ரோமப் பேரரசு எனும்) பைசாந்தியப் பேரரசு ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் சரிவு, வீழ்ச்சி ஆகியவற்றின் கடைசி விளிம்பைத் தொட்டிருந்தது" என்கிறார் டாக்டர் கிப்பன்.

(Source: The History of the decline and fall of the Roman Emprie:v.v.p.32)

ஒருகாலத்தில் அந்த பைசாந்தியப் பேரரசு நெடிதுயர்ந்து நாலா பக்கங்களிலும் கிளை பரப்பி எழிலுடன் திகழும் மரம் போல் வீற்றிருந்தது. அதன் பரந்த நிழலில் அக்கால சமுதாயங்கள் இளைப்பாறிய துண்டு. ஆனால் ஆறாம் நூற்றாண்டில் அதன் இலைகள் உதிர்ந்து கிளைகள் ஒடிந்து வெறும் தண்டு மட்டுமே எஞ்சி இருந்தது. ஒவ்வொரு நாளும் அது வீழ்ச்சியடைந்து கொண்டே போனது

**(ஆதாரம்: அதே நூல்)**

சரித்திர ஆசிரியர்கள் பலர் இணைந்து உருவாக்கிய "உலக சரித்திரம்" எனும் நூல் கூறுகிறது; அழிவும் நாசமும் அதிவிரைவாகப் பரவும் நகரங்களின் மாண்பையும் வனப்பையும் ஒருபோதும் மீட்டெடுக்கவே முடியாது என்பதற்கு சரியான சான்றாக விளங்கிற்று அன்றைய பைசாந்திய ரோமப் பேரரசு.

வரம்பற்ற வரிவிதிப்புக்கள், லஞ்ச லாவண்யங்கள், வியாபார வீழ்ச்சி, வேளாண் மையைப் புறக்கணித்தல், நகர்புறப் பராமரிப்பில் அக்கறையின்மை ஆகியவற்றின் விளைவாக பைசாந்திய பேரரசு ஆறாம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது.

(Source : Historians'Hisotry of the World V.VII p.175)

**ரோமப் பேரரசின் காலத்தில் எகிப்தின் பொருளாதாரமும் மதமும்**

வற்றாத ஜீவநதியாம் நைல் நதியை தன்னகத்தே கொண்ட, இயற்கை வளம் சூழ்ந்த எகிப்து மதரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பரிதாபத்துக்குரிய நிலையிலிருந்தது.

கிறிஸ்தவத்தை ஏற்றிருந்த எகிப்து இயேசு கிருஸ்துவின் இயல்பு, அவரின் இயல்பைத் தாண்டிய தத்துவம், கடவுள் தத்துவம், பற்றிய விவாதங்கள் சச்சரவுகள் ஆகியவற்றைத் தவிர வேறெந்த பலனையும் கிறிஸ்துவத்திலிருந்து பெற்றிடவில்லை. ஏழாம் நூற்றாண்டில் இந்த சச்சரவுகள் மிக மோசமாகவே வெளிப்போந்தன. இது எகிப்து மக்களின் அறிவுத் திறனை முடக்கியது. செயல் திறனைக் குன்றிப் போக வைத்தது.

ரோம ராஜ்யத்தின் கீழிருந்த எகிப்து, மதரீதியாக இழிவான துயரத்தையும் அரசியல் ரீதியாகக் கொடுமைகளையும் தவிர வேறெதையும் பெற்றிடவில்லை.

கிறிஸ்தவ திருச்சபைகள் ஐரோப்பாவில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த காலங்களில் மக்களை மத ரீதியிலான கண்காணிப்புக்கு உட்படுத்தி வைத்திருந்த போது ஐரோப்பா அடைந்த சிரமங்களைப் போன்ற தொரு சிரமத்தை பத்து ஆண்டுகளாக எகிப்து அடைந்து கொண்டிருந்தது.

இதனால் எகிப்தியர்கள் வாழ்க்கையின் லட்சியங்கள் அனைத்தையும் இழந்தனர். ஆன்மிகம் ஆன்மா ஆகியவற்றின் மாண்புயுர்ந்த முக்கியத்துவங் களில் எதையும் அவர்கள் உணர்ந்திடவேயில்லை.

ரோமப் பேரரசின் கீழ் எகிப்து அடிமைப் பட்டுக் கிடந்ததால் அரசியல் சுதந்திரத்தையும் அது அனுபவிக்கவில்லை. கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தால் ஆன்மிகச் சுதந்திரத்தையோ அறிவுச் சுதந்திரத்தையோ கூட அனுபவித்திட வில்லை.

டாக்டர் ஆல்பர்ட் ஜி. பட்லர் அவர்கள் தனது 'அரேபிய நாகரிகம்' எனும் நூலில் கூறுகிறார்:

"கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளும்படி எகிப்து நிர்பந்திக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்தவத் தால் எகிப்து எழுச்சி பெறவில்லை. வீழ்ச்சியுற்றது. அரபுக்கள் எகிப்தை வென்றதால் அது வீழ்ச்சி யிலிருந்து மீண்டது."

**அற்ப விஷயங்களுக்காகவும் ஒரே மதத்தினடிப் படையில் எழும் பிளவுகளுக்காகவும் புரிந்து கொள்வதற்கே சிரமமான இயல்புக்கு அப்பாலுள்ள தத்துவங்களுக்காகவும் தம் வாழ்க்கையையே தொலைத்திடத் துணிந்தனர் மக்கள்**

அக்காலத்தில் எகிப்து உள்மார்க்க மோதல் களின் களமாகவே திகழ்ந்தது. ஏராளமாகக் கிளம்பிய கிறிஸ்தவத்தின் உள் கொள்கை மோதலால் எகிப்து துயருற்று துர்பாக்கியமடைந்தது. உள் மார்க்க மோதல்களில் மூழ்கி மக்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். திட்டிக் கொண்டனர்.

"ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளால் பலவீனமடைந்திருந்த மக்கள் தமது ரோமானியத் தலைவர்களை வஞ்சம் தீர்த்திடத் துடித்தனர். அக்கிரமக்கார ஆட்சியாளர்களான பைசாந்திய மன்னர்களின் கொடும்பிடியிலிருந்து விடுதலை பெற்றிடும் நேரத்துக்காகக் காத்திருந்தனர்."

***(ஆதாரம்: அரேபிய நாகரிகம். அத்தியாயம் நான்கு "எகிப்தில் அரபுக்கள்": பக்கம் 336)***

டாக்டர் ஆல்பர்ட் ஜி.பட்லர் அவர்கள் தனது "அரபுக்களின் எகிப்து வெற்றி" எனும் நூலில் கூறுகிறார்.

உண்மையைச் சொன்னால், ஏழாம் நூற்றாண்டில் எகிப்தில் வாழ்ந்த மக்களுக்கு ஆன்மீகம் அரசியலை விட ஆபத்தானதாக இருந்தது. அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்று வதற்காக அரசியல் குழுக்கள் கட்சிகள் மோதிக் கொள்ள வில்லை. மாறாக மத நம்பிக்கைகள் வழிபாடுகள் ஆகியவற்றைச் சுற்றியே எல்லா மோதல்களும் ஏற்பட்டன. அறப்பணிகளைச் செய்யத் தூண்டும் கருவியாக மதத்தை மக்கள் பார்க்கவில்லை. குறிப்பிட்ட அடிப்படைகளில் அமையும் நம்பிக்கை கள் மட்டும் தான் மதம் என்று கருதினர்.

மத நம்பிக்கைகளில் எற்படும் அதிநுட்பமான மெல்லிய வேறுபாடு களால் விளையும் கற்பனைத் தோற் றங்கள் தாம் மக்கள் தமக்கிடையே முரட்டுத் தனமாக முரண்பட்டுக் கொள்வதற்கும் விவாதித்துக் கொள் வதற்கும் அடிப்படைக் காரணங்க ளாக அமைந்திருந்தன.

அற்ப விஷயங்களுக்காகவும் ஒரே மதத்தினடிப் படையில் எழும் பிளவுகளுக்காகவும் புரிந்து கொள் வதற்கே சிரமமான இயல்புக்கு அப்பாலுள்ள தத்துவங்களுக் காகவும் தம் வாழ்க்கையையே தொலைத் திடத் துணிந்தனர் மக்கள்

***(நூல்: ஃபத் ஹுஉல் அரபி லிமிஸ்ர். பக்கம்- 49)***

தாராளமாகப் பால் தந்திடும் ஓர் ஆட்டைப் பிடித்து அதன் மடுவை நன்றாக உரிஞ்சி பால் முழுவதையும் குடித்தது போக இரத்தத்தையும் உரிஞ்சிட முனைவது போல் ரோமர்கள் எகிப்தை உறிஞ்சிக் கொண்டிருந்தனர்.

இதோ ஆல்பர்ட் கூறுகிறார்; "ரோமர்கள் எகிப்து மக்களிடமிருந்து தலைக்கட்டுவரியை வசூலித்தனர். இஃதன்றி ஏராளமான வரிகளை விதவிதமாக விதித்தனர். ரோமர்கள் எகிப்து மக்கள் மீது விதித்த வரிகள் மக்களின் சக்திக்கு மீறியவை நடைமுறையிலிருந்த நீதி நெறிகளுக்கு எதிரானவை என்பதில் எந்த ஐயமுமில்லை.

***(ஆதாரம் : அதே நூல்).***

பல்வேறு வரலாற்று ஆசிரியர் களும் இணைந்து உருவாக்கிய உலக வரலாறு எனும் நூல் கூறுகிறது. பைசாந்தியப் பேரரசின் கருவூலத்தை நிரப்பிட எகிப்தின் விளைச்சல்களும் மகசூல்களும் பயன்பட்டன. எந்த அரசியல் வலிமையையும் வேறெந்த பலனையும் பைசாந்தியப் பேரரசிட மிருந்து எகிப்து பெறவில்லை என்ற போதிலும் கூட வரிகள் வழங்கியதுமட்டுமின்றி தன் விளைநிலங் களுக்குகூட வாடகை தந்து பைசாந்தியப் பேரரசின் கருவூலத்துக்கு வளம் சேர்த்துக் கொண்டிருந்தது".

இந்தக் காலக் கட்டத்தில் எகிப்தின் வளம் வறட்சியையும் வீழ்ச்சியையும் நோக்கிப் போய் கொண்டிருந்தது.

(Source : Historians' History of the world V. VII P. 173)

இவ்வாறாக உள் மார்க்கச் சண்டையும் அரசியல் ஆக்கிரமிப்பும் பொருளாதாரச் சீர்குலைவும் ஒன்றாகத் திரண்டு எகிப்தைச் சீரழித்தது. சீராகப் போய்க் கொண்டிருந்த மக்களின் வாழ்வைக் கலங்கடித்தது. அவர்களின் கீர்த்தியைக் குலைத்தது.

**எத்தியோப்பியா**

எகிப்தைப் போலவே அதனுடைய அன்டை நாடான எத்தியோப்பியாவும் கிறிஸ்தவத்தின் மனோபீசிய்யா எனும் பிரிவைத் தழுவியிருந்தது. காட்டு மிராண்டித்தனத்தில் சிலவற்றை உள்வாங்கிக் கொண்டு வகை தொகையற்று சிலை வணக்கத்திலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தது எத்தியோப்பியா.

சிலை வணக்கத்தின் வளர்ச்சியடைந்த ஒரு பகுதி தான் ஏகத்துவம் என்றாகிவிட்டது அவர்களின் நிலை. கிறிஸ்தவக் கோட்பாட்டின் புழக்கத்திலுள்ள சொற்களையும் அதன் ஞான ஆடைகளையும் கழற்றி சிலை வணக்கத்தின் மீது போர்த்திவிட்டனர் எத்தியோப்பிய மக்கள்.

மதத்தின் மீது ஆத்மார்த்தமான ஈடுபாடும் அவர்களுக்கில்லை. உலக சுகங்களை அனுபவிப் பதிலும் அவர்களுக்கு விருப்பமில்லை.

நீகிய்யா எனும் தலைநகர்வாழ் மக்களுக்கு மத ரீதியான செயல்பாடுகளில் முடிவெடுக்கும் சுதந்திரம் இருக்கவில்லை. இஸ்கந்தர் நகரத்திலிருந்து வெளி வரும் மதக்கட்டளைகளையே ஏற்றுச் செயல்பட்டு வந்தனர்.

**வட மேற்கு ஐரோப்பியச் சமூகங்கள்**

வடக்கிலும் மேற்கிலும் மெல்ல மெல்ல ஊடுருவிய ஐரோப்பிய சமூகம் மனிதனை முடக்கும் அறியாமை எங்கும் பரவிய எழுத்தறிவின்மை, அழிவைத்தரும் போர்கள் ஆகியவற்றால் தத்தளித்துக் கொண்டிருந்தது.

அறிவோ அழகிய பண்பாடுகளோ ஐரோப் பாவை எட்டிக் கூடப் பார்க்காத காலமது. நாக ரிகத்தையும் அறிவையும் ஐரோப்பாவுக்கு கற்றுத் தந்த அந்துலுஸ் எனப்படும் இஸ்லாமிய ஸ்பெயினும் அப்போது தோன்றியிருக்கவில்லை.

உலகின் இதரப் பகுதிகளில் நடக்கும் எந்தச் சம்பவங்களோடும் எந்தத் தொடர்புமில்லாமல் ஐரோப்பா இருந்தது. மிக்குயர்ந்த மனித நாகரிகத் துடன் எவ்வித ஒட்டும் உறவுமின்றி தூரத்தில் விலகி நின்றிருந்தது.

தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தைப் பற்றி ஐரோப்பா அறிந்திருக்கவில்லை. ஐரோப்பாவைப் பற்றி அன்றைய உலகமும் பெரிதாக அறிந்திருக்க வில்லை.

வரலாற்றின் போக்கையே மாற்றிடும் அளவுக்கு மாபெரும் நிகழ்வுகள் (போர்கள், ஆட்சி மாற்றங்கள்) எதுவும் ஐரோப்பாவில் சிறிதளவு பாதிப்பைக் கூட ஏற்படுத்தவில்லை. உருவ வழிபாடும் கிறிஸ்தவமும் கலந்ததோர் வழிமுறையே ஐரோப்பியர்களின் மதம்.

அவர்கள் அரசியலிலும் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. மதத்திலும் கொள்கைப் பிடிப்புள்ள வர்களாக இருக்கவில்லை.

அறிஞர் எஹச்.ஜி. வேல்ஸ் கூறுகிறார்: ஒழுங்கு, ஓர்மை ஆகியவற்றுக்கான எந்த அடையாளம் அக்காலக் கட்டத்தில் மேற்கு ஐரோப்பாவில் இல்லவே இல்லை.

(Source : H.G. Wells: Historians' History of the world P. 170)

ராபர்ட் பிரிஃப்பவுல்ட் எனும் அறிஞர் கூறுகிறார்: கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையுள்ள காலங்களில் ஐரோப் பாவைக் கடும் இருள் கவ்வியிருந்தது. நாளுக்கு நாள் இருளின் கருமையும் கடுமையும் கடினமாக்கிக் கொண்டே போனது.

பண்டைய கால காட்டுமிராண்டித்தனங்களை விடவும் இழிவானதாகவும் பயங்கரமானதாகவும் இருந்தன இந்தக் காலக்கட்டத்தின் காட்டுமிராண்டி த்தனங்கள்.

இதற்கு காரணம் நாகரிகமென்பது அங்கே சிதைந்து சின்னாபின்னமாகியிருந்தது. செத்துப் போன பிண்டம் போலிருந்தது என்பதே.

நாகரிகத்தின் மைல்கற்கள் மறைந்து போயிருந்தன. அழிந்து போய்விட்டன என்று கூடக் கூறலாம்.

இன்ஷா அல்லாஹ்

**- தொடரும்**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**




# கருத்து வேறுபாடுள்ள பிரச்சனைகளில் நீக்குப் போக்குடன் நடக்க வேண்டும்

கருத்து ஒருமித்த விஷயங்களில் பரஸ்பர ஒத்துழைப்பு அவசியம் என்பது போல கருத்து வேறுபாடுள்ள பிரச்சனைகளில் பெருந்தன்மையுடன் நடந்த கொள்வது அதை விட மிக அவசியம். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல் இவ்விரண்டும் அமைந்துள்ளன. இரு பகுதிகளின்றி அது முழுமை பெறாது.

தஃப்சீர் அல் மனாரை எழுதியவரும் ‘அல்மனார்’ என்ற இதழின் ஆசிரியருமான பேரறிஞர் முஹம்மது ரஷீத் ரிழா (ரஹ்) அவர்கள் ஒரு சட்ட விதியைத் தந்துள்ளார்.

“கருத்தொருமித்துள்ள விஷயங்களில் பரஸ்பரம் ஒத்துழைப்போம். கருத்து வேறுபாடுள்ள பிரச்சனைகளில் ஒருவர் மற்றவரின் ஆராய்ச்சியை மதிப்போம்” என்பதுதான் அந்தச் சட்ட விதி.

இமாம் ஷஹீத் ஹசன் அல்பன்னா (ரஹ்) அவர்கள் தம் செயலிலும் சிந்தனையிலும் இதை முழுமையாகப் பேணி வந்தார்கள். இதை விட்டு விலகிட அவர்கள் விரும்பியதேயில்லை. இதைத் தம் வாழ்வின் மகுடமாகவே அமைத்துக் கொண்டார்கள் என்று அவர்களின் மாணாக்கர்கள் பலரும் அவர்களின் இயக்கவாதிகள் பலரும் கூறியுள்ளனர்.

தஸாமுஹ் - நீக்குப் போக்குடன் நடந்து கொள்ள வேண்டும் என்றால், கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சனைகளில் ஒரு கருத்தையும் ஒரு இமாமையும் ஒரு மத்ஹபையும் மட்டுமே பிடிவாதமாக அப்பிப் பிடித்துக் கொண்டிருக்காமல் எதிர் கருத்தையும் ஏறிட்டு பார்க்க வேண்டும்.

கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சனைகளில் ஒவ்வொருவரும் அவரவர் தேர்ந்தெடுத்துள்ள

கருத்துக்கு அவரிடம் நியாயமான காரணம் இருக்கிறது என்று கருதுவதுதான் தஸாமுஹ் - நீக்குப் போக்கு என்பதன் பொருள் என்கிறார் பேரறிஞர் ரஷீத் ரிழா (ரஹ்). இந்தக் கொடியை நாம்உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

காலத்தின் கட்டாயத் தேவையான அந்த நீக்குப் போக்கை இவ்வாறு வகைப்படுத்தலாம்.

**மற்றவரின் கருத்தை மதிக்க வேண்டும்**

கருத்து வேறுபாட்டின் கூர்மையை மழுங் கடித்து பிளவின் இடைவெளியைக் குறைப்பதற்கு மாற்றுக் கருத்துடையவரின் சிந்தனையை மதிப்பது மிக அவசியமான ஒன்று. பிறரின் ஆராய்ச்சிக்கு கண்ணியம் அளிப்பதும் ஆராய்ச்சிக்குட்பட்ட விஷயங்களில் அவர்களுக்கும் முக்கியத்துவம் தருவது அவசியம்.

எவை உறுதியான (கத்இய்யாத்) சட்டங் களில்லையோ அவை ஆராய்ச்சிக்குட்பட்டவைதான் ஆராய்ச்சிக்குட்பட்டவற்றில் கருத்து வேறுபாடு வருவதும் இயல்பானதே. இந்த அடிப்படையைப் புரிந்துக் கொண்டால் அந்த நீக்கு போக்கு தானாக வந்துவிடும்.

குர்ஆன்- ஹதீஸ் மூலம் தெளிவாகக் கூறப்பட்டு விட்ட 'கத்இய்யாத்' சட்டங்கள் இஜ்திஹாத் செய்ய முடியாதவை. இந்தச் சமுதாயத்தின் சொல், செயல், சிந்தனை அனைத்தும் அந்தச் சட்டங்களின்படிதான் அமைந்திட வேண்டும் என பலமுறை வலியுறுத்தியுள் ளோம். அந்த உறுதி வாய்ந்த 'கத்இய்யாத்' சட்டங் களை சர்ச்சைக்குரியதாகவும் சந்தேகத்துக்கிடமான தாகவும் ழன்னிய்யாத் எனப்படும் உறுதியற்ற சட்டங்களாகவும் மாற்றும் முயற்சியை நாம் சகித்துக் கொள்ளவே முடியாது.

ஆனால் செயல்பாட்டுக் களத்தில் கத்இய்யாத் சட்டங்கள் குறைவாகவே உள்ளன. ழன்னிய்யாத் என்ற ஆராய்ச்சிக்குரிய சட்டங்கள்தான் நம் எதார்த்த வாழ்வோடு அதிகமான தொடர்புடையதாக யிருக்கிறது.

எனினும் கருத்து வேறுபாடு என்பது ஓர் இறையருள். அல்லாஹ்வின் தயாளம். அல்லாஹ் விரும்பியிருந்தால் எல்லாச் சட்டங்களையும் குர்ஆன்- ஹதீஸ் மூலம் வெளிப்படையாகத் தெளிவுப்படுத்தி ஒரேயொரு வழியை மட்டுமே பின்பற்றும்படி செய்திருப்பான். இஜ்திஹாதின் வாசலை இழுத்துப் பூட்டியிருப்பான்.

பேரன்பாளன் அல்லாஹ் அப்படிச் செய்ய வில்லை. நமக்கு அருள் புரிந்துள்ளான். அதனால் விசாலமானதொரு களத்தில் நம்மை வைத்துள்ளான். சில பிரச்சனைகளைப் பற்றி தெளிவாக எதையும் கூறவில்லை. அவன் மறந்து விடவில்லை. அவன் மறப்பவனல்லன். அதன் மூலம் நமக்கு பேரருள் புரிந்துள்ளான்.

எவற்றை அவன் வெளிப்படையாக கூறி யுள்ளானோ அவற்றுள் பெரும்பாலானவை பல சிந்தனைகளையும் பல விளக்கங்களையும் ஆராய்ச்சி களையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள் ளன. பலதரப்பட்ட மக்களும் அதைப் பின்பற்றிட வாய்ப்பளிக்கிறது.

சிலர் அச்சட்டத்தின் வாசகங்களின் வெளிப் படையான கருத்தையும் சிலர் அதன் ஆழத்தையும் அந்தரங்கத்தையும் பார்க்கின்றனர். சிலர் அதை கடுமையாகக் கருதி தம்மைச் சிரமப்படுத்திக் கொள்கின்றனர். சிலர் அதை இலகுவானதாகக் கருதி சலுகை எடுத்துக் கொள்கின்றனர்.

'நஸ்சு'எனப்படும் குர்ஆன்-ஹதீஸின் வாசகங் களைப் புரிந்து கொள்ளவும் நஸ்சில் தெளிவாக இல்லாதவற்றை ஆராய்ச்சி செய்யவும் எனக்கு உரிமை இருக்கிறது என்றால் அதே உரிமையை மற்றவருக்கும் நான் வழங்கிட வேண்டும். இல்லையென்றால் எனக்கு மட்டுமே அந்த உரிமை உண்டு. வேறு யாருக்கும் இல்லை என்பதற்கு என்ன காரணம் என்று கூற வேண்டும்.

நானல்லாத மற்றவரும் இஜ்திஹாத் செய்வார் எனும் போது பல சிந்தனைகளும் பல முடிவுகளும் வருவது இயல்பே. அப்படி வரவில்லையென்றால் அது இஜ்திஹாத் அல்ல.

அவ்வாறு வருகின்ற ஒன்றுக்கும் மேற்பட்ட முடிவுகளில் ஏதேனும் ஒன்று மட்டும் சரியானது. ஆனால் அது எதுவென்று தெரியவில்லை என்றிருந் தாலும் கூட.

இப்பிரச்சனையில் அல்லாஹ்வின் தீர்ப்பு ஒன்றுதான். ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் மட்டுமே சரியான முடிவுக்கு வந்துள்ளார். மற்றவர்கள் தவறிழைத்துள்ளனர். அந்த ஒருவர் யாரென்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றிருந்தாலும் கூட.

யாருமே பாவியாகிவிட மாட்டார்கள் என்பது மட்டுமல்ல. தவறான முடிவுக்கு வந்தவர் கூட தனது இஜ்திஹாதுக்காக ஒரு கூலியைப் பெறுவார் என்று ஸஹீஹான ஹதீஸ்கள் கூறுகின்றன.

சரியான முடிவை எட்டியதற்கான கூலியை அவர் பெற முடியாமல் போனாலும் இஜ்திஹாதுக் குரிய கூலியை இழக்கவில்லை.

பேரறிஞர் இமாம் ஷாஃபீஈ (ரஹ்) கூறினார்கள்: "என் சிந்தனை சரியானதே. ஆனால் அது தவறாக இருந்திடவும் வாய்ப்புண்டு மற்றவர்களின் சிந்தனை தவறானதே எனினும் அவை சரியாக இருந்திடவும் வாய்ப்புண்டு."

மாபெரும் முஜ்தஹித் ஒருவர் பிரிவுச் சட்டங்கள் மீதான தனது ஆராய்ச்சியின் முடிவை எப்படி முன் வைக்கிறார் பார்த்தீர்களா? இது இமாம்ஷாஃபீஈ (ரஹ்) வின் விசாலமான ஞானத் தாலும் தேர்ந்த அறிவாலும் விளைந்த நீதியானதொரு சொல். இது போன்ற சிந்தனைகளால் இரு தரப்புக் கும் மத்தியிலுள்ள இடைவெளியைக் குறைக்க முடியும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தை இங்கே நான் எடுத்துரைக்க விரும்புகிறேன். ஆராய்ச்சிக்குட் பட்ட பிரச்னைகளில் எடுக்கப்படும் எல்லா முடிவு களுமே சரியானதாக இருக்க முடியும் - தகுதியான அறிஞர்களிடமிருந்து அந்த முடிவுகள் வெளியாகி யிருந்தால்.

அல்லாஹ்வின்முடிவும் அந்தப் பிரச்சனையில் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்க முடியும். எனவே, ஒவ்வொரு முஜ்தஹிதும் செய்கின்ற எல்லா இஜ்திஹாதும் சரியானதாக இருக்க முடியும். இதைப் பற்றி இப்போது பார்க்கவே போகிறோம்.

**சரியான முடிவு ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கலாம்**

ஒரு பிரச்சனையில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் வெளியானால் அவை அனைத்துமே சரியானவையாக இருந்திட வாய்ப் புண்டு என்று நம்புவது கருத்து வேறுபாட்டிற்குரிய பிரச்சனைகளில் நீக்குப் போக்குடனிருப்பதற்கும் பிறரின் ஆராய்ச்சியை மதிப்பதற்கும் உதவியாக அமையும்.

விடை கண்டாக வேண்டும் முக்கியக் கேள்வி யொன்று இங்கே எழுகின்றது.

**கேள்வி : ஒரு விவகாரத்தில் கூறப்படும் பல முடிவுகளும் சரியானதாக இருக்க முடியுமா? அல்லது எப்போதும் என்றென்றும் உண்மையான முடிவு ஒன்றே ஒன்றாக மட்டும்தான் இருக்க முடியுமா? எந்தச் சூழ்நிலையிலும் ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானதாக இருக்க வாய்ப்பில்லையா?**

**பதில் : பிரிவுச் சட்டங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட முடிவுகள் அனைத்துமே சரியானதாக இருக்க வாய்ப்புண்டு. ஒவ்வொரு பிரச்சனையிலும் ஒரு முஜ்தஹித் என்ன முடிவெடுக்கி றாரோ அதுவே சரியான முடிவு. பல முஜ்தஹித்கள் அந்த ஆராய்ச்சியை மேற்கொண்டால் அவர்கள் அனை வரின் முடிவுகளுமே சரியானதுதான். அவை ஒன்றுக்கொன்று நேர்முர ணான முடிவுகளாக இருந்தாலும் சரிதான்.**

ஒருவர் இதை ஹலால் என்றும் மற்றொருவர் ஹராம் என்றும் ஒருவர் அதை வாஜிப் என்றும் மற்றொருவர் அல்ல என்றும் கூறுமளவுக்கு அவற்றுகிடையே முரண்பாடு இருந்தாலும் சரியே என்கின்றனர். 'உசூலிய்யூன்கள்' எனப்படும் சட்ட அடிப்படை விதிகள் துறை அறிஞர்களில் சிலர்.

இவர்கள் இத்துறையில் நேர்மறை எண்ணம் கொண்டவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர் களுக்கு சார்பான ஆதாரங்களும் சான்றுகளும் உள்ளன. இவர்களுக்கு எதிரான கருத்துடையவர் களுக்கும் சான்றுகள் உள்ளன. அதற்கு மறுப்பு களையும் முன்வைக்கின்றனர்.

அடிப்படையான கொள்கையல்லாத துணைக் கொள்கை சார்ந்த பிரச்சனைகளில் எவற்றுக்கு குர்ஆன்- ஹதீஸில் வெளிப்படையான ஆதாரம் இல்லையோ அவற்றில் இந்தச் சமுதாயத்தின் சில பிரிவினர் மாற்றுக் கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். இப்படி நிறைய விஷயங்கள் உள்ளன. உதாரணமாக, அடியார்கள் செய்யும் நன்மை, தீமை அனைத் தையும் அல்லாஹ்தான் செய்ய வைக்கிறான் என்று சிலரும் அடியான் பாவங்கள் செய்வதை அல்லாஹ்வுடன் தொடர்பு படுத்தக் கூடாது அதை அடியானே விரும்பித் தேர்ந்தெடுத்துச் செய்கிறான் என்று சிலரும் கூறுவதைப் போல.

இது போன்ற ஏராளமான கருத்து வேறுபாடுகள் முற்கால மூத்த அறிஞர்களிடம்

காணப்படுகின்றன. இது போன்ற விஷயங்களில் மாறுபட்ட கருத்துடையோர் பற்றி அறிஞர் உபைதுல்லாஹ் பின்ஹசனுல் அம்பரீ (ரஹ்) கூறுகிறார். "அடியானின் எல்லாச் செயல்களையும் அல்லாஹ்வே செய்ய வைக்கிறான் என்று கூறுவோர் அல்லாஹ்வைப் பெருமைப் படுத்துகின்றனர். தீய செயல்களுக்கு அடியானே பொறுப்பு என்று கூறுவோர் அல்லாஹ்வுடன் தீமையை இணைப்பதைத் தவிர்க்கின்றனர்." (இரு அணியின் அணுகுமுறையும் சரியானதே என்பது கருத்து.)

பன்னெடுங்காலமாகவே மனிதன் விவாதித்துக் கொண்டிருக்கும் நுட்பமான சட்டப் பிரச்சனை களிலும் கூட இது (ஒன்றுக்கும் மேற்பட்டவை சரியான முடிவாக இருப்பது) அங்கீகரிக்கப் பட்டுள்ளது. அல்லாஹ் விரும்பியபடி ஆராய்ச்சியை மேற்கொண்ட அனைவருக்கும் கூலியுண்டு- ஒருவரின் ஆராய்ச்சி முடிவு தவறாக இருப்பினும் சரியே!

இதே கருத்தை இப்னு தைமிய்யா (ரஹ்), இப்னுல் கய்யிம் (ரஹ்) உள்ளிட்ட அறிஞர்களும் கூறியுள்ளனர்.

எல்லாப் பிரச்சனைகளிலுமே ஒன்றுக்கு மேற்பட்ட முடிவுகள் சரியாக இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ளாத பெரும்பாலான அறிஞர்கள் குறிப்பிட்ட சில நேரங்களில், சூழ்நிலைகளில் பல கருத்துகள் சரியானதாக இருக்க வாய்ப்புண்டு என்பதை ஏற்கின்றனர். பல முடிவுகளில் ஒன்று மட்டுமே சரியானது என்ற நிலையிலும் கூட தவறிழைத்தவர் உள்ளிட்ட எல்லா முஜ்தஹித் களுக்கும் கூலி உண்டு என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஏனெனில் அது குர்ஆன் - ஹதீஸ் மூலம் உறுதி யானதாகும்.

**தொடரும். . .**

**தமிழில் : இல்யாஸ் ரியாஜி**

## புரவலர் ஒய்.எம்.ஹபீபுற்றஹ்மான் அவர்களின் மனைவி ஹதீஜா அவர்கள் மரணம்!

சிங்கப்பூர் தொழில் அதிபரும் சமுதாயப் புரவலரு மான ஒய்.எம். ஹபீபுற்றஹ்மான் அவர்களின் மனைவி கதீஜா அவர்களை 30.4.2011 அன்று அல்லாஹ் அழைத்துக் கொண் டான். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜியூன். அன்னாரின் ஜனசா 2.5.2011 அன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

சமுதாயத்தலைவர்கள். சமுதாய ஆர்வலர்கள் அரசியல் பிரமுகர்கள் பெருவாரியாக ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டார்கள். துஆ செய்தார் கள்.

தாருல் இஸ்லாம் ஃபவுண் டேஷன் சார்பில், அதன் துணை செயலாளர் அப்துல் ரவூஃப் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

ந.நி.



பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

சர்வீஸ்
விமான டிக்கெட்
விசிட் விசா
குவைத், புருனை,
ஸ்டாம்பிங்
டூர் பேக்கேஜ்

பயண உலகில் சிறந்த வழிகாட்டி

# ஏரோ ஒய்டு டிராவல்ஸ்

சவுதி விசா வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு

SAUDI WAKALA CARD
بطاقة الوكالة السعودية

رسنا إنتر برائزز
المعترف لدى حكومة الهند وزارة الشؤون الخارجية
رقم التسجيل: إي ٠٣١٠/بوم/٣٠٠/٤ ٣/٤/٧٨٧٠/٢٠٠٦
* Saudi Arabian Consulate, Mumbai accept wakalah from any Recruitments office.

**RASNA ENTERPRISES**
GOVERNMENT OF INDIA,
MINISTRY OF LABOUR
REGD.CERTIFICATE NO.
A0310/MUM/PER/300/4 3/4/7870/2006

எங்கள் வக்கலாவில் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து அனுப்புகிறோம்!

தலைமை அலுவலகம்
எண் 6, முதல் மாடி, சிந்தூர் பிளாஸா, 42, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி : +91 44 42148723 / 42146552

கிளைகள் :

மயிலாடுதுறை
3/43, வண்டிக்கார தெரு,
மயிலாடுதுறை-1.
தொலைபேசி : 04364-225780/225740
தொலைநகல் : 0091 4364 242100

கூத்தாநல்லூர் - லட்சுமாங்குடி
1, முதல் மாடி, எம்.ஜி.காம்ப்ளக்ஸ்,
திருவாரூர் மெயின்ரோடு.
தொலைபேசி : 04367-230341
இ.மெயில் : aerowidetravel@yahoo.com

தொடர்

# மருந்துகள் – முதுமையில் நண்பனா?

**டாக்டர் . . . எனக்கு நோய்களைவிட நோய்களுக்காக சாப்பிடும் மாத்திரைகள் மிகவும் தொந்தரவாக இருக்கின்றன. என் சாப்பாட்டை விட மாத்திரைகள் அதிகமாகிவிட்டன. தினமும் இருபது மாத்திரைகளுக்கு மேல் உட்கொள்கிறேன். தூக்க மாத்திரைகளால் பகலில் மயங்கிய நிலையிலேயே இருக்கிறேன். மூட்டு வலி மாத்திரையால் வயிற்றில் எரிச்சல் ஏற்படுகிறது. சில மாத்திரைகள் உட்கொள்வதால் சரியாக பசி எடுப்பதில்லை. மலச்சிக்கல் ஏற்படுகிறது. எனக்கு இவ்வளவு மாத்திரைகள் அவசியம்தானா? இந்த மாத்திரைகளில் இருந்து விடுபட ஒரு வழி சொல்லுங்கள்....**

ஒரு சில நோய்களை மருந்து இல்லாமலேயே குணமாக்க முடியும்.

**உதாரணம்**

சத்துணவுக் குறைவால் அவதிப்படுகிறவர்களுக்கு நல்ல சத்துணவு கொடுக்கலாம்.

முழங்கால் மூட்டுவலியால் பாதிக்கப்படுகிறவர்கள் எடையைக் குறைத்து, மூட்டுகளுக்கான சிறப்புப் பயிற்சி செய்தால் வலிகுறையும்.


மலச்சிக்கலைத் தவிர்க்க தினமும் உடற்பயிற்சி செய்யலாம். அதிகமாக நீர் அருந்துதல் மற்றும் நார்ச்சத்து உள்ள உணவுகளை அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் மலச்சிக்கல் நீங்கும்.

உணவில் உப்பைக் குறைத்து, தவறாமல் உடற்பயிற்சி செய்தால் உயர் ரத்த அழுத்தம் குறையும்.

நீரிழிவு நோயை உணவுக் கட்டுப்பாட்டின் மூலமும் உடற்பயிற்சியின் மூலமும் கட்டுக்குள் கொண்டு வர முடியும்.

**வயதான காலத்தில் மருந்துகளின் தீய விளைவுகள் (Side Effects) அதிகம் வரக் காரணம் என்ன?**

நாம் உட்கொள்ளும் மருந்துகள் பெரும்பாலும் சிறுநீரகம் மூலமாகவே வெளியேற்றப்படுகின்றன. வயதாக ஆக சிறுநீரகத்தின் வேலைத்திறன் குறைகிறது. அதனால், மருந்துகள் போதிய அளவுக்கு வெளியேற்றப்படாமல் உடலிலேயே தேங்கி தீமை தருகின்றன.




வயதாக ஆக உடல் தசைகளின் அளவு குறைகிறது. (Lean Body Mass). ஒருவர் உட்கொள்ளும் மாத்திரையின் அளவு அவரது உடல் தசையின் எடைக்குத் தகுந்தவாறு இருக்க வேண்டும். ஆனால் முதுமையில் அவ்வாறு மாத்திரையின் அளவைக் குறைப்பது இல்லை. அதனால், மருந்தின் தீமை அதிகமாகிறது.

**வயதான எல்லோருக்குமே மருந்துகள் கெடுதல் விளைவிக்குமா?**

வயதான எல்லோருக்கும் மருந்துகள் கெடுதல் விளைவிப்பது இல்லை. குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே தீமை விளைவிக்கின்றன.

ஆண்களை விட வயதான பெண்கள்.

மெலிந்த உடல் உள்ளவர்கள்.

கடந்த காலத்தில் மருந்து அலர்ஜி ஏற்பட்டவர்கள்.

தன்னுடன் குடும்ப உறுப்பினர் யாருக்காவது மருந்து அலர்ஜி உள்ளவர்கள்.

அலர்ஜி சார்ந்த ஆஸ்துமா, எக்ஸிமா போன்ற நோய் உள்ளவர்கள்.

பலவிதமான மருந்துகள் (Multiple Drugs) உட்கொள்கிறவர்கள்.

சிறுநீரக கோளாறு உள்ளவர்கள்.

**தொடரும்**

# அஜ்மீர் குண்டுவெடிப்பு!

# தேசிய புலனாய்வு முகவாண்மை ஆய்வுக்கு....?

நமது மத்திய உளவுத் துறை என்ற 'IB' Intelligence Bureau ஐ மக்கள் நம்பிட தயாராக இல்லை.

இஃது வெட்ட வெளிச்சமான பின், இப்போது குண்டு வெடிப்புகள் குறித்த ஆய்வுகளையும், உள்நாட்டுப் பாதுகாப்பையும், தேசிய புலனாய்வு முகவாண்மை, 'National Intevestigating Agency' என்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள புலனாய்வு அமைப்பிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பு இதேபோல் இன்னும் 12 குண்டு வெடிப்புகளை ஆய்வு செய்ய உள்ளது.

**TNIE: 7.4.2011**

இந்த புலனாய்வு முகவாண்மை, அஜ்மீர் தர்கா ஷரீப்-இல் நடந்த குண்டுவெடிப்புகளையும் ஆய்வுக்கு எடுத்துள்ளது. இந்த அமைப்பு ஆய்வுக்கு எடுத்துள்ள 12 குண்டு வெடிப்புகளும் இந்துத் துவ தீவிரவாதிகளால் நடத்தப் பெற்றவை. அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு ரமழான் மாதத்தில் - முஸ்லிம்கள் நோன்பு நோற்கும் மாதத்தில் 11.10.2007இல் நடை பெற்றது.

அரசு தரும் தகவல்களின் அடிப் படையில் இந்தக் குண்டு வெடிப்பில் மூன்று பேர் கொலை செய்யப்பட்டார்கள். 30 பேர் காயம்பட்டார்கள்.

அபிநவ் பாரத் என்ற சங்கப் பரிவாரக் கும்பல் தான் இந்தக் குண்டுவெடிப்புகளை நடத்தியது என்பது இப்போது தெரியவந்துள்ளது.

அதிலும் மாலேகான் 2006/ 2008 குண்டுவெடிப்புகளின் கதாநாயகி பிரக்ய சிங் தாக்கூரின் நெருங்கிய நண்பன் சுனில் ஜோஷி என்பவன்தான். இந்தக் குண்டு வெடிப்புகளைக் களத்தில் நின்று ஏற்பாடு செய்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்நியாசி பிரக்யா சிங் தாக்கூரின் நெருங்கிய நண்பன் ஜோஷியின் காரில் தான் இந்த அஜ்மீர் தர்கா ஷெஃரிப் குண்டுவெடிப்பிற்கு தேவையான வெடிப் பொருட்கள் கடத்திச் செல்லப் பட்டன.

குண்டு வைத்த இந்த சுனில் ஜோஷி என்பவர் ஆர்.எஸ்.எஸ். என்ற இந்துத்துவ தீவிர அமைப்



பில் முழு நேர ஊழியன். அவனை ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பினர் "பிரச்சாரக்" என்றழைப்பார்கள்.

நம் நாட்டில் நடந்த குண்டு வெடிப்புகள் பற்றிய ஆய்வுகளில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய திருப்பங்கள் ஹேமந்த் கர்கரே யின் சாதனை. அந்த சாதனை வெளிச்சம் போட்டுக் காட்டி யவர் எஸ்.எம்.முஷ்ரிப். அதனை பாரெல்லாம் பரப்பியது தாருல் இஸ்லாமும், வைகறையும்.

அதன் புதிய அத்தியாயம். சந்நியாசி அசீமானந்த் (இயற் பெயர் நாபா குமார் சர்கார்) தந்த வாக்கு மூலங் களுக்குப் பின் தொடங்கிற்று. (அசீமானந்த் இன் முழு வாக்கு மூலத்தையும் அறிந் திட வைகறை வெளிச்சம், பிப்ரு வரி 2011 பார்க்கவும்).

அதே போல இது எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய 'கர்கரேயைக் கொலை செய்தது யார்?' இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற நூலை மையமாகக் கொண்டு நாம் நாடெங்கும் நடத்திய இயக்கத் தின் விளைவு.

## அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பில் அன்று குற்றம் சாட்டப்பட்டவர்கள்

2007 அக்டோபர் 11 ஆம் நாள் குண்டு வெடிப்பு நடந்த சில மணி நேரங்களுக்குள் நமது மத்திய உளவுத்துறை IB Interlligence Bureau முஸ்லிம்களின் மேல் பழியைப் போட்டது. முஸ்லிம்களைப் பழித்தே நம் நாட்டின் மத்திய உள்துறை செயலருக்குத் தகவல்களைத் தந்தது. அந்தத் தகவல்களைக் கிஞ்சிற்றும் சீர் தூக்கிப் பார்த் திடாமல் அவர் ஊடகங்களுக்குச் செய்திகளைத் தந்தார். அத்தனை யிலும் முஸ்லிம்களையே குறை கூறினார். அப்போது உள்துறை செயலர். குற்றம் சாட்டியவர்கள்:

1. **லஷ்கரே தொய்பா, ஜெய்ஷே முஹம்மத், 'ஹுஜி' ஆகிய அமைப்புகள் இணைந்து செய்தவை.**
2. **மாலேகான், ஹைதரா பாத் குண்டு வெடிப்புகளைச் செய்தவர்களே இவற்றை யும் ஏற்பாடு செய்துள் ளார்கள்.**
3. **ஷஹீத்பிலால் என்பவர் தான் மூளையாகச் செயல் பட்டார். இவர் ஹுஜி என்ற அமைப்பைச் சேர்ந்த வர். இவர் குஜராத்தைச் சார்ந்த ரசூல்கான் என்பவ ரின் நண்பர். ஆகவே அவருக்கும் இதில் பங் குண்டு.**

இதே கதையை நமது பிரதமரோடு ஆப்பிரிக்காவுக்குப் பயணம் செய்த, பரிவாரத்தினர் உலகெங்கும் சொன்னார்கள்.

முஸ்லிம்கள்தான் அஜ் மீரில் குண்டு வைத்தார்கள் என்பது அப்போது அரசின் நிலையாக இருந்தது.

## அன்று சொன்ன காரணம்

அஜ்மீரில் முஸ்லிம்கள்தாம் குண்டு வைத்தார்கள் எனச் சொன்ன 'Intelligence Bureau' என்ற மத்திய உளவுத் துறையும், அதை ஏற்றுக் கொண்ட மத்திய உள் துறை அமைச்சரும் முஸ்லிம் கள் ஏன் குண்டு வைத்து முஸ்லிம் களையே கொலை செய்தார்கள் என்பதற்கு ஒரு காரணத்தைச் சொன்னார்கள். அது,

"லஷ்கரே தொய்பா" போன்ற அமைப்புகள் தௌவ் ஹீத் அமைப்புகளாம். அவற் றிற்கு தர்காக்களையும், சூஃபி களையும் பிடிக்காதாம், அதனால் தான் குண்டு வைத்தார்களாம்.

## அன்று வேண்டுமென்றே புலனாய்வுச் செய்யாமல் விட்டப் பகுதிகள்

அஜ்மீரில் குண்டுகளை வெடிக்கவைப்பதற்கு பயன் படுத்தப் பட்ட கைபேசி 'செல் போனி லிருந்த' சிம் கார்டுகள், (கவ்காத்தி) அசாம் மாநிலத்தில் வாங்கப் பட்டவை. அந்த சிம் கார்டுகளை வாங்கிட அடை யாள அட்டை யாக ஓர் ஓட்டுநர் உரிமம் Driving Licence தரப் பட்டிருந்தது. அந்த ஓட்டுநர் உரிமத்தில் இருந்த புகைப்படம் 'போட்டோ' யார் பெயரில் உரிமம் இருந்ததோ அவருடைய தல்ல. மாறாக அது அந்த வட் டாரத்தில் மிகவும் பிரபல்யமான ஒரு ஆயுர்வேத மருத்துவரின் புகைப்படம்.

இந்த ஓட்டுநர் உரிமத்தில் பெயருக்குரியவர் யார்? அவர் ஏன் மிகவும் பிரபல்யமான ஒரு மருத்துவரின் போட்டோவை ஒட்டவேண்டும். அந்த மருத்து வர் ஏதேனும் இந்துத்துவ அமைப் பைச் சார்ந்தவரா? என்பவை ஆய்வு செய்யப்பட வேண்டும். அன்று நமது புலனாய்வுத் துறையினர் வேண்டுமென்றே இந்தத் தடயங் களையும் சாட்சிகளையும் புறக் கணித்தார் கள். புலனாய்வுக்கு உட் படுத்த மறுத்தார்கள். இப்போது கள மிறங்கியுள்ள தேசிய புலனாய்வு முகவாண்மை இவற்றை ஆய்வு செய்யுமா? செய்யும் என எதிர் பார்ப்போம். (இன்ஷா அல்லாஹ்)

**அன்று மறைக்கப்பட்ட இன்னொரு உண்மை**

அஜ்மீர் குண்டுவெடிப்பில் 'ஆர்.டி.எக்ஸ்' என்ற வகை குண்டுகளையும், டி.என்.டி., என்ற வகை குண்டுகலவையும் ஒன்றாக கலக்கப்பட்டு குண்டுகள் தயாரிக் கப்பட்டன. இந்த வகை வெடி பொருட்கள் குற்றஞ்சாட்டப் பட்ட முஸ்லிம்களால் அண்டை நாடுகளிலிருந்து கடத்திவரப் பட்டவை என்று கதை கட்டிவிடப்பட்டது.

ஆனால் அன்றே இந்த குண்டு வெடிப்புகளில் பயன் படுத்தப்பட்ட குண்டுகளை ஆய்வு க்கு உள்படுத்திய (என்.எஸ்.ஜி.) தேசிய பாதுகாப்புப் படையினர் இந்தக் கலவைகளை ஆர்.டி. எக்ஸ்., டி.என்.டி. கலவைகளை அதிகமாகப் பயன்படுத்துவது நமது இராணுவந்தான் எனக் கூறினார்கள். இந்த வெடிப் பொருள் கலவைகள் நமது இராணுவத்தில் உள்ளவைதான் என்றும் உறுதிபடக் கூறினார்கள்.

ஆனால் தேசிய பாது காப்புப் படை அன்று சொன்ன வை புறக்கணிக்கப்பட்டன. முஸ்லிம்களே வெடி பொருட் களை வெளிநாடுகளிலிருந்து கடத்தினார்கள் என்று அடம் பிடித்தார்கள். முஸ்லிம்களை குற்றத்தோடு இணைக்காத எந்த தடயத்தையும் மத்திய உளவுத் துறை அப்போது ஏற்றுக் கொள்ளவில்லை.

பின்னால், இந்து தீவிரவாதி, இராணுவ அதிகாரி பிரசாந்த் புரோகித், இராணுவத்திலிருந்து வெடிபொருள்களை தன் அதி காரத்தைப் பயன்படுத்தி கடத் தினார் என்பது கண்டுபிடிக்கப் பட்டது.

இந்தப் பகுதியும் முழுமை யாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

'NIA' என்ற National Investigation Agency இதனை செய்யும் என எதிர்பார்போம். (இன்ஷா அல்லாஹ்)

**குற்றப்பத்திரிக்கையில் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள்**

இனி தாக்கல் செய்யப்படும் குற்றப்பத்திரிக்கையில் கவ்காத்தி யில் வாங்கப்பட்ட சிம் உடன் கார்டு சம்பந்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் குற்றஞ்சாட்டப் படவேண்டும். தண்டிக்கப்பட வேண்டும்.

அன்று ஊடகங்களை வழி புலனாய்வையே திசை திருப்பிய மத்திய உள்துறை செயலாளர், அவருக்கு தவறான தகவல்களைத் தந்த மத்திய உளவுத்துறை, அதிலுள்ள கறுப்பாடுகள், இவர் கலெல்லாம் குற்றஞ்சாட்டப் பட்டு நீதிமுன் நிறுத்தப்பட வேண்டும்.

செய்யுமா என்.ஐ.ஏ.?

**எம்.ஜி.எம்.**


**வைகறையில்**

**விளம்பரம்**

**செய்யுங்கள்**


# அன்பகத்தில் நடந்த தாஃவா நிகழ்ச்சி!

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இஸ்லாமியக் கல்வியை வழங்கி வரும் அன்பகத்தில் 30.4.2011 அன்று தாஃவா நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்ச்சியை செய்ஃபுல் இஸ்லாம் அவர்களும் பைசல் அவர்களும் ஏற்பாடு செய்திருந் தார்கள்.

நிகழ்ச்சியின் தலைவராக சுன்னல்து வல் ஜமாத் தலைவர் ஒய்.எம். பிஸ்மி ஷம்சுதீன் அவர்கள் தலைமை ஏற்று நடத் தினார்கள்.

கும்பக்கோணத்தில் சிறப் பாக செயல்பட்டுவரும் முளைறய கும்பக்கோணம் இஸ்லாமிக் வெல்பேர் அசோசியசன் தலைவர், அன்சர் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

டி.எம். உமர் ஃபாரூக், வைகறை ஆசிரியர் மு. குலாம் முஹம்மத், அன்சாரி ஹசரத், ஆடிட்டர் அப்துல்லாஹ் ஆகி யோர் உயைாற்றினார்.

செய்யுல் இல் இஸ்லாம் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

முஸ்லிம்களும் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் பெருவாரியாக கலந்து கொண் டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடு தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்

**நமது நிருபர்**


# 2003 ஆம் ஆண்டுக்கு பின் நடந்த அனைத்து குண்டு வெடிப்புகளையும் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகவாண்மை விசாரிக்கும்!

நாட்டில் நடந்த பல்வேறு குண்டு வெடிப்புகளும் ஆர்.எஸ். எஸ். பிரச்சாரக் என்ற முழு நேர ஊழியர்களின் கைவண்ணம். இதனால் அவை அனைத்தையும் ஒரே புலனாய்வுத்துறை விசாரிப்பது மட்டுமே முழுமையான விசாரணையாக இருக்கும். இதுவே இப்போது நமது உள்துறை அமைச்சர் பா. சிதம்பரம் அவர்களின் கருத்து. அவர் தனது அமைச்சரவையின் ஓராண்டு சாதனைகள் பற்றி அறிக்கையில் ஏப்ரல் 1.4.2011 அன்று இதனை தெரிவித்தார்.

இதனால் 2003ஆம் ஆண்டுக்குப் பின் நடந்த குண்டு வெடிப்புகள் அனைத்தையும் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வுத்துறையே விசாரிக்கும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்போது என்.ஐ.ஏ. என்ற மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணையின் கீழிருக்கும் வழக்குகள்:

1. **2006 மாலேகான் குண்டு வெடிப்பு, இது இப்போது சி.பி.ஐ. என்ற மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணையில் இருக்கின்றது.**
2. **2007 சம்ஜோத்தா ரெயில் குண்டு வெடிப்பு இது இப்போது என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகவாண்மையிடமே இருந்து வருகின்றது.**
3. **2007 ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, இது மத்திய புலனாய்வுத் துறையால் விசாரிக்கப் பட்டு வரும் வழக்கு.**
4. **2007 அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பு இதனை இராஜஸ்தான் தீவிரவாத தடுப்புப்படை விசாரணையில் இருந்து வருகின்றது.**
5. **2008 மாலேகான் (மராட்டிய மாநிலம்) குண்டு வெடிப்பு. இந்த குண்டு வெடிப்பை விசாரித்த போதுதான் வீரமகன் ஹேமந்த் கர்கரே இந்துத்துவாவின் மொத்த சதியையும் கண்டு பிடித்தார். ஆனால் பின்னர் மொத்த விசாரணையையும் குழிதோண்டி புதைத்தார். புதிதாக வந்த ஏ.டிஎஸ். என்ற தீவிர வாத தடுப்புப் படையின் தலைவர்.**
6. **2008 மொடசா குண்டு வெடிப்பு. இஃது என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகாவாண்மையின் விசாரணையின் கீழிருந்து வருகின்றது.**



**யார் இந்த சுனில் ஜோஷி?**

இவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். முழுநேர பிரச்சாரகர். இவன்தான் நாட்டில் நடந்த பல குண்டு வெடிப்புகளுக்கு காரணமானவன். முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடங்கள், ஜும்மா தொழுகையை போல் முஸ்லிம்கள் அதிக மாகக் குழுமுமிடங்கள் இவற்றில் குண்டு வைப்பதில் வல்லவன்.

சுமார் பத்து குண்டு வெடிப்புகளுக்குக் காரணமானவன். இவனுக்கு ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பின் பொதுச் செயலாளர்களுள் ஒருவரான இந்திரேஷ் குப்தா, விஷ்வ ஹிந்து பரீஷித்தின் செயலாளர் பிரவீன் தொகாடியா, குஜராத் முன்னாள் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரே அதிகமாகப் பணம் தந்துள்ளார்கள். அதேபோல் இந்துத்துவ அமைப்பைச் சார்ந்த பல பிரமுகர்கள் செய்ய வைத்த குண்டு வெடிப்புகள் அவர்களின் அந்தரங்கங்கள் இவற்றை அதிகமாக அறிந்தவன். ஒரு நேரத்தில் இந்துத்துவ தலைவர்கள், பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கெல்லாம் இவனைப் பற்றிய அச்சம் தொற்றிக் கொண்டது.

இந்த அச்சத்திற்கான காரணம், இவன் ஏதேனும் காரணங்களுக்காக காவல்துறையிடம் சிக்கி உண்மையை சொன்னால் இந்து தேசப்பக்தி வேடம் பூண்டு பவனிவரும் பலர் சிக்கிக் கொள்வார்கள், சிறை பிடிக்கப் படுவார்கள்.

இதனால் இந்த இந்துத்துவ பிரபல்யங்கள் இவன் இனி வாழ்வது நமக்கு ஆபத்து என்ற முடிவுக்கு வந்தார்கள். இதனால் இவரைக் கொலை செய்துவிடுவது என முடிவு செய்தார்கள்.

இந்துத்துவ தீவிரவாதிகள் யாரையேனும் கொலை செய்திட வேண்டும் என முடிவு செய்தால் அதனை ஒரு கலையாகச் செய்வார்கள். அந்த அடிப் படையில் சுனில் ஜோஷியைக் கொலை செய்யும் பொறுப்பை சந்நியாசினி தீவிரவாதி பிரக்யா சிங் தாக்கூரிடம் ஒப்படைத்தார்கள். பிரக்யாசிக் தாக்கூர் தனது எடுபிடிகளிடம் இப்பொறுப்பை ஒப்படைத்தார். பிரக்யா சிங் தாக்கூரின் எடுபிடிகள் தங்கள் நண்பர் ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரக் சுனில் ஜோஷியை ஒரு செங்கற் சூளைக்கு வரவழைத்து துப்பாக் கியால் சுட்டுக் கொலை செய்து விட்டார்கள்.

### கொலையில் சந்நியாசினியின் சாதுர்யம்



29 டிசம்பர் 2007 இல் கொலை செய்யப்பட்ட சுனில் ஜோஷி தனக்கு மிகவும் நெருக்கமானவர். அவரை ‘சிமி’ என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தாம் கொலை செய்தார்கள் என்றொரு கதையைக் கட்டிவிட்டார் சந்நியாசினி பிரக்யா சிங் தாக்கூர்.

பின்னர் 2008 ல் சந்நியாசினி தலைமையில் மாலேகானில் குண்டு வெடிப்புகள் நடந்தன. இந்தக் குண்டுகள் வெடிக்க ஒரு “பைக்” (இரு சக்கர வாகனம்) பயன்படுத்தப் பட்டிருந்தது. இந்த பைக் சந்நியாசினிக்கே சொந்தமானது. அவர் 2007 விலேயே சுனில் ஜோஷிக்கு விற்றுவிட்டதாக ஆவணங்களை சந்நியாசினி உருவாக்கி வைத்திருந்தார். இந்த விவகாரங்களையெல்லாம் வீரமகன் கர்கரே அகழ்ந்தெடுத்து உலகுக்குத் தந்தார்.

இப்படி தனது ‘பைக்’ ஐ சுனில் ஜோஷியுடைய பைக் எனக் காட்டியதற்குக் காரணம் மாலேகானின் 2008 குண்டு வெடிப்பையும் சுனில் ஜோஷியின் தலையில் போடத்தான். பிரக்கியா சிங் தாக்கூரின் புத்திசாலித்தனம் இத்தோடு நிற்கவில்லை. 2008 இல் மாலிகோனில் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியபோது தனது ‘பைக்’ஐ மாலேகானிலுள்ள இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் அலுவலகத்தின் முன் வைத்துத்தான் வெடிக்கச் செய்தார். அந்த அலுவலகம் சீல் வைக்கப் பட்டிருந்தது.

பின்னர் விசாரணையில் கேட்டபோது தான் ‘சிமி’ அலுவலகத்தை குறிவைத்ததற்குக் காரணம் இந்தச் ‘சிமி’ என்ற இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தாம் என் உற்ற நண்பர் ஜோஷியைக் கொலை செய்தார்கள். ஆகவே அவர்களை பழி வாங்கிட எண்ணினேன். அவர்கள் அலுவலகத்திற்குக் கீழ் பைக்-ஐ நிறுத்திக் குண்டு வைத்தேன் எனக் கூறிவிட்டார். என்னே சந்நியாசினி இந்துத்துவ தீவிரவாதியின் புத்திசாலித்தனம். ஆனால் அவர் ஜோஷியைக் கொலை செய்தது ஜோஷியிடம் சங்கப் பரிவாரத்தின் அந்தரங்கங்கள் சிக்கி இருந்து. மட்டுமல்லாமல் பியா சிங் பினாமா என்பவரையும் இருவரும் கொலை செய்துதிருந்தார்கள். அந்த கொலையிலும் இவர்கள் சிக்கிக் கொள்வதாக இருந்தார்கள்.

### சந்நியாசினி குண்டு வைத்திட குறிவைத்த இடம். . . ?

உண்மையில் சந்நியாசினி குண்டு வைக்க தேர்தெடுத்த

இடம் மாலேகானிலுள்ள 'சிமி' அலுவலகமல்ல.

மாறாக முஸ்லிம் பெண்கள் அதிகமாகக் குழுமி நின்ற நிடுத் கார்னர் என்ற இடத்தில் தான் "பைக்" ஐ நிறுத்தி குண்டுகளை வெடிக்க வைப்பதாகத்தான் திட்டம். அங்கு பெண்கள் அதிக மாகக் குழுமிடக்காரணம், அன்று 'சபேபராத்' தினம். அதனால் தான் அந்த நாளை செப்டம்பர் 29,2008-ஐ சந்நியாசினி குண்டு வைத்திடும் நாளாகத் தேர்ந்தெடுத்தார். அன்று வெள்ளிக் கிழமையும் கூட.

ஆனால் 'சபேபராத்' ஐ மையமாகக் கொண்டு காவலுக்குப் போட்டிருந்த காவல் துறையினர், சந்நியாசினியின் பரிவாரத்தை நிடுத் கார்னர் பக்கம் இரு சக்கர வாகனங்களோடு அனுமதிக்கவில்லை.

ஆனால் சந்நியாசினி மாலேகான் குண்டு வெடிப்பே சுனில் ஜோஷியைக் கொலை செய்ததை பழி தீர்க்கத்தான் என வாக்குமூலங்களை வழங்கினார். ஆனால் சுனில் ஜோஷியைக் கொலை செய்ததே இவர்தான்.

ஆனால் ஜோஷியின் கொலையை முற்றாக மறைக்க வேண்டும் என்பதில் மத்திய பிரதேசத்தை ஆட்சிச் செய்யும் பா.ஜ.க. கூட்டணிஅரசு மிகவும் கவனமாக இருக்கின்றது.

இதில் எந்த அளவுக்கு மத்தியப் பிரதேச அரசு கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகின்றது என்றால் என்.ஐ.ஏ. என்ற மத்திய புலனாய்வு துறையிடம் அது சுனில் ஜோஷி சம்மந்தப்பட்ட வழக்குகளைத் தந்திட மறுக்கின்றது. சட்டம் ஒழுங்கு பராமரிப்பு என்பது மாநில அரசின் அதிகாரத்திற்குட் பட்டது. அதில் மத்திய அரசு தலையிடக் கூடாது என வேதாந்தம் பேசுகின்றது. அதே நேரத்தில் ஏற்படுத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் "என்.ஐ.ஏ. விரும்பும் வழக்குகளை மாநில அரசின் அனுமதி இன்றியே என்.ஐ.ஏ. தேசிய புலனாய்வு முகவாண்மை கையிலெடுத்துக் கொள்ளலாம்" என சட்டம் வகுத்தார்.

ஆனால் மத்தியப் பிரதேச அரசு சுனில் ஜோஷியின் கொலை வழக்கை தர மறுக்கின்றது. காரணம், சுனில் ஜோஷியைக் கொலை செய்த வழக்கு உண்மையான விசாரணைக் குட்படுத்தப்படும் போது, பாரதீய ஜனதா கட்சியினரும் அவர்களின் அடித்தளமாக அமைந்த சங்கப்பரிவாரக் கும்பலும் நமது நாட்டிற்கெதிராகச் செய்த சதிகள் அம்பலத்திற்கு வந்திடும். அப்போது இவர்கள் எத்தகையதொரு தேசத் துரோகிகள் என்பது, அனைவருக்கும் தெரியவந்திடும். இதனை மறைப் பதற்கே இத்தனை தகிடுதத்தங்கள்.

**சந்நியாசினி மீது இன்னொரு குற்றப்பத்திரிகை**

ஏற்கெனவே பல தீவிரவாத செயல்கள் குண்டுவெடிப்புகள் இவற்றோடு சம்மந்தப்பட்டவர் தான் சந்நியாசினி பிரக்யாசிங். இப்போது சிறையில் இருக்கின்றார். அத்தோடு இப்போது சுனில் ஜோஷி கொலை வழக்கிலும் அவர்தான் முக்கிய குற்றவாளி என்ற அடிப்படையில் அவர் மீது மார்ச்சு 1 2011 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இந்தக் குற்றப் பத்திரிக்கை மத்திய பிரதேசம் தேவாஸ் என்ற இடத்திலுள்ள நீதிமன்றத்திற்குட்பட்டது. அத்தோடு மராட்டிய மாநிலத்திலுள்ள மோக்கா என்ற 'பொடா' சட்டமும் அவர் மீது பாய்ந்துள்ளது.

பிரியங்காவுடன் சுனில் ஜோஷி கொலை வழக்கில் ஆனந்ராஜ் ஹர்ஷத் சோலாங்கி வாசுதேவ் பால்மர் இராமசந்திர பாட்டில் என்பவர்கள் மீதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எம்.ஜி. 16-31 மார்ச்**

## ப. சிதம்பரம் அவர்களின் பார்வைக்கு

உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் காவி தீவிரவாதிகளைப் பற்றிய எச்சரிக் கையை விடுத்தபின் நாட்டில் குண்டு வெடிப்புகள் வெகுவாகக் குறைந்துள்ளன. இப்போது எல்லா வழக்குகளும் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகவாண் மையிடம் ஒப்படைக்கப்படு கின்றது. தேசிய புலனாய்வு முக வாண்மையில் கறுப்பாடுகள் புகுந்திடாமல் பாதுகாப்பாக பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லா வழக்குகளையும் அவர்கள் ஒரேயடியாக கவிழ்த்திடவும் முடி வும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இது நடந்தால் ஒரு நொடியில் எல்லா காவி தீவிரவாதிகளும் தப்பித்து விடுவார்கள். எச்சரிக்கை தேவை!

**எம்.ஜி.எம்.**

## அபிநவ்பாரத் தீவிரவாதி :

# இராணுவ அதிகாரி பிரசாந்த் புரோகித்க்கு இராணுவத்தில் கூட்டாளிகள்?



நம் நாட்டில் அனைவர் கண்களையும் மறைத்து விட்டு ஒரு பெரும் சதி சந்தடியில்லாமல் நிறை வேறிக் கொண்டிருக்கின்றது.

அதுதான் இந்துக்களை இராணுவ மயமாக்குவதும் இராணுவத்தை இந்து மயமாக்கு வதும்.

இராணுவம் இந்து மயமாக்கப்பட்டு வருகின்றது என்பதன் அடையாளச் சின்னந் தான் கலோனல் இராணுவ அதிகாரி பிரசாந்த் புரோகித்.

இவர் முஸ்லிம்கள் அதிக மாகக் குழுமும் இடங்கள். ஜும் மா நடைபெறும் வெள்ளிக் கிழமைகள் இவற்றில் பள்ளி வாசல்களிலும் பொது இடங் களிலும் குண்டு வெடிப்புகளை நடத்துவதில் வல்லவர்.

இதில் மிகப்பெரும் வேதனை என்னவெனில் அவர், இந்தக் குண்டுவெடிப்புகளுக்கான குண்டுகளைத் தயார் செய்திட தேவையான வெடிப்பொருள் களுக்காக இராணுவ கிடங்கு களையே பயன்படுத்தினார்.

இராணுவ கிடங்குகளி லிருந்து டி.என்.டி., ஆர்.டி.எக்ஸ். இன்னும் இதுபோன்ற சக்தி வாய்ந்த குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள் களைத்தான் அதிகாரத்தைப் பயன்படுத்தி கடத்தினார். குண்டு களைச் செய்தார். முஸ்லிம்களைப் பிணங்களாக குவித்தார். பழியை முஸ் லிம்கள் மீதே போட்டார்.

குண்டு களை வைப்பத ற்குச் செலவிடும் பணத்தையும், இராணு வத்தின் கஜானாவிலி ருந்தே திருடி னார்.

நமது பணம் (இந்திய நாட்டுக் குடிமக்களின் பணம்) பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டி ருந்த பொருள்கள் இவற்றைக் கொண்டு நம் நாட்டுக் குடி மக்களையே கொலை செய்தார். பல வெளிநாட்டு மக்களையும் கொலை செய்தார்.

இந்தப் பிரசாந்த் புரோகித் ஐ போல் இன்னும் எத்தனை பேர் இராணுவத்திலிருக்கின்றார்கள் என்பதைப் பற்றி கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டும். அவர்கள், களையெடுக்கப்பட வேண்டும் அவர்கள் வெளியேற்றப் படவேண்டும் என்ற கோரிக்கை களை மிகவும் நீண்ட நெடுங்கால மாக நாம் வைத்து வருகின்றோம்.

தொடக்க நாள்களில் நமது இராணுவ அமைச்சர் ஏ.கே. அந் தோணி இதனை ஏற்க மறுத்தார். நமது இராணுவம் ஒன்றும் அப்படி சீர்கெட்டுப் போகவில்லை என சப்பைக் கட்டுக் கட்டினார்.

நமது போர் தொடரவே உண்மையை ஒத்துக் கொண்டார். புரோகித் மீது மட்டும் விசாரணை நடத்திட வேண்டும் என உத்தர விட்டார். அதுவும்துறை சார்ந்த விசாரணைதான்.

பின்னர் இந்த விசாரணை யைத் தொடராமல் விட்டார்கள். கேட்டபோது இராணுவ விதி களின் படி துறை சார்ந்த விசாரணைகளை மேற்கொள் ளும்போது சாட்சியங்களை புரோகித் இன் முன்னிலை யில்தான் பதிவு செய்ய வேண்டும் என்றார்கள்.

பல சாட்சியங்கள் பதிவு செய்யவும் பட்டன புரோகித் இல்லாமல்.

நமது போர் தொடரவே மீண்டும் விசாரணை தொடங்கப் பட்டுள்ளது.

**எம்.ஜி.எம்.**


# இந்திரேஷ் குமாரைக் காட்டிக் கொடுத்தார் புரோகித்!

புரோகித் - அபிநவ்பாரத் - ஐ நடத்தி வந்தார். இந்திரேஷ் குமார் என்பவர் ஆர்.எஸ்.எஸ்.-இன் செயல் தலைவர்களுள் ஒருவர். இவருக்கும் புரோகித்துக்கும் பலமுறை மோதல்கள் வந்தன. எந்த அமைப்புப் பெரியது என்று. இந்த நிலையில் தான் நடத்திய மாலேகான் 2008 குண்டு வெடிப்பை இந்திரேஷ் குமார் மீது போட்டு ஓர் கடிதம் எழுதினார், தன்னோடு அபிநவ் பாரத்தில் இயங்கும் மற்றொரு இராணுவ அதிகாரியான மேஜர் பகீரத் தேவ் என்பவருக்கு அந்தக் கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டார்.

"The blasts which took place in Gujarat and Malegon are on the same day and same line using the same technique. I had learnt that it is Mr. Indresh Kumar of the RSS who is instrumental in carring out these actions. It is likely that senior RSS officials like Indresh Kumar are playing into the hands of ISI, knowingly or unknowningly."

Source : Malegaon blast case, Purohits letter indicts Indresh Sadhvi Proyga: India To-day March 3,2011

அதாவது மாலேகான் குஜராத் ஆகிய இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகள், ஒரு நாளில், ஒரே நேரத்தில் ஒரே விதமான உத்தியைப் பயன் படுத்தி நடந்திருக்கின்றன. எனக்குத் தெரியும் இவற்றை யெல்லாம் ஆர்.எஸ்.எஸ். ஐ சார்ந்த இந்தி ரேஷ் குமார் தான் நடத்திக் கொண்டிருக்கின்றார். இந்தி ரேஷ் குமார் போன்ற மூத்த ஆர்.எஸ். எஸ். தலைவர்கள் தெரிந்தோ தெரியாமலோ பாகிஸ்தான் வலையில் வீழ்ந்து விடுகின்றார்கள்."



செய்தி ஆதாரம் இந்தியா டுடே 3.3.2011

ஆனால் இந்த வெடிப்புகளை நடத்தியது கடிதத் தை எழுதிய புரோகித் என்பதுதான் உண்மை.

எத்தனை பெரிய எத்தர்கள் இவர்கள்.

---

**மகளிர் மன்றம்**

# சாதனைப் பெண் இர்ஃபானா!

முஸ்லிம் பெண்களை மூலையில் போட்டு மூடிவைக்கின்றார்கள், என்ற இஸ்லாத்தின் எதிரிகள் எழுப்பும் கூப்பாட்டை உடைக்கும் வகையில் இன்னொரு நிகழ்ச்சி. . . ! இல்லை சாதனை.

இதனை குமரிமாவட்டம், வேர்கிளம்பி காரியா மங்கலத்தைச் சார்ந்த இர்பானா என்ற பெண் பிளஸ் 2தேர்வில் சாதித்துள்ளார்.

தந்தை முஹம்மத் நாசர். பால் வியாபாரம் செய்பவர். மணலிக்கரை மரிய கொரட்டி மேல் நிலைப்பள்ளியில் படித்தவர்.

தாவரவியலில் மாநில அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கின்றார். அதில் (தாவரவியலில்) 200/200 மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்.

மொத்தமாகப் பெற்ற மதிப்பெண்கள் 1200க்கு 1150 ஆகும்.

மருத்துவப் படிப்பில் சேர்ந்திட விருப்பம் தெரிவித்துள்ளார். அவரது சாதனை தந்த மகிழ்ச்சியைப் பற்றிக் கேட்டபோது எல்லாப்புகழும் இறைவனுக்கே எனக் கூறினார்.

'புர்கா' அணிந்த அவருடைய போட்டோ (புகைப்படம்) எல்லா பத்திரிகைகளிலும் இடம் பெற்றுள்ளன.

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நாகர்கோவில் பொறுப்பாளர்களும் மஜ்லிசு நிசா மகளிரும் சாதனையாளர் இர்பானாவைக் வாழ்த்துகின்றோம்.

**ந.நி.**

## மதுரை ஐக்கிய ஜமாஅத் வழிகாட்டுகின்றது!

# அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை பெற்றனர்!

பெப்ருவரி மாதம் இறுதியில் ஓர் மாட்டுத்தலை ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பின் மதுரை அலுவலகத்தின் முன் கிடந்ததாக ஒரு செய்தி மதுரையை உலுக்கிக் கொண்டிருந்தது.

இது அதற்கு முன்னர் ஒரு முக்கிய பள்ளிவாசல் முன் பன்றிக்கறியை போட்டதற்கு எதிர் நடவடிக்கை என்றும் கூறப்பட்டது.

இதில் காவல் துறையின் கைவண்ணந்தான் அனைவரையும் உலுக்கிக் கொண்டிருந்தது.

பள்ளிவாசல் முன்பு பன்றிக் கறியை வீசியவர்களைக் கண்டு பிடிக்கவோ, அவர்களை நீதியின் முன் நிறுத்திடவோ, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. போலியாக ஒரு நபரை கைது செய்து அவர் மேல் பழியைப் போட்டு வழக்கை மூடிவிட்டார்கள். உண்மையைச் சொன்னால் இந்துத்துவ தீவரவாதிகளைக் காப்பாற்றி விட்டார்கள்.

ஆனால் இந்துத் தீவிரவாதிகளின் அலுவலகம் முன்பு மாட்டுத் தலையைப் போட்டவர்கள் எனப் பல முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்தார்கள். சித்திரவதைகளைச் செய்து வாக்கு மூலங்களை வாங்கினார்கள். கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்களின் கண்கள் செவிப் புலன்கள் இவையெல்லாம் பெரிய அளவில் பாதிக்கப் பட்டன.

இந்த மொத்த வழக்கிலும் காவல்துறை பாரபட்சத்தோடு நடந்து கொள்கின்றது என்பதை அதிகார வர்க்கத்தின் பார்வைக்கு கொண்டு வந்திட தொடர்ந்து போராடியது மதுரை ஐக்கிய ஜமாஅத். காவல்துறையினர் ஐக்கிய ஜமா அத் மீதே பாய்ந்தனர். எதிர்த்து வந்த காவல் துறையின் எடுபிடிகளை, துணிவுடன் எதிர்கொண்டார்கள் ஐக்கிய ஜமாஅத் தலைவர்கள்.

இரண்டு வழக்குகளையும் சி.பி.சி.ஐ.டி என்ற மாநில சிறப்பு புலனாய்வுப் படையின் புலன் விசாரணைக்கு மாற்றிட வேண்டும் என போராடினார்கள்.

இறுதியில் அதில் வெற்றியும் பெற்றார்கள். மொத்த வழக்கும் மாநில சிறப்பு புலனாய்வுத் துறையின் புலன் விசாரணைக்கு மாற்றப்பட்டது.

காவல்துறையால் சித்திரவதைச் செய்யப்பட்டு வந்த இளைஞர்களுக்கு பிணையையும் பெற்றார்கள் ஐக்கிய ஜமாஅத்தார்கள்.

**காவல்துறையின் ஓரவஞ்சமும் பெருந்தன்மையும்**

ஐக்கிய ஜமாஅத்தின் பள்ளிவாசலின் முன் பன்றியைக் வீசிய விவகாரத்தில் அவர்களாகவே இந்துத் தீவரவாதிகளை உசுப்பி விட்டார்கள் என்பதை பின்னர் இந்த மொத்த விவகாரத்தையும் ஆய்வு செய்த உண்மையைக் கண்டறியும் குழு கண்டறிந்தது.

ஆமாம்! காவல்துறையைச் சார்ந்தவர்கள்தாம் ஆர்.எஸ்.எஸ். காரர்களிடம் இப்படி மாட்டுத் தலை உங்கள் அலுவலகத்தின் முன் கிடக்கின்றது என்றும், அது மாட்டுத்தலைதான் என்றும் கூறி இருக்கின்றார்கள்.

இங்கே அமைதியாக முடிக்க வேண்டிய விஷயத்தை ஆரவாரமாக்கினர். மதுரையோடு முடிந்திட வேண்டிய இந்த விவகாரத்தை மாநில செய்தியாக மாற்றி, தினத் தந்தியும் தன்னால் முடிந்த அளவு பரபரப்புகளை விரிவுபடுத்தியது.

உண்மையைக் கண்டறியும் குழு பல உண்மைகளை ஆழ்ந்தெடுத்து அறிவித்தது.

அ. மார்க்ஸ் அவர்கள் தலைமையில் அமைந்த உண்மையைக் கண்டறியும் குழு கண்டெடுத்துத் தந்த எந்த உண்மையையும், அதுபற்றி எழுதிய எந்த ஆங்கில இதழ்களும் வெளியிடவில்லை.

ஆனால் பத்திரிகைகள் தொடர்ந்து மதுரை ஐக்கிய ஜமாஅத்தின் முயற்சிகளை செய்தியாக வெளியிட்டது பாராட்டிற்குரியது - அல்ஹம்ந்துலில்லாஹ்.

மதுரை ஐக்கிய ஜமாஅத்தின் வழியைப் பின்பற்றி ஏனைய ஜமாஅத்களும் நீதிக்காகப் போராடிட முன் வந்திட வேண்டும். இன்ஷா அல்லாஹ்.

**மதுரையிலிருந்து**
**நமது நிருபர்**

# “கர்கரே விருது” ஆங்கிலப் பத்திரிகைகள் பாராட்டு

*“தாருல் இஸ்லாம்” வீரமகன் கர்கரே விருது என்றொன்றை நிறுவி அதனை முதன் முதலாக நீதிக்காகப் போராடி வரும் பீகார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராதா காந்த் யாதவ் அவர்களுக்கு வழங்கியது. இதில் விருது தொகையாக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட்டது. அத்தோடு நீதி என்ற இலட்சிணைப் பொருத்தப்பட்ட கேடயம் ஒன்றும் வழங்கப்பட்டது.*

*இதனை தினத்தந்தி மதுரை பதிப்பு வெளியிட்டது.*

*ராஷ்டிரிய ஷஹாரா என்ற உருது பத்திரிகை தன்னுடைய 12 பதிப்புகளிலும் (40 இலட்சம் பிரதிகளிலும்) வெளியிட்டது. அதனுடைய லண்டன் பதிப்பிலும் வெளியிட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.*

*அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகம் (உத்திரப்பிரதேசம்) நடத்திய கருத்தரங்கம் ஒன்றில் கலந்து கொண்ட ராஷ்டிரிய ஷஹாரா பத்திரிகையின் ஆசிரியர் அஜீஸ் பர்ணி அவர்கள் “தாருல் இஸ்லாமின் இந்தச் செயல் முஸ்லிம்களை தலை நிமிரச் செய்தது. நீதியை நிலை நாட்டுவதற்கு முஸ்லிம்கள் ஆற்றி வரும் பணியை பறைசாற்றியது. பல்வேறு பணி களக்கிடையேயும் தான் இந்த விருது வழங்கிடும் நிகழ்ச்சிக்காக மதுரை சென்றதே இதனால் தான்” என்று கூறிய போது அரங்கம் அதிர்ந்தது. டெல்லியிலிருந்து வெளிவரும், மில்லி கெஜட் என்ற ஆங்கிலப் பத்திரிகை நால்வண்ண நிறத்தில் ஒரு பக்கத்திற்கு சற்று குறைவாக செய்தியை வெளியிட்டது. கட்டுரைக்குத் தலைப்பாக* First Karkare Award Presented *முதல் கர்கரே விருது வழங்கப்பட்டது எனக் குறிப்பிட்டிருந்தது. இதில் தொக்கி நிற்கும் பொருள், அடுத்தடுத்து இந்த விருது வழங்கப்படும் என்பதே! இன்ஷா அல்லாஹ் தாருல் இஸ்லாமும் இதே முயற்சியில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது.*

*பிகாரை சார்ந்த பல மனித உரிமை அமைப்புகளும் தாருல் இஸ்லாமின் இந்தப் பணியை தொலை பேசியில் பாராட்டினார்கள். பல மனித உரிமை ஆர்வலர்கள் தங்களையும் இது போன்ற பணிகளில் இணைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள். அல்ஹம்ந்துலில்லாஹ்!*

---




### இனப்படுகொலை புகழ்:

# மோடியைக் காப்பாற்றும் உச்சநீதிமன்றம்

2002ஆம் ஆண்டு குஜராத்தில் கோத்ரா என்னுமிடத்தில் வைத்து சபர்மதி எக்ஸ்பிரஸ் என்ற இரயில் வண்டி தீ பிடித்து எரிந்தது.

- இதில் 56 பேர் இறந்தார்கள்.

- இந்தப் பழியை அப்பாவி முஸ்லிம்கள் மேல் போட்டார்கள். அன்று இரவே தாங்கள் வெகுநாள்களுக்கு முன்னரே திட்டமிட்டிருந்த முஸ்லிம்களைக் கொலை செய்யும் இனப்படு கொலைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

**நீண்ட நாள் சதி**

2002 ஆம் ஆண்டு பெப்ருவரி 27ஆம் நாள் இரவு தொடங்கி இரண்டு மாதங்களாக நடந்த இனப் படுகொலைகளை எந்த அடிப்படையில் நாம் நீண்ட நாள்களுக்கு முன்னரே திட்டமிட்ட சதி என்கின்றோம்?

குஜராத்தில் பல ஆண்டுகளாக முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரம் நடந்து வருகின்றது என்பதை 1999களிலே தெளிவுபடுத்தியது, 'கம்யூனலிசம் காம்பாக்ட்' என்ற பத்திரிகை நடத்திய கள ஆய்வு.

இந்தக் கள ஆய்வுக்காக இறுதியில், குஜராத்தில் முஸ்லிம்களைக் குறிவைத்து நடத்தப்படும். 'Hate Propaganda', வெறுப்புப் பிரச்சாரங்கள் அவர்களைப் படு கொலை செய்வதற்கு, செய்யப் பட்டுவரும் ஆயுத தயாரிப்புகள், ஆகியவற்றை உடனேயே தடுத்து நிறுத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். கம்யூனலிசம் கோம்பட் என்ற பத்திரிகையின் ஆசிரியர் டீஸ்ட்டா செட்டல்வாட்.


ஆனால் யாரும் கண்டு கொள்ளவில்லை.

இரண்டாண்டுகள்கழித்து 2001 ஆம் ஆண்டில், மீண்டும் நினைவுபடுத்தி ஒரு எச்சரிக்கையை விடுத்தார். அதில், நான் எடுத்து வைத்த எச்சரிக்கைகளை யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் முஸ்லிம்களுக்கெதிராக குஜராத்தில் செய்யப்படும், அத்தனை தயாரிப்புகளும், தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. ஒரு இனப்படு கொலை எப்போதும் நடக்கலாம் என்று மீண்டும் எச்சரித்தார்.

இப்போதும் யாரும் கண்டு கொள்ளவில்லை.

2002 இல் இனப்படு கொலைகள் நடந்து முடிந்தன.

அதற்கு கோத்ரா ரெயில் நிலையத்தில் ரெயில் பெட்டி தீ பிடித்ததை ஒரு சாக்காகக் காட்டினார்கள்.



இதனால் தான் கூறுகின்றோம். 2002 குஜராத் இனப் படுகொலைகள் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட ஒன்று என்று! இதனைப் இப்போது சஞ்சீவ் பாட் என்ற குஜராத் உளவுத்துறை அதிகாரியும் உறுதி செய்திருக்கின்றனர். அதனை Larger Conspricay with official complicity மிகப் பெரிய சதி அரசு உதவியுடன் (Official Complicity) நடந்தது என்கின்றார்.

**வழக்குகள் விசாரணைகள்**

2002 இனப்படுகொலைகளின் குரூரம் குறித்து பல நூறு அறிக்கைகள் ஆய்வுகள் வெளிவந்துவிட்டன.

இதில் சம்மந்தப்பட்டவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தியாக வேண்டும்.

தண்டித்தாக வேண்டும் என முழு மூச்சுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றார் டீஸ்டா செட்டல்வாட்.

குஜராத் காவல்துறையினர் நீதித்துறையினர் அனைவரும், படுகொலைகளைச் செய்த இந்துத் தீவிரவாதிகளுக்கே உதவி செய்தனர்.

இதனால் 2002 குஜராத் இனப்படுகொலைகள் சம்மந்தப் பட்ட வழக்குகளை குஜராத்திற்கு வெளியே கொண்டு வந்திட வேண்டும் என முடிவு செய்தார் டீஸ்ட்டா செட்டல்வாட்.

மோடியின் குரூரம் நிறைந்த குஜராத்-ல் இறங்கி குஜராத் காவல்துறை, குஜராத் நீதித்துறை இவற்றிற்கு எதிராக ஆவணங்களையும் அத்தாட்சிகளையும் திரட்டினார். அவற்றை உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்தார். 1500 வழக்குகள், குஜராத்திற்கு வெளியே கொண்டு வரப்பட்டன. பெரும்பாலான வழக்குகள் மராட்டிய மாநிலத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

பல வழக்குகளில் இந்து தீவிரவாதிகள் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் பலர் தண்டனைப் பெறவிருக்கின்றார்கள். இவையெல்லாம் அதிசயமானவை. ஆனால் உண்மைகள்.

ஆனால் இந்த இனப் படுகொலைகளைத் தடுத்திருக்க வேண்டிய முதலமைச்சர் மோடி, அவரது அமைச்சர்கள், இவர்கள் அனைவரும் இந்த இனப் படுகொலைகள் நடக்க உதவியாக இருந்தார்கள். அதே போல் முதலமைச்சர் அலுவலகத்திலுள்ள பல உயர் அதிகாரிகளும் உதவி செய்தார்கள். அத்தனையும், முதலமைச்சர் மோடி கொடுத்த உற்சாகத்தில் நடந்தவையே. இவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தியாக வேண்டும் தண்டித்தாக வேண்டும். இந்த முயற்சியில் இப்போது தன்னை ஈடுபடுத்தி வருகின்றார் நங்கை நல்லாள் டீஸ்டா செட்டல்வாட்.

பலநூறு ஆவணங்களையும் அத்தாட்சிகளையும் தயார் செய்து உச்சநீதிமன்றத்திற்கு தந்து விட்டார். உச்சநீதிமன்றம் கண்டு கொள்ளவில்லை.

உச்சநீதிமன்றம் இப்போது தனது மேற்பார்வையின் கீழ் ஓர் சிறப்புப் புலனாய்வுக் குழுவை நியமித்து, குஜராத் 2002 இனப்படுகொலைகளைப் புலனாய்வுச் செய்து வருகின்றது. இந்தச் சிறப்புப் புலனாய்வுத் துறையின் தலைவராக ஆர்.கே. இராகவன் என்ற முன்னாள் மத்திய உளவுத் துறையின் இயக்குநர் நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சிறப்புப் புலனாய்வுக்குழுவிடமும் டீஸ்டா செட்டல்வாட் பல ஆவணங்களையும், சாட்சியங்களையும் தந்துவிட்டார்.

இந்தச் சிறப்பு புலனாய்வு குழுவில் அங்கம் வகிப்பவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களுக்குப் பலா பலன்களை அள்ளி வீசுகின்றார் மோடி. இந்த இனாம்களைப் பெற்றுக்கொண்டு செஞ்சோற்றுக் கடனாற்றிக் கொண்டிருக்கின்றார்கள், உச்ச நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக்குழுவினர்.

உச்சநீதிமன்றமும் அதனை கண்டு கொள்ளமாட்டேன் என்கின்றது.

## உச்ச நீதிமன்றம் புறக்கணிக்கும் மோடிக்கெதிரான உறுதியான சாட்சியங்கள்



டீஸ்டா செட்டல்வாட் தந்த முக்கிய ஆவணங்கள் பல. அவற்றுள் ஒன்று 2002 குஜராத் இனப்படுகொலைகள் நடந்த பெப்ருவரி 27,28 மார்சு 1,2,3 ஆகிய நாள்களில் குஜராத் முதலமைச்சர், மோடிக்கு எங்கெங்கே இருந்து தொலை பேசி அழைப்புகள் வந்தன. அவர் யார் யாரோடு பேசினார், என்பன.

இதில் 5000 தொலைபேசி பதிவுகளை உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வு குழுவிடம் டீஸ்டா செட்டல் வாட் தந்தார். ஆனால் இதை சிறப்புப் புலனாய்வுக்குழு கண்டு கொள்ளவே இல்லை. இதில் மோடியின் அமைச்சரவையைச் சார்ந்த அதிகாரியின் உரையாடல்களும் அமைச்சர்களின் உரையாடல்களும் அடங்கும்.

சிறப்புப் புலனாய்வுக் குழு கண்டுகொள்ளாததால், டீஸ்டா செட்டல்வாட் இன் குழுவினரே, 200 குறுந்தகடுகளில் அடங்கி இருந்ததொலைபேசி பதிவுகளை ஆய்வுசெய்து, அதை நீதிமன்றத்

தில் தாக்கல் செய்யும் "அபிட விட்" affidavit என்ற அறிக்கை யாக ஆக்கி, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

ஆனாலும் உச்சநீதிமன்றம் கண்டுகொள்ளவில்லை. இதனை நாம் மிகவும் விளக்கமாக, டிசம் பர்2010 **வைகறை வெளிச்சத்தில்** அட்டைப்பட கட்டுரையாகத் தந்திருந்தோம்.

ஆனாலும் உச்ச நீதிமன்ற மோ, சிறப்புப் புலனாய்வுக் குழு வோ கண்டு கொள்ளவில்லை.

இப்போது வெளிவந்துள்ள தகவல்கள் இவர்கள் எப்போதும் கண்டுகொள்ள மாட்டார்கள் என்பதை உறுதி செய்கின்றன.

இதனால் டீஸ்டா செட் டல் வாட் மக்களைக் காப்பாற் றிட வேண்டிய முதலமைச்சரே மக்கள் கொலை செய்யப்படு வதற்குக் காரணமாக இருந்தார் என்பதற் கான சாட்சியங்களை உலக நீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்றார்.

இந்நிலையில் பொத்துக் கொண்டு வந்தது கோபம் நமது உச்சநீதிமன்றத்திற்கு டீஸ்டாவை அழைத்து எச்சரித்தார்கள். (இதனை **வைகறை வெளிச்சம்** ஏப்பிரல் 2011 இதழில் விளக்க மாகக் குறிப்பிட்டிருந்தோம்).

### புதிய தடயங்கள்

குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி 2002 இனப்படு கொலைகளுக்கு காரணமாய் இருந்தார் என்பதற்கு எத்தனை யோ அத்தாட்சிகள் அவற்றுள் ஒன்று.

2002 பெப்ருவரி 27 ஆம் நாள் இரவு முதலமைச்சர் மோடி நடத்திய உயர் மட்ட அலுவலர் களின் சந்திப்பு.

இந்தச் சந்திப்பின் போது தான் கரசேவகர்கள், சபர்மதி எக்ஸ்பிரஸ் எரிந்ததால் இறந் ததைப் பொறுத்துக் கொள்ள முடியாது. இந்துக்கள் தங்கள் கோபத்தைத் தீர்த்துக் கொள்ளட் டும் முஸ்லிம்களுக்கு ஒரு பாடத் தைப் படித்துக் கொடுக்கட்டும். அவர்களை அனுமதியுங்கள் தடுக்காதீர்கள் என மோடி தனது அதிகாரிகளிடம் சொன்னார்.

இதனால்தான் அடுத்த நாள் முதல் தொடர்ந்து நடந்த படு கொலைகள் தங்கு தடையின்றி அனுமதிக்கப்பட்டன. ஊக்கந் தரப்பட்டன. மோடி இப்படி யொரு அறிவிப்பை அனுமதியை தனது அதிகாரிகளிடம் கூறினாரா இல்லையா? என்பது நெடும் நாள் களாக ஓர் விவாதமாக இருந்து வந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பல அதிகாரிகள் மோடி இப்படிக் கூறியது உண்மைதான் என்றார்கள். இதே அதிகாரிகள் பின்னர் பெற வேண்டியவற்றைப் பெற்றுக் கொண்டு, எங்களுக்கு நினைவில்லை எனப் பல்டி அடி த்து விட்டார்கள்.

அப்படிப் பல்டி அடித்தவர் களில் ஒருவர்தான், பி.சி. பாண்டே என்பவர். இவர் இனப்படு கொலைகள் நடந்த போது, அஹ்மதாபாத் மாநகராட்சியின் காவல்துறை ஆணையராக இருந்த வர். இவரும் இந்தக் கூட்டத்தில் (27.2.2002 இரவு) கலந்து கொண் டார். இவரும் மோடி, அந்தக் கூட்டத்தில், இந்துக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தும் போது காவல் துறையினர் குறுக்கே நிற்க வேண்டாம் எனக் கூறியதை செவிமடுத்ததாகக் கூறினார். ஆனால் விசாரணைகள் நெருங்கிய போது, பல்டி அடித்துவிட்டார். மோடி அப்படிக் கூறவில்லை என்றார்.

இதற்கு இவருக்கு அப் போது ஒருபெரும் தொகை வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு இவர் ஓய்வுபெற்றார். ஓய்வுக்குப் பின் இவருக்கு ஒரு சிறந்த பதவி வழங்கப்பெற்றது. அது குஜராத் மின்கட்டுப்பாட்டு ஆணையம் என்ற அரசு அமைப் பின் தலைவர் (Chairman Gujarath Electricity Regulatory Commission) என்ற பதவி வழங்கப்பெற்றது. இன்றளவும் எந்த வேலையுமின்றி சம்பளம், வாழ்ந்திட பங்களா, தோட்டக் காரன், பாதுகாப்பு பரிவாரம், என்றெல்லாம் தன் வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

### மோடிக்கு எதிராக சாட்சியம் சொன்னால். . . .?

இதற்கு நேர்எதிராக இன் னொரு சம்பவம். அது மோடியை எதிர்த்தால் என்ன நடக்கும் என்பதை எடுத்துக் காட்டும். ஹெரன் பாண்டியா என்றொரு அமைச்சர். இவர் 27.2.2002 அன்று நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது மோடி இந்துக்கள் கோபத்தை வெளிப் படுத்திடும் போது காவல்துறை யினர் குறுக்கே நிற்க வேண்டாம் என்று சொன்னதை செவிமடுத் தவர்.

ஆனால் இன்றளவும் இவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றே மோடி கூறி வருகின்றார்.


மோடி இந்தக் கூட்டத்தை நடத்திடும் போது ஹெரன் பாண் டியா அதே தளத்தில் மற்றொரு அறையிலிருந்தார் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளு கின்றார்கள்.

# மோடியின் மீது எஃப்.ஐ.ஆர். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்!

## டீஸ்டா செட்டல்வாட் வலியுறுத்துகின்றார்!

"குல்பர்க் சொஸைட்டி" கூட்டுக் கொலை என்பது குஜராத் இல் நடந்த 2002 இனப்படுகொலைகளில் மிகவும் கோரமானது. இந்தப் படுகொலைகள் நடக்கப் போகின்றன என்பதை மோடிக்கு காவல்துறையினர் சொன்னார்கள் (இவை நாம் வெளியிட்ட மோடிக்கு வந்த தொலைபேசி அழைப்புகள் என்ற கட்டுரை தெளிவுப்படுத்துகின்றன பார்க்க **"வைகறை வெளிச்சம் டிசம்பர் 2010"**). ஆனால் மோடி அந்தக் கொலைகள் நடக்க ஆவன செய்தார். இதனை இப்போது உச்சநீதிமன்றம் நியமித்துள்ள சிறப்பு புலனாய்வுத் துறையும், ஒத்துக் கொள்கின்றது. ஆனால் மோடியின் மீது வழக்குப் பதிவு செய்ய மாட்டோம் என்கின்றது. டீஸ்டா செட்டல்வாட் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்கின்றார். நாமும் (தாருல் இஸ்லாமும்) இதனை வலியுறுத்துகின்றோம். இதற்காக நடக்கும் மக்கள் இயக்கத்தில் நம்மையும் இணைத்துக் கொண்டுள்ளோம். மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் இதனை வலியுறுத்தி வருகின்றார்கள்.

**எம்.ஜி.எம்.**



ஆனால் ஹெரன் பாண்டியா இன்னொரு தகவலையும் சொன் னார் அது, கூட்டம் முடிந்த பின்னரும், ஒருமுறை அழைத்து இந்துக்கள் ஒரு புரட்சியைப் செய்தால் காவல் துறையினர் குறுக்கே வரவேண் டாம் என நான் கூறி இருக் கின்றேன்" என்று மோடி என் னிடம் கூறினார் என்றார்.

இதை ஹெரன் பாண்டியா என்ற அமைச்சரிடம் கூறியதற் கான காரணம், அவர்தான் களத் தில் கலவரக்காரர்களையும் அவர் களுக்கு ஆயுதங்களையும் ஒன்று திரட்டும் பணிகளைச் செய்திட பணிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் நடந்த கொலை களின் குரூரம் ஹெரன் பாண்டி யாவை உலுக்கிற்று. இவர் மே13, 2002 ஆம் ஆண்டு இந்த உண்மை களை இரண்டு நீதிபதிகளின் முன் பதிவு செய்தார் அந்த நீதிபதிகள் பி.பி. சுவாந்த், ஹோஸ்பெட் சுரேஷ் ஆகியோராவர். இவர்கள் அப் போது ஒரு தனி விசாரணையை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் பின்னர் ஹெரன் பாண்டியா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந் தார். இவரைக் கொலை செய்து விட்டு அந்தப் பழியையும் முஸ் லிம்கள் மீதே போட்டார் மோடி!

ஹெரன் பாண்டியா இப்போது உயிரோடு இல்லையே தவிர அவர் எந்த நீதிபதிகளின் முன் வாக்கு மூலங்கள் தந்தாரோ அந்த நீதிபதிகள் இப்போது உயிரோடு இருக்கின்றார்கள். இந்த இரண்டு நீதிபதிகளும் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப் பட்டுள்ள சிறப்புப் புலனாய்வு குழுவிடம் இந்த உண்மையைச் சொல்லியே இருக்கின்றார்கள். ஆனால் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் இதனை கண்டு கொள்ளவில்லை.

மேலே நாம் எடுத்துக் காட்டிய இரண்டு நிகழ்வுகளும் 27.2.2002 அன்று நடந்தவற்றை மறைத்தால் என்ன கிடைக்கும், அதைவெளியே சொன்னால் என்ன நடக்கும் என் பனவற்றைத் தெளிவுப்படுத்தும்.

**சஞ்சீவ் பாட் :**
**உளவுத்துறை குஜராத்**

இந்நிலையில்தாம், குஜராத் டி.ஐ.ஜி. காவல்துறை அதிகாரி சஞ்சீவ் பாட் என்பவரின், வாக்கு மூலம் சாட்சியங்கள் இவை வெளி வந்துள்ளன. இவரும் அந்த 27.2.2001 அன்று நடந்த உயர் மட்டக்குழுக் கூட் டத்தில் கலந்து கொண்டவர்.

நரேந்திர மோடிக்கும் குஜ ராத் கலவரங்களுக்குமிடையே தொடர்பு உண்டு. உண்மையைச் சொன்னால் குஜராத் இனப் படு கொலைகள் நரேந்திர மோடியின் மேற்பார்வையில் நடந்தவை என்பதே உண்மை!

சஞ்சீவ் பாட்



ஆனால் அவற்றையெல்லாம் உச்ச நீதிமன்றமோ அதனால் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வு குழுவோ கண்டு கொள்ள தயாராக இல்லை.

இந்நிலையில் 27.2.2002 அன்று முதலமைச்சர் நரேந்திர மோடி நடத்திய கூட்டம், அதில் அவர் பேசியது இவை பலமுறை முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன.

அதே போல் 2011 ஏப்பிரல் 22/23 ஆம் நாள்களும் திடீரென ஓர் முக்கியத்துவத்தைப் பெற்றது.

ஆமாம் இந்த நாள்களில் தாம் குஜராத் காவல் துறையைச் சார்ந்த சஞ்சீவ் பாட் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புகள் குறைத்துக் கொள்ளப் பட்டன. இவர் குஜராத் காவல் துறையின், அதிலும் உளவுத் துறையின் மூத்த அதிகாரி. குஜராத் உளவுத் துறையைச் சார்ந்த மூத்த அதிகாரிக்கு ஏன் பாதுகாப்பு? இதுமிகவும் முக்கியமான ஒரு கேள்வி.

ஏன் இந்த பாதுகாப்பு என்றால் இவர் 27.2.2002 அன்று இரவு ஆள்கொல்லி நரேந்திர மோடி நடத்திய உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுள் ஒருவர். மட்டுமல்ல, அந்தக் குழுவில் நரேந்திர மோடி வகுப்பு கலவரம் - இனப்படு கொலைகள் ஆகியவை நடக்கும் போது, காவல் துறையினர், கைகட்டி வாய் பொத்தி மௌனமாக இருந்திட வேண்டும் என இட்ட ஆணையை செவியேற்றவர்.

இத்தோடும் இவர் நிற்க வில்லை தொடர்ந்து குஜராத்தில் நடந்த குஜராத் இனப்படு கொலைகளுக்கு நேரடி சாட்சி. மனசாட்சி மிக்கவர் என்பதால் அனைத்தையும் ஆவணமாகத் இணைத்து உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப் பட்ட சிறப்புப் புலனாய்வு குழுவிடம் தந்தவர். இதனால்தான் இவருக்குச் சிறப் புப் பாதுகாப்பு. இதனை 'Y' பிரிவு பாதுகாப்பு என வகைப் படுத்துகின்றனர்.

இந்தப் பாதுகாப்பையும் மோடியின் அரசு தானாகத் தந்துவிடவில்லை. இவர் போராடி வாதாடி, பெற்ற பாதுகாப்பு. இந்தப் பாதுகாப்பு இப்போது திரும்பப் பெறப்பட்டுள்ளது.

**சிறப்புப் புலனாய்வு குழுவின் துரோகம்**

இவர் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைத்த அறிக்கை அதாவது நியாயம் கிடைக்கும் என ஒப்படைத்த அறிக்கையில் என்னென்ன அடங்கி இருக்கின்றது என்பதை சிறப்புப் புலனாய்வுக்குழு மோடியிடம் கூறிவிட்டது.

குஜராத் இனப்படுகொலையில் சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள், இதனால் இனி அரசின் முழு உதவியோடு இனப்படு கொலைகள் நடக்காது என நம்பி ஒப் படைத்த அறிக்கை யாருக்குத் தெரிய கூடாதோ அவருக்கு (மோடிக்கு) தெரிந்து விட்டது.

மோடிக்கு எப்படித் தெரியும்? என்ற கேள்வி தங்களை நோக்கி வரும் என்பதை ஆர்.கே. இராகவன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு நன்றாக அறியும். எதிர்வரவிருக்கும் இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள சஞ்சீவ் பாட்டின் அறிக்கையிலிருந்து சில பகுதிகளை ஊடகங்களுக்குத் தந்து விட் டார்கள் சிறப்புப் புலனாய்வுக் குழுவினர். தங்களைக் கேட்டால் ஊடகங்கள் மீது பழியைப் போட்டு விடலாம் எனக்கருது கின்றார்கள். மொத்தத்தில் சஞ்சீவ் பாட்டை கொலைசெய்ய தேவை யான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.

**சஞ்சீவ் பாட் மோடியால் கொலை செய்யப். . . ?**

ஓர் காவல்துறை அதிகாரி குஜராத் உளவுத்துறையின் முக்கிய அதிகாரி சஞ்சீவ் பாட் குஜராத் முதலமைச்சர் மோடியால் கொலை செய்யப்படுவாரா? என்பதே இப்போது நாட்டு மக்களை நடுங்க வைத்திடும் செய்தி.

சஞ்சீவ் பாட்டிற்கும், அவருடைய குடும்பத்திற்கும் தரப்பட்டு வந்த பாதுகாப்புகள் பின் வாங்கப் பட்டிருப்பது இதனை பகிரங்கமாக அறிவிக்கின்றது.

தனது சதியை வெளிப் படுத்தி, தனது பதவிக்கு ஆபத்தை ஏற்படுத்தினார் என்பதற்காக

பாரதீய ஜனதா கட்சியின் முக்கிய உறுப்பினரும் அமைச்சருமான ஹெரன் பாண்டியாவையே கொலை செய்ய தயங்காதவர், நரேந்திர மோடி. அவர் நிச்சயமாக சஞ்சீவ் பாட்டை கொலை செய் வார். அந்தக் கொலையை எப் படிச் செய்வார் என்பது அவரின் மூளைக்கே வெளிச்சம்.

**பணி மாற்றம்.**

இந்நிலையில் உளவுத்துறை அதிகாரியாக இருந்த சஞ்சீவ் பாட் இப்போது பணிமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

மாநில உளவுத்துறையில் நீண்ட காலம் பணியாற்றியவர், திறமையானவர். நேர்மையானவர் என்ற பட்டங்களையும், பதக்கங் களையும் பெற்றவர் சஞ்சீவ் இராஜேந்திர பாட். இவரை இப்போது மாநில காவல்துறை பயிற்சி கல்லூரிக்கு முதல்வராக மாற்றியுள்ளார்கள். Principal State Reserve Police Training College (Junagadh)

சஞ்சீவ் பாட்டிற்கு தந்து வந்த பாதுகாப்பைப் குறைத் ததிற்கு அவர் பணிமாற்றம் செய்யப் பட்டதைக் காரணம் காட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2002 இனப்படுகொலைகளின் போது மோடி பின்வரும் குற்றங்கள் செய்தது உண்மைதானாம்!

1. குஜராத் இனப்படுகொலைகள் கோத்ரா ரெயில் எரிப்பு இவை தொடர்பான முக்கிய சாட்சியங்களை அழித்தது.

2. அவரிடம் குடி கொண்டுள்ள ஓர் குரூரமான வகுப்பு வெறி.

3. வகுப்புக் கலவரங்களைத் தூண்டிடும் பேச்சுகளைப் பேசுவது.

4. சங்கப்பரிவாரத்தின் உறுப்பினர்களை அரசு வழக்கறிஞர்களாக நியமிப்பது.

5. 2002 இனப்படுகொலைகளில் போது பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்களாக அமைச்சர்களைக் காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் அமர வைத்து படுகொலைகளை இயக்கியது.

6. நியாயமாகச் செயல்பட்ட அதிகாரிகளை தண்டித்தது தொடர்ந்து அவர்களை அவமானப்படுத்தியது.

இந்தக் குற்றச் சாட்டுக்களையும் சொல்வது உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி.)

**ஆனாலும் மோடியின் மீது குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்யாதாம் இந்த சிறப்புப் புலனாய்வுக்குழு.**

**எம்.ஜி.எம்.**

ஆயிரம் கொலைகளை செய்த மோடி மிகவும் தைரியமாக சஞ்சீவ் பாட்டை கொலை செய் வார், காரணம், உச்சநீதி மன்றமும். அதனால் நியமிக்கப் பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழுவும் நிச்சயமாக அவர் தப்பித்துக் கொள்ள உதவி செய்யும். இந்த நம்பிக்கை அவருக்கு உண்டு. குஜராத் நீதிமன்றங்கள் அவர் கைகளுக்குள். இதனால்தான் அருண் ஜேத்லி உள்ளிட்ட பாரதீய ஜனதா கட்சியினர் அனைவரும் எங்களுக்கு உச்சநீதிமன்றத்தின் மீது நம்பிக்கை இருக்கின்றது என அடிக்கடி கூறுகின்றனர் போலும்.

## குஜராத் எஸ்.ஐ.டி. அங்கத்தினரின் சொத்துக் கணக்கு!

ஆர்.கே. ராகவன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழுவினர், உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்படுவதற்கு முன் எவ்வளவு ரூபாய்க்கு சொத்துக்களை வைத்திருந்தார்கள். இப்போது அவர்கள் வைத்திருக்கும் சொத்துக்களின் மதிப்பென்ன? என்பனவற்றை அறிவிக்க வேண்டும்.

2002 குஜராத் இனப்படுகொலையில் நேரடியாக தொடர்புடைய, மோடியை இவர்கள் காப்பாற்றிட மேற்கொள்ளும் தகிடுதத்தங்கள் இவர்கள் பெரிதாகக் "கவனிக்க" பட்டிருக்கின்றார்கள் என்பதை அப்பட்டமாக காட்டுகின்றது.

**எம்.ஜி.எம்.**

**சஞ்சீவ் பாட் மேற்கொண்ட நடவடிக்கைகள்**

இப்போது நாடெங்கும் சஞ்சீவ் பாட் பேசப் படுவதற்குக் காரணம். அவர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சிறப்பு மனுதான்.

இந்த மனுவில் தனக்கு உச்சநீதிமன்றம் நியமித்த சிறப்புப் புலனாய்வு குழுவின் மேல்

நம்பிக்கை இல்லை என்றும் அது மோடியைக் காப்பாற்றிட எல்லா தகிடுத்தத்தங்களையும் செய்கின்றது என்றும் தனது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். இப்போது ஊடகங்களும் நம்மைப் போன்றவர்களும் மொத்த விவகாரத்தை யும் மக்கள் மன்றத்தில் கொண்டு வந்து விட்டதால் சஞ்சீவ் பாட் கொலை செய்யப்படுவது இன்னும் சில காலம் தள்ளிப் போகலாம்.

**27.2.2002 சஞ்சீவ் பாட் கூட்டத்தில் கலந்து கொண்டாரா?**

மோடியும் அவருக்கு தூபம் போடுபவர்களும், சஞ்சீவ் பாட், 27.2.2002 அன்று இரவு நடந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனக் கூறி வருகின்றனர்.

உச்சநீதிமன்றம் சிறப்பு புலனாய்வு குழு மோடியை ஒரு முறை சந்தித்தது. அப்போது மோடியிடம் ஒரு கேள்வி. அதில் யார், யார்? 27.2.2002 இரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்? இதற்கு பதிலாக மோடி யார் யார் கலந்து கொண்டார்கள் என்பதில் சில பெயர்களைச் சொல்லிவிட்டு, யார் யார் கலந்து கொள்ளவில்லை என்பதை நீட்டி முழக்கினார். அதில் உளவுத் துறையைச் சார்ந்த ராய்கர் என்பவரும் சஞ்சீவ் பாட் -ம் கலந்து கொள்ளவில்லை என்றார்.

கேள்வி யார் யார் கலந்து கொண்டார்கள் என்பது தானே, அல்லாமல், யார் யார் கலந்து கொள்ளவில்லை என்பதல்ல. இதைப் பொட்டில் அறைந்தாற் போல் சொல்லி இருக்க வேண்டும் மோடியிடம் பேசிய மல்கோத்ரா. அவர் சொல்லவில்லை. சொல்ல மாட்டார்.

ஒரு முதலமைச்சரிடம் உச்ச நீதிமன்றத்தின் சார்பில் பேசிடும் ஒருவர், குறிப்பிட்ட தொரு கூட்டத்தில் யார், யார் கலந்து கொள்ளவில்லை எனக் கேட்க மாட்டார். இது பொது அறிவு சம்மந்தப்பட்டது. அது மோடி க்கு அந்நியமானது.

மோடி, உளவுத்துறை அதிகாரிகள், ரெய்கருகும், சஞ்சீவ் பாடும் கலந்துகொள்ளவில்லை என்று கேட்காத கேள்விக்கு சொன்ன பதில் அதிகாரிகளின் பார்வை ரெய்கார், சஞ்சீவ் ஆகியோரின் பக்கம் திருப்பின.

டீஸ்டா செட்டல்வாட் போன்ற கள போராளிகளும் இவர்கள் பக்கம் திரும்பினார்கள்.


மொத்தத்தில் மோடி எங்கள் அப்பன் குதிலுக்குள் இல்லை என்று சொன்னவரைப் போலாகி விட்டார். எல்லா உண்மைகளும் இவர்கள் வழி வெளிவந்துவிட்டன. மோடி ஒரு இனம் புரியாத பதட்டத்தில் இருக்கின்றார் என்பது இதிலி ருந்து தெரிகின்றது.

இதில் ராய்கர் என்பவர் தான் குஜராத் உளவுத்துறை தலைவர். இவர் விடுப்பில் சென்றிருந்ததால் அடுத்தக்கட்ட உயர்மட்ட உளவுத் துறை அதிகாரியான சஞ்சீவ் பாட் கலந்து கொண்டார் என்ற உண்மையும் வெளிச்சத்திற்கு வநதது.

**எஸ்.ஐ.டி. இராகவனின் தகிடுதத்தம்:**

உச்சநீதிமன்றம் குஜராத் இனப்படுகொலைகள் பற்றி விசாரிக்க நியமித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் தான் ஆர்.கே. இராகவன்.

இவர் உளவுத்துறையில் உள்ள இன்னொரு மோடி.



**மோடியைக் காப்பாற்றிடும் கர்மவீரர் ராகவன்**

இவரிடம் ஏன் இன்னும் மோடியின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை குறிப்பாக 27.2.2002 இரவு நடந்த அதிகாரிகள் கூட்டத்தில் இனப்படு கொலைகளைத் தடுக்க வேண்டாம் எனச் சொன்ன முதலமைச்சர் மோடி மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? எனக் கேட்டதற்கு, அவர் '(மோடி) அப்படிப் பேசினார் என்பதற்கு எந்த சாட்சியமுமில்லை' எனக் கூறி விட்டார். மோடியைக் காப்பாற்றிடும் முயற்சி இத்தோடு நிற்கவில்லை.

'சஞ்சீவ் பாட்' என்பவர் அந்தக் 27.2.2002 கூட்டத்தில் தான் கலந்து கொண்டதை சில நபர்களிடம் கேட்டால் தெரியும் என முக்கிய நபர்கள் சிலரின் பெயரைக் கூறியுள்ளார்.

அவர்களில் ஒருவர் கே.டி. பந்த், என்பவர். இவர் குஜராத்திலுள்ள துணை உளவுத் துறை அதிகாரி. இந்த பந்த் என்பவரை உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக்

குழுவினர் அழைத்து விசாரித்தனர் உண்மையைச் சொன்னால் மிரட்டினர். "மோடிக்கு எதிராக சாட்சியம் சொன்னால் உன்னை கைது செய்வோம். அத்தோடு இன்னும் பல அசிங்கமான விளைவுகளையும் சந்திக்க வேண்டியது வரும் என மிரட்டினார்.

சில நாள்கள் கழித்து சஞ்சீவ் பாட் - ஐ சந்தித்த கே.டி.பந்த், சிறப்புப் புலனாய்வுக் குழுவினர், தன்னிடம் நடந்து கொண்டதை இப்படிக் கூறினார்.

"I wa virtually treated like an accused and was threatened with arrest and dire consequences"

Tehelka 19.2.2011

அதாவது, "என்னை ஒரு குற்றவாளியைப் போல் நடத்தினார்கள். கைது, மோசமான விளைவுகள் என்றெல்லாம் மிரட்டினார்கள்."

அதே போல் சஞ்சீவ்பாட் இன் னும் பல தகவல்களை சொன்னார். அவற்றையெல்லாம் சிறப்புப் புலனாய்வுத்துறையிடம் கூறினார். ஆனால் ஆர்.கே. இராகவன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுத்துறையினர் பதிவு செய்யவே மாட்டேன் எனக் கூறிவிட்டார்கள். எடுத்துக் காட்டாக 'குல்பர்க் சொசைட்டி என்ற குடியிருப்பில் இருந்த எஹ்ஷான் ஜாபரி கொலை செய்யப்பட்ட வழக்கைப் பற்றி எஸ்.ஐ.டி. என்ற சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் சஞ்சீவ் பாட்டிடம் கேள்வி கேட்டபோது அவர் இதனை தனியாகப் பார்க்காமல், மொத்தமாக நடந்த சதிகளின் பின்னணியில் பார்த்தால்தான் புரியும் எனச் சொல்லி மொத்த சதியையும் விவரிக்க முன் வந்துள்ளார். ஆனால் இராகவனின் ஆட்கள் வழி மறித்து உன்னிடம் கேட்ட தற்கு மட்டும் பதில் சொல், ஏனையவற்றை நாங்கள் பதிக்க மாட் டோம் எனக் கூறிவிட்டார்கள்.

இதே இராகவனிடம் பின்னர் மனித உரிமை ஆர்வலர் கள் மோடி 27.2.2002 அன்று பேசிய தற்கு,

"சஞ்சீவ் பாட் சாட்சியாக இருக்கின்றாரே" என்ற போது "அவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதற்குச் சாட்சியமில்லை" எனக் கூறிவிட்டார்.

ஆனால் தெஹெல்கா என்ற புலனாய்வுப் பத்திரிகை சஞ்சீவ் பாட் இன் வாகன ஒட்டுனரை சந்தித்துப் பேசியது. அதில் அந்த வாகன ஓட்டுனர் கூட்டம் நடந்த இடத்திற்கு சஞ்சீவ் பாட்-ஐ அழைத்துச் சென்றதாகவும் கூட்டம் முடிந்து அவருடைய வீட்டுக்கு அவரை திரும்ப அழைத்துச் சென்றதாகவும் ஒத்துக் கொண்டார்.

இப்போது 22/4/2011 அன்று செய்தி வெளியிட்ட "தி ஹிந்து" பத்திரிகையும், இதே செய்தியை ஊர்ஜிதம் செய்கின்றது. தி ஹிந்து பத்திரிகையே "தாரா சந்த் யாதவ்" என்ற சஞ்சீய் பாட் - இன் ஓட்டுனரிடம் பேசியதாக சொல்லுகின்றது. இதைச் சொல்லி

# சுனில் ஜோஷி கொலை வழக்கில் பிரக்யா சிங் நீதிமன்றம் வந்தார்!

### சிறையிலிருந்து தப்பிப்பாரா?

பிரக்யாசிங் தாக்கூர் தனது உற்ற நண்பர் சுனில் ஜோஷியைக் கொலை செய்த வழக்கில் மத்திய பிரதேசத்தில் உள்ள திவாஸ் நகர் நீதிமன்றத்திற்கு 25.4.2011 அன்று கொண்டு வரப்பட்டார். அங்கு வந்த அவர் தனது முதுகுத்தண்டில் வலி இருப்பதாக கூறி தான் கொண்டுவரப்பட்ட ஆம்புலன்ஸ்இலேயே இருந்து விட்டார். நீதிபதியும் அவரை நீதிமன்றம் வரவேண்டும் என அழைக்கவில்லை. ஆனால் உடனேயே நீதிபதி அவரை மருத்துவமனைக்கு அனுப்பிட உத்தரவிட்டார். அவருடன் இரண்டு பெண்கள் எப்போதும் உதவிக்கு இருக்க வேண்டும் என்றும் வசதி செய்து தந்தார்.

மத்தியப்பிரதேசம் பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியில் இருப்பதால் சந்நியாசினி பிரக்யா சிங் தாக்கூர் வசதியாக வாழ்ந்திட அல்லது தப்பிக்க வகை செய்து தரப்படும் என நம்பப்படுகின்றது.

ஓர் இரத்தப் புரட்சி மூலம், சதிகளைச் செய்துவருபவர்களையும் அவர்கள் நிகழ்த்தும் தீவிரவாத செயல்களையும் நீதிபதிகள் உன்னதமான செயல்களாக பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த இந்துத்துவ தீவிரவாதிகள் இப்போது நடைப்பிலிருக்கும் அரசியல் நிர்ணயச் சட்டத்தை தூக்கிவீசிவிட்டு இந்து ராஷ்டிராவை மையமாகக் கொண்ட ஒரு பயங்கரவாத பாசிச அரசியல் நிர்ணயச் சட்டத்தைக் கொண்டு வர சதி செய்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

**எம்.ஜி.எம்.**

விட்டு, "Now there is corrabarative Evidence" "இப்போது கிளை உடையாத சாட்சியம் இருக் கின்றது. சஞ்சய் பாட் அந்தக் கூட்டத்தில் கொண்டார் என்ப தற்கு" எனவும் எழுதுகின்றது. சஞ்சீவ் பாட் 27.2.2002 கூட்டத்தில் மட்டுமல்ல அவர் இன்னும் பல கூட்டங்களிலும் கலந்து கொண் டுள்ளார்.

சஞ்சீவ் பாட் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனக் கூறிய மோடி இரண்டாவது நாள் கூட்டத்தில் அதாவது 28.2.2002 நடந்த கூட்டத்தில் அவர் கலந்து கொண்டதாகவும் சொன்னார்.

முதல் நாள் 27.2.2002 கூட்டத்தில் சஞ்சீவ் பாட் கலந்து கொள்ளாததற்கு மோடி சொன்ன காரணம், அது உயர் அதிகாரி களின் கூட்டம் என்றார். அதாவது சஞ்சீவ் பாட் அப்படி ஒன்றும் உயர் அதிகாரி இல்லை என இடித்துக் காட்டினார்.

அதே போன்ற உயர் அதிகாரிகளின் கூட்டந்தான் 28.2.2002 அன்று நடந்தது. அன்று மட்டும் அவர் எப்படி உயர் அதிகாரியானார்?

### உச்சநீதிமன்றத்தின் அநீதி

27.2.2002 அன்று மோடி கூட்டம் நடத்தினார், அதில் முஸ்லிம்களைக் காப்பாற்றாதீ ர்கள் எனக் கூறினார், என்பவை யெல்லாம் முக்கியமான சாட்சி யங்கள் தாம் மோடியைக் தண்டிக்க.

ஆனால் அதைவிட முக்கிய மான தடயங்கள், சாட்சியங்கள், மோடி அவரது அமைச்சரவை யினர் இவர்களின் தொலைபேசி அழைப்புகள். உச்சநீதிமன்றம் அவற்றின் மீதே நடவடிக்கை எடுக்கவில்லை. மட்டுமல்ல உச்ச நீதிமன்றமோ, அது நியமித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவோ நடவடிக்கை எடுக்காது என் பதைத் தெரிந்த டீஸ்டா செட்டல் வாட் 2002 இல் கொலை செய்யப்பட்ட எஹ்ஷான் ஜாபரி யின் மனைவி சபியா ஜாபரி ஆகியோர் விவகாரத்தை உலக நீதிமன்றம் கொண்டு செல்ல எடுத்த எல்லா நடவடிக்கையை யும் தடுத்து விட்டது.

உச்சநீதிமன்றம் இத்தோடு நிற்கவில்லை. உச்சநீதிமன்றத்தில் முன்னாள் சட்ட அமைச்சர் ஷாந்தி பூஷன்தான் டீஸ்டா செட்டல் வாட், சபியா ஜாபரி ஆகியோரின் சார்பில் வாதாடி வருகின்றார். இவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு விண்ணபப்த்தை வைத்தார். அது மோடியின் மீது எப்.ஐ.ஆர். என்ற முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்பதே!

நீதிபதிகள் ஏனென்று கேட்டபோது, அப்போதுதான் அரசு அதிகாரிகள் தங்கள் விளக்கங்களைத் தருவார்கள் என்றார்கள்.

சஞ்சாய் பாட் போன்ற அதிகாரிகளை மனதில் வைத்துக் கொண்டுதான் ஷாந்தி பூஷன் இந்த வேண்டுகோளை வைக் கின்றார் என்பதை தெரிந்து கொண்டு உச்சநீதிமன்றம் மோடி யின் மீது எப்.ஐ.ஆர். என்ற முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்ய ஆணையிட மறுத்து விட்டது.

இப்படி சங்கப்பரிவாரத் தை எல்லோரும் காப்பாற்றுகின்றனர்.

### ஆர்.கே. இராகவன்

இவர் தி ஹிந்து பத்திரிகை யில் அடிக்கடி கட்டுரை எழுது பவர். இவர் மற்றொரு பிரவீன் சாமியைப் போலாவார் என எதிர்பார்க்கப்படுகின்றார். அதே போல் பிரண்ட் லைன் என்ற ஆங்கில இதழிலும் எழுது கின்றார். உண்மையிலே அதிகார வட்டத்தில் இந்த 2002 இனப்படு கொலையில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்,மோடி மட்டு மல்ல மோடியின் அமைச் சரவையிலுள்ள மொத்த அமைச் சர்களுந்தான். ஆனால் 'இராக வனாள்' இதைச் செய்ய மாட்டார்கள்.

### முஸ்லிம்களின் பார்வைக்கு

மிகவும் நுணுக்கமான ஆனால் மலையை முடியைக் கட்டி இழுக்கும் முயற்சி ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது. அது தான் பல்லாயிரம் அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்த மோடியைச் சட்டத்தின் முன் நிறுத்தும் முயற்சி நீதிக்கான இந்த நெடும் பயணத் தின் ஒவ்வொரு கட்டத்திலும் கலந்திட முஸ்லிம் கள் முன்வந்திட வேண்டும்.

நீதித்துறையின் போக்கு, காவல்துறையின் போக்கு இவை நம்மை மலைக்கச் செய்தாலும், இவற்றையெல்லாம் எதிர்க்கும் நியாய உணர்வும் வீரமும், தீரமும் சகோதர சமுதாயத்தவர்களுக்கும் உண்டு என்பது நமது மிகப்பெரிய பலம்.

மோடியைத் தண்டிக்கும் வரை நமது பயணம் தொடரும்.

இன்ஷா அல்லாஹ்

**எம்.ஜி.எம்.**

ஆமாம் இந்த மோடியை அண்ணா ஹசாரே மிகவும் நல்லவர் என்றாரே எப்படி?

அங்தோன் அண்ணா ஹசாரே என்னைப் புரிந்து கொள்ளுங்கள் என்கிறாரா?

# உச்சநீதிமன்றம் வழி அம்பலத்திற்கு வரும் மோடியின் அந்தரங்கம்!

விசித்தாரமும் விசித்திரமும் நிறைந்த வழக்கொன்று குஜராத் உயர்நீதி மன்றத்தில் வந்தது.

குஜராத் மாநிலத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பிரதீப் என்.ஷர்மா என்பவர் உச்ச நீதிமன்றததில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் "குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி தன் மீது, ஐந்து வழக்குகளைத் தொடர்ந்திருக்கின்றார். காரணம் மோடியின் அந்தரங்கங்கள் அடங்கிய வீடியோ ஒன்று என்னிடமிருப்பதாகக் கருது கின்றார். மோடியின் அந்தரங் கங்கள் அடங்கிய வீடியோக் களைக் கைப்பற்றிடும் எண்ணத் தோடு என் வீட்டை அடிக்கடி சோதனை செய்கின்றர்கள். அதிலிருந்தும் மோடி அரசு தொடுத்திருக்கும் வழக்குகளி லிருந்தும் என்னை காப்பாற்றிட வேண்டும்" என பிரதீப் என். ஷர்மா அவர்கள் உச்சநீதிமன்றத் தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

என் மீது மோடி அரசு தொடுத்திருக்கும் வழக்குகள் நான் எங்கே அந்த அந்தரங்க வீடியோக்களை வெளியே புழக்கத்தில் விட்டு விடுவேனோ என்ற அச்சத்தில் தொடுக்கப் பட்டவை! இவற்றை குஜராத் அல்லாத வேறு மாநிலங்களுக்கு மாற்றிட வேண்டும் என்றும் ஐ.ஏ. எஸ். அதிகாரி உச்சநீதிமன்ற த்தைக் கேட்டுக் கொண்டார்.

மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்ச நீதி மன்றம், மனுவில் தரக்குறைவான Character Assination தனிமனிதர் விமர்சனம் இடம் பெற்றிருக் கின்றன. அவற்றை நீங்கள் நீக்கிட வேண்டும் எனக் கூறியது. இதற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி பிரவீன் என். ஷர்மா அவர்களின் சார்பில் வாதாடிய கன்சால்வஸ் அவற்றை நீக்கிட முடியாது. அவற்றை நாங்கள் நீட்டி முழக்காமல் வேண்டுமானால் விட்டு விடு கின்றோம் என்றொரு வாக் குறுதியைத் தந்தார்.

நீதிபதி லோடா இந்த வாக் குறுதியை நீதிமன்ற ஆவணங்களில் பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார். அப்போது அவர் கூறியவை மிகவும் பாரதூரமான வை அவற்றை அப்படியே இங்கே பதிவு செய்கின்றோம்.

"Character assianation is not permitted. Are you relying on these allegations? You can not do that. These are serious allegations."

அதாவது, தனிமனித விமர் சனங்கள் அனுமதிக்கப் படாதவை. நீங்கள் இந்த குற்றச்சாட்டுகளில் உறுதியாக இருக்கின்றீர்களா? நீங்கள் அதனை செய்ய முடியாது. இவை மிகவும் பாரதூரமான குற்றச் சாட்டுகள்.

நீதிபதியின் இந்தச் சொற்கள் மோடியின் அந்தரங்கங்கள் அசிங் கமானவை. வெளியே சொல்ல முடியாத அளவுக்கு வெட்கக் கேடானவை என்ற உண்மைகளை உரக்க முழங்குகின்றன.

அதனை மனுவாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக் கின்றார்கள் என்றால், அதில் உண்மைகள் இருக்கின்றன என் பதையே தெளிவுப்படுத்து கின்றன. உச்ச நீதிமன்ற நீதிபதி தான் மோடியைக் காப்பாற்றிடும் அள வில் சொற்களைப் பிர யோகித் திருக்கின்றார் என்பதை யும் உணர்த்துகின்றது.

ஐ.ஏ.எஸ். அதிகாரி பிரவீன் என். ஷர்மா மோடிக்கு தன்மீது இரட்டிப்புக் கோபம் உண்டு. காரணம், என்னுடைய சகோதரர் குல்தீப் ஷர்மா, குஜராத் காவல் துறையிலுள்ள ஓர் மூத்த அதிகாரி, அவர்தான் இர்ஷத் ஜஹான் என்ற முஸ்லிம் இளம் பெண்ணை என்கவுண்டர் என்ற பெயரில் கொலை செய்தார்கள் என்பதை கண்டுபிடித்தவர் என் றும் தன் மனுவில் குறிப்பிட்டி ருந்தார்.

இந்த குல்தீப் ஷர்மா அப் போது குஜராத் உளவுத்துறையின் தலைவராக இருந்தார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் வழக்கை ஏற்க மறுத்தனர். குஜராத் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல பணித்தனர்.

ஆனால் பிரவீன் என். குமாரின் சார்பில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் காலின் கன் சால்வஸ் முடியாது என்று கூறிவிட்டார். இருக்கும் சட்டங்களின் படி இதுபோன்ற வழக்குகளை உச்ச நீதிமன்றம் ஏற்றாக வேண்டும் என வாதிட்டார்.

இறுதியில் உச்சநீதிமன்றம் வழக்கை ஏற்றுக் கொண்டு மோடிக்கு (நோட்டீஸ்) தாக்கீது அனுப்பியுள்ளது.

தனது அந்தரங்கங்களைத் தெரிந்து கொண்டவர் மீது ஐந்து வழக்குகளை தொடுக்கும் நீதி மிக்க ஆட்சியை நடத்துகின்றார் மோடி

இர்ஷத் ஜஹான் என்ற பெண்ணைக் கொலை செய்தது போலி என்கவுண்டரில் என்பதை கண்டறிந்தவர் மீதும் வழக்கு.

இந்த மோடி நல்ல ஆட்சியாளராம் கூறுகின்றார் அண்ணா ஹஸாரே!

ஆதாரம்: தி ஹிந்து 13.5.2011

# “என் வழி இந்துத்துவா வழி”

“ஜெயலலிதா மாறி விட்டார். மாறி விடுவார்” என்று பிரச்சாரம் செய்து தமிழக மக்களை நம்பவைத்த வர்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டார் ஜெயலலிதா.

வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாக தன் நிஜ முகத்தை மீண்டும் பகிரங்க மாகக் காட்டி விட்டார் ஜெயலலிதா.

ஆம்! நரவேட்டை நாயகன் நரேந்திர மோடிக்கு மீண்டும் சிவப்புக் கம்பள வரவேற்புத் தந்து “என் வழி இந்த வழி” என்று திட்ட வட்டமாகச் சொல்லி விட்டார் ஜெயலலிதா.

முன்பு துக்ளக் இதழின் ஆண்டு விழாவில் பங்கேற்பதற்காக தமிழகம் வந்த மோடியை தன் போயஸ் தோட்ட வீட்டுக்கே அழைத்து திகட்ட திகட்ட 46 வகை உணவுகளுடன் விருந்து வழங்கினார்.

இந்திய தேசமே மோடியின் இனப்படு கொலையைக் கண்டித்துக் கொண்டிருந்த போது மோடிக்கு விருந்து கொடுத்து உபசரித்து தார்மிக ஆதரவும் உற்சாகமும் தந்தவர் இந்த ஜெயலலிதா.

குஜராத்தில் முஸ்லிம்களைக் கூட்டங் கூட்டமாகக் கொன்றொழித்து வரலாறு காணாத ஓர் இனப்படு கொலையை அரங்கேற்றிய பின்னர் தப்பிப்பிழைத்த முஸ்லிம்களை அகதிகள் முகாமில் அடைத்து வைத்து விட்டு நடத்தப்பட்ட தேர்தலில் மோடி வென்ற போது குஜராத்துக்குச் சென்று மோடியின் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்ட (பா.ஜ.க. அல்லாத கட்சியைச் சேர்ந்த ஒரே) நபர் இந்த ஜெயலலிதா. அப்போது ஜெயலலிதா தமிழக முதல்வர்.

ஜெயலலிதா திருந்தி விட்டார். மதச் சார்பின்மையைக் காக்கும் மங்கையாகத் திகழ்வார் என்றெல்லாம் சிலரை விட்டுப் பேச வைத்தார் ஜெயலலிதா. அவர்களும் அதை நம்பியோ நம்பாமலோ பேசினார்கள். மக்கள் நம்பினார்கள். தேர்தலில் அமோக ஆதரவளித்தார்கள். அறுதிப் பெரும்பான்மையை வழங்கினார்கள். ஆனால் ஜெய லலிதா மீண்டும் ‘இந்துத்துவா’ எனும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டார்.

ஜெயலலிதா பதவி ஏற்ற போது மோடிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது மக்கள் பணத்திலிருந்து.

மோடியின் கட்சியான பாஜக இந்தத் தேர்தலில் அதிமுக அணியில் இடம் பெறவில்லை. மாறாக அதிமுகவை எதிர்த்து பல இடங்களில் போட்டியிட்டது பா.ஜ.க. அப்படியிருந்தும் மோடி வந்து வாழ்த்துகிறார் ஜெயலலிதாவை.

மோடியின் பதவி ஏற்பு விழாவில் பங்கேற்ற பா.ஜ.க. அல்லாத ஒரே முதல்வர் ஜெயலலிதா. ஜெயலலிதாவின் பதவி ஏற்பு விழாவில் அதிமுக கூட்டணி



யில் இடம் பெறாத பா.ஜ.க.வின் முதல்வரான மோடி பங்கேற்கிறார்.

இந்த இணைப்பை தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

2002 ஆம் ஆண்டு குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக வரலாறு காணாத இனப்படுகொலையை நடத்திய நரேந்திர மோடி மீது அங்குள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் கூட வெளிப்படையாக குற்றச் சாட்டுக்களை கூறி வருகின்றனர்.

மோடி கைது செய்யப் படுவதற்கான சூழல் மெல்ல மெல்லக் கனிந்து வரும் நிலையில் அவரை தமது பதவியேற்பு விழாவில் பங்கேற்க வைத்திருக்கிறார் ஜெயலலிதா.

தேவையற்ற இந்தச் செயல் மூலம் அனாவசியமான ஒரு பதற்றத்தை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறார் ஜெயலலிதா.

தமிழகத்தில் தேவையற்ற பதற்றம் ஏற்பட அதன் முதல்வரே காரணமாகியிருப்பது அநீதியானது.

# குஜராத்தில் இந்துக்களாக மாறி வரும் முஸ்லிம்கள்!

குஜராத்தில் இந்துக்களுக்கு மட்டுந்தான் வேலைகள் வழங்கப்படும் என்பதை மோடி உரக்க முழங்கினார். அதனையே அங்குள்ள நிறுவனங்கள் செயலில் காட்டி வருகின்றன.

இடங்களை வாங்கி விற்பவர்களின் குழுமம் நாங்கள் முஸ்லிம்களுக்கு இடங்களை விற்பனை செய்யமாட்டோம் என அறிவித்தது.

கட்டடங்களைக் கட்டும் ஒப்பந்தக்காரர்கள், முஸ்லிம்களை, நாங்கள் வேலைக்கு அமர்த்திட மாட்டோம் எனக் கூறிவிட்டார்கள்.

ஒரு காலத்தில் முஸ்லிம்களின் கைகளிலிருந்த "செயற்கை வைரம்" தொழிலும் முஸ்லிம்களின் கைகளிலிருந்து பிடுங்கப்பட்டு விட்டது.

இப்போது வயிறு பிழைக்க வேண்டும் என்றால் இந்துவாக மாறிடவேண்டும் என்ற நிலை.

**மெஹ்பூப் பத்தான் இப்போது ஜெயந்தி பாட்**

அண்மையில் ஆங்கில பத்திரிக்கையான இந்தியன் எக்ஸ்பிரஸ் தனது குஜராத் பதிப்பில் முதற்பக்கத்தில் ஒரு செய்தியை வெளியிட்டது. அந்தச் செய்தி.

மெஹ்பூப் பத்தான் என்ற முஸ்லிம் சூரத்தின் வைரதொழிற்சாலையில் வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக தனது பெயரை ஜெயந்தி பாட் என்று மாற்றிக் கொண்டான்.

இவனை முஸ்லிம் எனத் தெரிந்து கொண்ட இந்துத்துவ தீவிர வாதிகள் இவரை கொலை செய்து விட்டார்கள். இந்தக் கொலையை ஓர் பண்ணைத் தோட்டத்தில் வைத்துச் செய்தார்கள்.

குஜராத் இல், என்கவுண்டர், கூட்டங் கூட்டமாக முஸ்லிம் குடும்பங்களைக் கொலை செய்வது, எல்லாம் இப்போது பண்ணைகளில் வைத்துதான் நடக்கின்றன.

இவர் பிணமாகக் கிடப்பது மூன்றாவது நாள் குஜராத்-யிலுள்ள "பல்சானா" என்ற இடத்திலுள்ள காவல்துறையின் பார்வைக்கு வந்தது. அவர்கள் ஜெயந்தி பாட் இன் (மஹ்பூப் பத்தான்) பிணத்தை இரண்டு நாள் பிணவறையில் வைத்திருந்தார்கள்.

மூன்றாம் நாள் ஓர் அவரை போட்டோ எடுத்துவிட்டு இந்து முறைப்படி எரித்து விட்டார்கள்.

இதனிடையே மஹ்பூப் பத்தான் (ஜெயந்தி பாட்) இன் குடும்பத்தவர்கள் அவரை காணவில்லை என்றொரு புகாரை காவல் துறையில் பதிவு செய்தார்கள். வழக்கம்போல் தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனக் காவல் துறையினர் கூறினர்.

அப்போதுதான் பத்திரிகைகளில் வந்த செய்தியைப் பார்த்தார்கள், மஹ்பூப் பத்தானின் குடும்பத்தவர்கள். காவல் துறையை அணுகினார்கள். காவல்துறையினர் நாங்கள் இந்து என்பதனால் இந்து முறைப்படி எரித்தோம் எனக் கூறிவிட்டார்கள்.

பின்னர் மெஹ்பூப் பத்தான் என்ற ஜெயந்தி பாட்க்கு வைர தொழிற்சாலையை நடத்திக் கொண்டிருப்பவர் தந்திட வேண்டிய பணம் பற்றிய பேச்சு வந்தது, விவகாரமானது.

அப்போது மெஹ்பூப் பத்தானின் குடும்பம் முற்றாக இந்துவாக மாறி இருப்பது தெரிய வந்தது.

**முஸ்தாக் இப்போது முகேஷ்**

மெஹ்பூப் பத் தானின் மகனின் முன்னாள் பெயர் முஸ்தாக் இப்போது அவனது பெயர் முகேஷ். அவருடைய மகள் ஷமீமா இப்போது ஷர்மிளா. இவையெல்லாம் முறைப்படி மாற்றப்பட்டு பதிவும் செய்யப்பட்டுள்ளது.

இப்போது ஜெயந்தி பாட் இன் குடும்பம் உண்மையில் முஸ்லிம் குடும்பம் என்பதைத் தெரிந்து கொண்ட வைர தொழிற்சாலையின் முதலாளி மெஹ்பூப் பத்தானுக்குத் தந்திட வேண்டிய எந்தப் பணத்தையும் தர மாட்டேன் எனக் கூறிவிட்டார்.

இதனை வைர வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ரோகித் மேதா (Rohit Metha)ன் பார்வைக் கொண்டு சென்ற போது அவர் என்னால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் நாங்கள் இப்படிச் பெயரை மாற்றி வேலையில்

சேர்ந்த முஸ்லிம்களைக் கண்டு பிடித்து வெளியேற்றுவோம் எனக் கூறி விட்டார்.

உண்மையை அறிந்த முஸ்லிம்கள் செய்வதறியாது திணறுகின்றனர். இனி முஸ்லிம் கள் குஜராத்-ஐ விட்டு வெளி யேறிட வேண்டும் என்பதுதான் நிலை.

இந்த உண்மைகளை அறிந்த சில மூத்த எழுத்தாளர்கள்.

முஸ்லிம்களைக் கையறு நிலைக்குக் கொண்டு வந்துவிட்ட காங்கிரஸ்-ஐ குறை கூறுகின்றனர்.

நாம், முஸ்லிம்களை மோடிகளிடமிருந்து பாதுகாக்க விரும்புபவர்களை தாருல் இஸ்லாமை நோக்கி அழைக்கின்றோம். அப்படி நீங்கள் முன் வருகின்றபோது இந்த நாட்டிலுள்ள எல்லோரும் உதவிக்கு வருவார்கள்.

வெற்றி (இன்ஷா அல்லாஹ்) நமதே!

**செய்தி ஆதாரம் : Millgazettee**
***16-30 ஏப்பிரல் 1 2011***

எம்.ஜி.எம்.


**பெண்களுக்கு அரிய வாய்ப்பு, கோடை கால பயிற்சி !**

**அஸ்ஸய்யிதா பாத்திமா (ரலி) நிஸ்வான்**

ஸ்தாபிதம்: 1986

**மகளிர் இஸ்லாமிய ஷரீஅத் கலைக்கல்லூரி**

(கும்பக்கரை பிரிவு) மதுரை ரோடு, **பெரியகுளம் - 625 601 தேனி** Dt.
College Ph: 04546 - 232716, Cell: 94429 89786
Corres : 231716, Cell: 94433 31716, Tel-Fax: 0091 - 4546 - 230716

கல்லூரி வளர்ச்சி, செயல்பாடு அறிய www.fathimaniswan.com பார்வையிடுங்கள்

உலககலைகள் பயிலும் மாணவியர்கள், திருமணம் நடைபெற உள்ளவர்கள், புதிதாக இஸ்லாத்திற்கு வந்தவர்களுக்கு அறிய வாய்ப்பு! ( கோடைகால வெயில் தாக்கத்தை தவிர்க்க சோலைவன சூழ்நிலையில்) நகரின் மையப் பகுதியில் அரபிக்கல்லூரி நடைபெறுகிறது. **3 மாதம், 1 வருடம், 3 வருடம், (ஆலிமா, ஹாபிழா ) பாடத்திட்டங்கள் 40 நாள் ஏப்ரல், மே, ஜுன் கோடை வகுப்பு )** புதிய மாணவியர் எல்லா காலங்களிலும் சேர்க்கப்படும்.

மார்க்க கல்வியும் உலகக் கலையும், பயன்தரும் கைத்தொழிலும் ( கம்ப்யூட்டர், டைப்ரைட்டிங், Spoken English தையல், பின்னல், கைவினை, சமையற்கலை) நல்லொழுக்கப் போதனை ஒருங்கிணைந்த கல்விக்கூடம். பெண்கள்மக்கள் வாழ்வில் உலக கலைகள் எவ்வளவு பெற்றிருந்தாலும் முழு தீனுடைய முறையான வாழ்க்கை வராது. ஷரீஅத்படி வாழ மார்க்ககல்வி அவசியம். (தஜ்வீத் முறைப்படி குர்ஆன் ஓதவும், வாழ்விற்கு தேவையான நற்பண்புகள் கற்றுக் கொள்ள பயிற்சி அளிக்கப்படுகிறது) தமிழகத்திலேயே முதல்முறையாக அனைத்து வசதிகளுடன் உயர்தர உணவு, ( டீ, டிபன் ) மருத்துவ வசதி, விளையாட்டு பயிற்சி, காற்றோட்டமான சூழ்நிலை உள்ளது விடுதியில் சேர்ந்து பயிலும் மாணவியர்க்கு 3 செட் உடை மட்டும் எடுத்து வந்தால் போதும் மற்ற அனைத்து வசதிகளும் கல்லூரியில் உள்ளது.

**ஈருலக நன்மைகள் பெற அழைக்கின்றோம்**

நமது நிஸ்வான் மதரஸா 25 ஆண்டுகளாக பல நூறு பெண்களை ஹாபிழாக, ஆலிம்களாக உருவாக்கி மிகச்சிறப்பாக இயங்கிவருகிறது. இடப்பற்றாக் குறையை சரிசெய்வதற்காக மதுரை மெயின் ரோட்டில் (NH) வாங்கப்பட்ட விசாலமான இடத்தில் தமிழகத்திலேயே முதல்முறையாக ஆண்கள், பெண்கள் தனித்தனியாக தொழுகை கூடம் கட்டப்பட்டு பிராயணத்தில் உள்ளவர்களின் வசதிக்கேற்ப அனைத்து ஏற்பாடுகளும் செய்து சிறப்பாக இயங்கி வருகின்றது மேலும் சுற்றுப்புறச் சுவர் வகுப்பறைகள் கட்டுவதற்கு முயற்சித்து வருகின்றோம்.

**நன்கொடை வழங்குங்கள்**

இம்மை, மறுமையில் நிரந்தரமான நன்மைபெற ஏழை மாணவியர் கல்விக்கும், கல்லூரி வளர்ச்சிக்கும், வகுப்பறை கட்டிட பணிகளுக்கும் உதவிட விரும்புவோர், நன்கொடை, கீழ்க்கண்ட பெயரில் அனுப்பலாம். ( வசூல்தாரர் நியமனம் இல்லை நேரில் வந்து பார்வையிட்டும், கட்டிட பணிகளுக்கு பொருளாகவும் உதவலாம் ) ஜக்காத் தொகை அனுப்பினால் ஜக்காத் தொகை என்று குறிப்பிடவும். கல்லூரி வளர்ச்சி, கட்டிட பணி முழுமை பெற அனைவரின் ஒத்துழைப்பும், துஆவும் வேண்டுகிறோம். சமுதாய உணர்வு, தர்ம சிந்தனை உள்ளவர்களிடம் மத்ரஸா வளர்ச்சியை அறிமுகப்படுத்துங்கள்.

**ASSAYYIDHA FATHIMA (RALI) NISWAN**


(Exit to Kumbakarai) Madurai Road, PERIYAKULAM - 625 601. Theni Dt.
BANK A/C No.... ASSAYIDHA FATHIMA (RALI) NISWAN - PERIYAKULAM.... KVB. A/c No. 11761152054

26-ம் ஆண்டு 12-வது பட்டமளிப்பு விழா இன்ஷா அல்லாஹ் ஜுலை மாதம் நடைபெறும்.
கல்லூரியி புதிய வெளியீடு மலர் நன்கொடையாளர்களுக்கு அனுப்பப்படும்.




வெளிவந்த மூன்றே மாதங்களில் முதல் இரண்டு பதிப்பின் பிரதிகள் விற்று தீர்ந்தன

**தற்போது பரபரப்பான விற்பனையில் (தமிழில் . . . )**



# கர்கரேயைக் கொலை செய்தது யார்?



**விரிவாக்கப்பட்ட மூன்றாம் பதிப்பு விற்பனையில்**

**விலை ரூ. 250/-**

தொடர்புக்கு : **வேர்கள் வெளியீட்டகம்,**

52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் -7, மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 044-45566909

தினமணிக்கு மறுப்பு:

# கோத்ரா: உண்மைகளின் பின்னணிகள் என்ன?

(ஒரு மீள் பறவைப் பார்வை)

## ப. சையத் அஹ்மத்

கோத்ரா ரயில் பெட்டி எரிப்பு பற்றிய 'தீர்ப்பும் தீர்வும்' தலையங்கம் (25.2.2011) படித்தேன் மீளவும் சர்ச்சைகள் எழுப்பும் விதத்தில் உள்ளது. 9 ஆண்டுகளுக்குப் பிறகு தீர்ப்பு வெளியாகியுள்ளது. பின்வரும் சான்றுகளிலிருந்து நடுநிலையில் சந்தித்தால் உண்மைகள் பளிச்சென்று தெரிய வரும்.

குஜராத் இனப்படுகொலைகளை நிறைவேற்றவே கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் நிறைவேற்றப்பட்டது என்கிற சந்தேகம் ஆரம்பம் முதலே இருந்தது என்று சில பொறுப்பான காவல்துறை அதிகாரிகள் கருதி, தட இயல் வல்லுநர்களின் அறிக்கை வெளியானவுடன் அவ்வளவு எளிதில் அதனைப் புறக்கணிக்க இயலாது என்று கூறி இருக்கின்றனர். தடவியல் வல்லுநர்களின் அறிக்கை ரெயில் பெட்டியின் உள்ளிருந்து சிலர் நெருப்பிட்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. பெட்டியில் எரி பொருளை ஊற்றி எரித்தவர்கள் அப்பாவி பயணிகள் அல்ல. வேண்டுமென்றே செயல்படும் திட்டமிட்ட சதிகாரர்களின் வேலையாக இருக்கலாம். அவர்கள் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதியான கோத்ரா ரயில் நிலை யம் வந்ததும் இந்த நெருப் பூட்டும் பணியைக் கச்சிதமாகச் செய்து பழியை முஸ்லிம் மீது சுமத்தி விட்டார்கள்.

இந்தத் தீர்ப்பில் நீதிபதி, ரயில் பெட்டி எஸ்6 இல் சிலர் நுழைந்து அதிக அளவில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

கரசேவகர்கள் என்ற பெயரில் ரயிலில் வந்தவர்கள் ரத்லம், டோஹா போன்ற ரயில் நிலையங்களிலும் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர். கோத்ரா ரயில் நிலையம் வந்ததும் அங்கிருந்த வயதான முஸ்லிம் பெரியவரின் டீக்கடையில், சாப்பிட்டுவிட்டுப் பணம் தராததால் பிரச்சனை ஏற்பட்டு விட்டது. அந்த வயதான வரின் தாடியைப் பிடித்து இழுத்து பயங்கரமாகத்தாக்கி இருக் கிறார்கள். தடுக்க ஓடிவந்த அவரின் பாதுகாப்புக்கு வந்த மகளை தூக்கி ரயில் பெட்டியில் போட்டுக் கொண்டதாக தகவல். (அவுட் லுக் 18.3.2002). அதனால் தான் சிறு கூட்டம் கூடி ரயில் மறுபடியும் அபாயச் சங்கிலியால் இழுத்து நிறுத்தப் பட்டது. இந்த களேபரத்தில் ரயில் பெட்டி 5,6ம் தாக்கப்பட்டன.

பாசிச மனம் கொண்ட விஸ்வ ஹிந்து பரிஷத் ஆட்களே கோத்ரா ரயில் பெட்டி எரிப்பின் பின்னணியில் இருக் கிறார்கள். அவர்களின் அடாவடித் தனமே எல்லா பிரச்சனைகட்கும் மூலவித்தாகும். துரதிருஷ்ட வசமாக மேற்கண்ட செய்திகள் நீதிமன்ற எல்லைக்குள் கொண்டு வரப் படாமல் காவல்துறையும் இரயில்வே துறையும் இணைந்து இருட்டடிப்புச் செய்துவிட்டார்கள். அதனால்தான் வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை நிருபர் பதிவு செய்த ஒரு செய்தியை டைம்ஸ் ஆஃப் இந்தியா தனது 11.3.2002 பக்கம் 14ல் பதிவு செய்துள்ளது இவ்வாறு, 'கோத்ராவும் குஜராத் படுகொலைகளும் நவீன அடையாளங்கள். இதனால் இந்த உண்மைகள் வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டும். கோத்ரா ரயில் பெட்டியில் எரிந்தவர்கள் 58 பேர். இது முஸ்லிம்கள் திட்டம் போட்டு நிறைவேற்றிய ஒன்றல்ல. மாறாக, இது 'ஹிந்து செயல்வீரர் களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒரு விவாதத்தால் தூண்டப்பட்ட தேயாகும். இவர்கள் கட்டுக்கடங்காமல் போய்விட்டனர் என்கிறது வாஷிங்டன் போஸ்ட். மேலும் சபர்மதி எக்ஸ்பிரஸில் வட இந்தியாவில் நுழைந்த இரண்டு நாட்களில் பெட்டி எஸ்6 ல் இருந்த இந்து அமைப்பைச் சார்ந்தவர்கள் குண்டர்களைப் போல் செயல்படத் தொடங்கி விட்டனர். முஸ்லிம் பெண்கள் அணிந்திருந்த முக்காடு களைப் பிடித்து இழுத்துப் போட்டார்கள். அவர்களோடு சேர்ந்து இராம பஜனைப் பாடாததால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர்களை ரயிலை விட்டும் வெளியேற்றினார்கள். வழி நெடுக, டீ, சிற்றுண்டிகட்கு காசு தராமல் ஏமாற்றினார்கள். இந்த ரவுடி பயணிகளின் புகழ்' அந்த ரயில் பிப்ரவரி 27 அன்று கோத்ராவில் நுழையும் முன்னரே

ரயில் நிலையமெல்லாம் பரவி இருந்தது என்கிறது வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் மார்ச் 6ம் தேதி பதிப்பு 2002). இதனை டைம்ஸ் ஆஃப் இந்தியாவும் எடுத்துப் போட்டது. இறுதியில் குறிப்பிட்ட வாசகம் இது: காவல்துறை அதிகாரிகளும் ரயில்வே துறை அதிகாரிகளும் முதல் கல்லை யார் விட்டெறிந்தது என்பது தெரியவில்லை என்றே குறிப்பிட்டுள்ளார்கள் அந்தச் சமயத்தில். ஆனால் அரசு அதிகாரிகள் முஸ்லிம்கள் ஒரு மெத்தையில் எரிபொருளை ஊற்றி 5,6 பெட்டிகளுக்கிடையே எரித்தார்கள் என்று கூறி உள்ளார்கள். (டைம்ஸ் ஆஃப் இந்தியா, மும்பை பதிப்பு, மார்ச் 11, 2002 பக்கம் 14). மேற்படி இராம சேவகர்கள் சட்டப்படி அனுமதிக்கப்பட்டவர்களைப் போல் மூன்று மடங்கு நபர்கள் பெட் டியை அடைத்துக் கொண்டு பயணம் செய்திருக்கிறார்கள். டிக்கட் இல்லாமல் பயணம் செய்ததால் டிக்கட் பரிசோதகர்களையும் பெட்டியினுள் நுழைய விடாமல் பலவந்தமாக வெளியேற்றினார்கள். இங்ஙனமிருக்க எவ்விதம் முஸ்லிம்கள் உள்ளே சென்று எரிபொருளால் (60 லிட்டர்) அளவுக்கு எரியூட்ட முடியும் என்பதை நன்கு சிந்திக்க வேண்டும்.

கோத்ரா நிகழ்வின் போது மத்தியிலும் மாநிலத்திலும் பி.ஜே.பி.யின் ஆட்சி நடந்தது என்பதை மறக்கலாகாது. கோத்ரா போன்ற இரயில்வே விபத்து நடந்தால் ரயில்வே நிர்வாகம் 48 மணி நேரத்தில் ஒரு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். (ஆதாரம் : Railway Act Section 113-1989 -2407 1989) அகில உலகத்தையே குலுக்கிய இந்த விபத்தில் இரயில்வே நிர்வாகம் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. மாறாக குஜராத் மோடியின் போலீஸ் என்ன சொன்னதோ அதையே இரயில்வே போலீஸும் சொன்னது. காரணம் நிதிஷ் குமார்தான் (பிஜேபி அரசின் ரயில்வே அமைச்சர்). குஜராத் காவல்துறை முதல்வர் மோடி மற்றும் அமைச்சர்கள் பச்சைக் கொடி காட்ட அவர்களின் ஏவல் துறையாக மாறிவிட்டதை 'தெஹல்கா' தோலுரித்துக் காட்டி விட்டது. இதில் ஒரு கொடுமை யிலும் கொடுமை என்னவென்றால் அப்போதைய ரயில்வே அமைச்சர் நிதிஷ்குமார் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்க்கவில்லை. அவரும் குஜராத் காவல்துறை என்ன சொன்னதோ அதையே வாந்தி எடுத்தார். இன்று பீகார் முதலமைச்சராக அரியணை முஸ்லிம்களின் தயவால் ஏறியுள்ளார். அன்று எல்லா வகையிலும் ஆர்.எஸ்.எஸ்., சங்கப்பரிவாரங்கட்குப் பக்கபலமாக இருந்தவர் என்பதை மறுப்பதிற்கில்லை. மேற்கண்ட முக்கியத் தகவல்களை இன்றைய தீர்ப்பில் சிறப்பு நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொண்டதா? என்பது தெரியவில்லை. இரயில்வே மந்திரியாக இருந்து கொண்டு கோத்ரா - நிகழ்வு மீது ஒரு விசாரணைக்கூட நிதிஷ்குமார் நடத்த முன்வரவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது. பின்னாளில் லாலு பிரசாத் யாதவ் இரயில்வே மந்திரியானதும் கோத்ரா ரயில் எரிப்பின்மீது யு.சி. பானர்ஜி தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் நியமன உத்தரவுதான் அவரது முதல் கையொப்பமாகும்.

இரயில் பெட்டிகளில் படுக்கைகளை முன்பதிவு செய்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, ஏதேனும் அவசிய நடவடிக்கைகளை இரயில்வே அதிகாரிகள் எடுத்திருந்தால் கூட ரயில் பெட்டி எரிப்பும் அதனைத் தொடர்ந்து இனப் படுகொலைகளும் தவிர்க்கப்பட்டிருக்கும் எனச் சொல்லப்படுகிறது. நிதிஷ்குமாரின் பொறுப்பற்ற தன்மையையும் பிஜேபி அரசின் அடிவருடியாக மாறிப்போனதும் ஜீரணிக்க முடியாத விஷயங்கள். டிக்கட் பரிசோதகர்கள் தங்கள் பணியைச் செய்ய விடாதவாறு பெட்டிகளில் சுமார் 200 பேர்கள் திரிசூலத்துடன் பயணித்திருக்கிறார்கள். மேலும் பெட்டிகளில் கரசேவகர்கள வரம்பு மீறி நடக்கிறார்கள் என்கிற அறிவிப்பு எட்டியுங் கூட ரயில்வே போலீஸ் கண்டு கொள்ளவில்லை. ரயில்வே நிர்வாகம் எஸ்.5, எஸ்.6, எஸ்.7 ஆகிய மூன்று பெட்டிகளையும் கொளுத்தி விட்டார்கள் என்று கூறியது. ஆனால் அன்றிரவே எஸ்.5, எஸ்.7 ஆகிய பெட்டிகள் 11 மணிக்கு சபர்மதி எக்ஸ்பிரஸின் ஒரு பகுதியாகச் சுமந்து சென்றிருக்கிறது. முன்னுக்குப் பின் முரணாக அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆனால் எஸ்.6 பெட்டி மட்டுமே கோத்ரா வில் நின்று கொண்டிருக்கிறது. இப்படியொரு வேடிக்கை விநோதம் பாருங்கள்! இவ்வளவு நடந்தும் இரயில்வே நிர்வாகம் மருந்துக்குக் கூட மேற்படி பெட்டிகளின் புகைப்படம் எதுவும் எடுத்து வைத்துக் கொள்ள

வுமில்லை, வெளியிடவும் இல்லை. இவ்விதம் தடம் தெரியாமல் அழிக்கும் பணி நடந்தே உள்ளது. பானர்ஜி கமிட்டி ஆய்வுகளின்படி நெருப்புக்கனல் ஒன்று எஸ்.6, பெட்டியின் கடைசி படுக்கையின் கீழ் (65முதல் 72வரை) ஏற்பட்டுள்ளது. கரசேவகர்கள் பீடி, சிகரெட் ஸ்டவ் சமையல் என தாராளமாகப் புழங்கி இருந்திருக்கிறார்கள். ஆரம்ப அனல் மேற்படி ஏதோ ஒன்றின் மூலம் ஏற்பட்டிருக்கலாம். அல்லது ஸ்டவ்வுகளைப் பற்ற வைத்த தீயினால் ஏற்பட்டிருக்கலாம். புகைமூட்டம் ஏற்பட்டு மூச்சுத்தினறி இறந்துள்ளார்கள். ரெக்ஸின் ஃபோம் அனலுக்கு இரையாகி மேற்பரப்பு முழுவதும் பொசுங்கிட 58 பேர்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட கரசேவகர்கள் மரணத்தைத் தழுவினார்கள். 140 லிட்டர் பெட்ரோல் ஊற்றி எரித்தனர் எனும் போலீஸ் அறிக்கை பொய்யானது. உள்ளே புகுந்து போக முடியாதவாறு பெருங் கூட்டம் நிரம்பி இருந்தது.

எஸ்.6 பெட்டி உட்பகுதியில் எரிந்த தீயில் 58 பேர் கருகி இறந்த சேதி கிடைத்த மாத்திரத்தில் முஸ்லீம்களை இனப்படு கொலை செய்திட குஜராத் முதல்வர் மோடி 'சமிக்ஞை' தந்தார் என்று குஜராத் காவல்துறை அதிகாரி ஸ்ரீகுமார் என்பவர் நான்குமுறை எழுத்து மூலம் தந்த அறிக்கைகளை ஏற்க மறுத்ததுடன் குஜராத் முதல்வரை விசாரணைக்கும் அழைக்க மாட்டேன் என்று மறுத்துவிட்டார் நீதிபதி நானா வதி. நானாவதி மற்றும் ஷா விசாரணை கமிஷன்கள் இனப்படு கொலையை முன்னின்று நடத்திய வரான 'மோடி'யால் நியமிக்கப் பட்டதாயிற்றே!

எரிந்து கொண்டிருக்கும் ரயில் பெட்டி எஸ்.6ன் புகைப் படத்தைப் பார்வையிட்டால், புகை உள்ளிருந்துதான் வருகிறது. தீப்பற்றியது உள்ளிருந்துதான் என்பது புலனாகிறது. பானர்ஜி கமிஷன் மட்டுமல்ல, இதர நடுநிலை ஆய்வும் தலைசிறந்த ஆய்வாளர்களைக் கொண்டதும், எவரையும் சாராததுமான Hazards Centre என்கிற அமைப்பும் உறுதி யாக கூறுவது இதுவே: யாரும் வெளியிலிருந்து எஸ்.6, பெட்டியினுள் எரிபொருள்களை ஊற்றிட வுமில்லை. நெருப்பைப் பற்ற வைத்திடவுமில்லை.

**Based on Hazards Centre Findings, New Delhi - Front Line 11.2.2005**

## இத்தனை கட்சி போதுமா? இன்னும் கொஞ்சம் வேண்டுமா?

அரசியலில் நாம் சக்தி பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு முஸ்லிம்கள் கட்சி, கட்சியாய் தொடங்கி வருகின்றார்கள். இப்போது மக்கள் நல்வாழ்வு கட்சி People Welfare Party என்றொன்று தொடங்கப் பட்டுள்ளது. விரைவில் இந்தக் கட்சியின் சார்பில் மக்களிடையே பிரச்சாரப் பயணங்கள் மேற்கொள்ள வரு கின்றார்கள்.

தமிழக முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் இனி குறை யாத எட்டு ஓட்டுக்கள் தேவைப் படுகின்றது ஏனெனில் அவர் கள் எல்லா முஸ்லிம்களுக்கும் ஓட்டுப் போட வேண்டும். இதனை அரசு உணர்ந்து ஆவன செய்யும் என எதிர்பார்க்கின்றோம்.


விரைவில் வருகிறது!

யூசுப் அல் கர்ளாவியின்

**"நாம் பிரிந்து விடவேண்டாம்"**

இனி நூல் வடிவில்

**முஸ்லிம்கள் 73 கூட்டங்களாக பிரிய மாட்டார்கள் என்று குர்ஆன், சுன்னா ஒளியில் நிரூபிக்கும் நூல்!**

**முஸ்லிம்கள் பிளவுபட குர்ஆனோ, ஹதீஸோ காரணமில்லை என்று விளக்கும் நூல்!**

**முஸ்லிம்கள் ஒன்றுபடுவதற்கான காரணங்களையும், வழிமுறைகளையும், மையங்களையும் விவரிக்கும் நூல்!**

இல்யாஸ் ரியாஜி அவர்களின் இனிய தமிழ் நடையில். . . .

வெளியீடு

**வேர்கள் வெளியீட்டகம்**

சென்னை.

# பிரான்ஸ் நாடும் புர்காவின் தடையும். . . !
# தடைசட்டம் செயலில் வந்தது. . . !

எல்லாவிதத்திலேயும் பிரான்ஸ் இஸ்லாத்தின் எதிரி என்பதை மிகவும் குரூரமாக வெளிப் படுத்தி வருகின்றது.

ஆனால் பிரான்ஸ்இல் இஸ்லாம் வேகமாகப் பரவி வருவதை அதனால் தடுத்திட இயலவில்லை. இது பிரான்சிலுள்ள பழமைவாதிகளின் கோபத்தை இன்னும் அதிகமாக்கி குரூரம் நிறைந்ததாக ஆக்கிஇருக்கின்றது.

இது குறித்து பல விளக்கக் கட்டுரைகளை நாம் வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டியிருக் கின்றோம்.

தனது வெறுப்பின் உச்சக் கட்டமாகப் பிரான்ஸ் நாடு தனது நாட்டில் வாழும் முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவதை தடை செய்தது.

ஆணாதிக்கத்தின் காரணமாகவே, பெண்களைப் புர்கா அணிய வைக்கின்றார்கள் என்பது நிரூபிக்கப் பட்டால் அந்த ஆனுக்கு 25,000 பவுண்ட் அபராதம். ஓராண்டுகள் கடுங்காவல் தண்டனை.

அவ்வாறு புர்கா அணிய நிர்பந்திக்கப்பட்ட பெண்கள் 18 வயதுக்கு குறைந்தவளாக இருந் தால் மேலே சொன்ன தண்டனைகள் இரட்டிப்பாக்கி தரப்படும்.

பின்னர் பிரான்ஸ் நாட்டு மனித உரிமை ஆர்வலர்கள் நடத்திய ஆய்வு ஒன்றில் பிரான்ஸ் நாட்டில் எந்தப் பெண்ணும் ஆண்கள் கட்டாயப்படுத்து கின்றார்கள் என்பதனால் புர்கா அணிந்திடவில்லை. மாறாக அவர்கள், தாங்களாகவே முன் வந்து புர்கா அணிகின்றார்கள் என்பதைத் தெளிவுப்படுத்தினார்கள். இதையும் வைகறை வெளிச்சத்தில் தெளிவுப்படுத்தி இருந்தோம். எந்த ஆய்வும் பிரான்ஸ்-ஐ கொடுமையான சட்டங்களை இயற்றுவதிலிருந்து தடுத்திடவில்லை.

இந்நிலையில் ஏப்ரல் மாதம் 11ஆம் நாள் (2011) முதல் பிரான்சின் புர்காவுக்கெதிரான சட்டங்கள் செயலில் வந்தன.

ஆனால் அங்குள்ள முஸ்லிம் பெண்கள் அந்தச் சட்டங்களைச் கிஞ்சிற்றும் சட்டை செய்ய வில்லை.

பிரான்சின் சட்டப்படி பொது இடங்களில் 'புர்கா' நிக்காப் ஆகியவற்றை அணிந்திடக் கூடாது. பொது இடங்கள் எனக்கருதப்படுபவை, தெருக்கள், பொதுமக்களுக்கென கருதப்படும் எல்லா இடங்களும், சினிமா தியேட்டர்கள், உணவு விடுதிகள், பேரூந்து நிலையங்கள், விமான நிலையங்கள், ரெயில் நிலையங்கள், இன்னும் இதுபோன்ற இடங்கள். பேரூந்து கள் ரெயில்கள் விமானங் கள் இவற்றில் பயணம் செய்கின்ற போதும் கல்விக்கூடங்களில் கல்வி கற்கும் போதும் புர்கா அணியக் கூடாது. வாகனங்கள் ஓட்டும் போது, எல்லைகளைக் கடக்கும் போதும் என்றெல்லாம் சட்டம் நீளுகின்றது.

ஆனால் பிரான்ஸ் நாட்டில் வாழும் முஸ்லிம் வீரமங்கைகள், இவற்றையெல்லாம் பற்றி கிஞ் சிற்றும் கவலைப்படுவதில்லை.

அவர்கள் எல்லா இடங்களிலும் புர்கா அணிந்தே செல்லு கின்றார்கள்.

அதனால் வழக்குகள் பதிவு செய்யப்படும் என்றால் அதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.

இப்படி முஸ்லிம் பெண் கள் உறுதியாக இருந்து விட்ட தால் பிரான்ஸ் தன் சட்டங்களை செயல்படுத்துவதில் சில பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

**மிரளும் அரசு**

அதன் உள்விவகாரத்துறை அண்மையில் பல வழிகாட்டுதல் களை தனது காவல்துறையின ருக்கு வழங்கியுள்ளது. அவை:

1. **எந்த நிலையிலும் பெண் களை பொது இடங்களில் வைத்து புர்காவைக் கழற் றும் படி பணிக்கக் கூடாது.**
2. **புர்காவுக்கு எதிரான சட்டங்களை பெண் போலீசார் தான் செயல் படுத்த வேண்டும்.**
3. **முக அடையாளங்கள (Identity) தெரிந்திடும் அளவில் முகத்தை திறந்து காட்டிட மட்டுமே பணிக்க வேண்டும். இது வும் அவர்களின் ஓட்டுநர் உரிமப் Driving Licence போன்றவற்றை சோதனை**

செய்வதற்காகத்தான் இருந்திட வேண்டும்.

4. வேறு தவறுகளுக்கு அபராதங்கள் விதிக்கப் பெறுமே யானால் இன் னப் பெண்ணுக்குத் தான் அபராதங்கள் விதிக் கப் படுகின்றது என்பதை அடையாளம் கண்டிட மட்டுந்தான் முகத்திரை யை அகற்றிட வேண்டும்.

5. எந்த நிலையிலும் "நிக்காப்" ஐ கழற்ற மாட்டேன் முகத்தைக் காட்ட மாட் டேன் எனக் கூறிடும் பெண்களை 'கடைசி நிலையாக' காவல் நிலை யத்திற்கு (as a Last resort) அழைத்துச் செல்ல லாம். அங்கே அவளை கஸ்ட டியில் வைத்திடக் கூடாது. நான்கு மணி நேரத்திற்கு மேல் அவளை எந்தக் காரணத்தைக் கொண்டும் காவல் நிலை யத்தில் அமர வைத்திடக் கூடாது.

6. அதற்கு மேலும் பெண்கள் அடம்பிடித்தால் அரசு வழக்கறிஞரை தொடர்பு கொள்ள வேண்டும்.

7. எந்த நிலையிலும் 'பலத் தை' பயன்படுத்திடக் கூடாது. அவர்களை முகத்தைத் திறந்து காட்டும் படி அறிவுரையே கூறிட வேண்டும்.

8. மிகவும் உறுதியாக நின்றி டும் பெண்களை 'தேசியம்' பற்றிய வகுப்புகளில் தொ டர்ந்து அமரும்படி பணி க்க வேண்டும்.

இப்படி பயங்கர அலம்ப லோடு புர்காவிக்கெதிரான சட்டங்கள் வாலைச் சுருட்டிக் கொண்டன.

எம்.ஜி.எம்.

# வைகறை வெளிச்சம் அட்டைப் பட கட்டுரையின் தாக்கம் !

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்திடும் நம் குடிமக்களுக்கு அரசு "உணவு பெறும் உரிமையை" அடிப்படை உரிமையாக ஆக்கிட வேண்டும்.

இப்படியொரு கோரிக்கை யை மனித உரிமைக் குழுக்கள் முன் வைத்தன.

இந்தியாவிலுள்ள உணவுப் பொருள் கிடங்குகளில் பல நூறு கோடி டன் உணவுப் பொருள்கள் வீணாகிக் கொண்டிருக்கின்றன.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு இலவசமாக வழங்கிட வேண்டும் என்றொரு கோரிக்கையை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றனர் மனித உரிமை ஆர்வலர்கள்.

இந்தச் சலசலப்புக்களுக்குப் பின்னர் மத்திய அரசு இந்தியா விலுள்ள 640 மாவட்டங் களில் 150 மாவட்டங்களில் பட்டினிச் சாவுகள் நடக்கின்றன. இந்த மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு உணவு பெறும் உரிமையை 'அடிப்படை உரிமையாகத் தந்திட முன்வந்தது.

இந்நிலையில் நாம், உணவுப் பெறும் உரிமையை நாட்டுமக்கள் அனைவருக்கும் 'Universal Right' உரிய உரிமையாக வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம்.

இஸ்லாம் இந்த உலகை ஆட்சிச் செய்தக் காலக்கட்டத்தில் தாம். இந்த உரிமை அடிப்படை உரிமையாக அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டது என்பதை விளக்கமாக எடுத்துச் சொன்னோம். அட்டைப் படக் கட்டுரையாக தந்திருந்தோம்.

எங்கே நமது ஆட்சியாளர்கள் இதையெல்லாம் கண்டு கொள்ளப் போகின்றார்கள் என்றே நாம் நினைத்தோம். ஆனால் ஒரு கணக்கெடுப்பு நடந்திருக்கின்றது அதில் வைகறை வெளிசச்ம் முதலான சிறு பத்திரிகைகளும் தந்திருக்கும் அழுத்தங்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (Small and Medium NewsPaper)

இதனால் "வைகறை வெளிச்சம்" தேசிய சட்டங்களாப்பதில் பங்கு வகித்திடும் பத்திரிகையாக ஆகி இருக்கின்றது. அல்ஹம்ந்துலில்லாஹ்

நாம் இந்தச் சட்டங்கள் இஸ்லாமிய அடிப்படைகளின் கீழ் கொண்டு வந்திட வேண்டும் என முயற்சிகள் மேற்கொண்டு வருவது அனைவரும் அறிந்ததே.

**(Ref. 25.4.2011.தி ஹிந்து )**

# எகிப்தின் புரட்சி இன்றைய நிலை!

துனீசியாவில் தொடங்கி அரபு உலகம் முழுவதும் காட்டுத் தீ போல் பரவியது ஓர் மக்கள் எழுச்சி!

பல நாடுகளை ஆண்டு கொண்டிருந்த சர்வாதிகாரிகள் நாடு துறந்தார்கள். எஞ்சிய நாடுகளிலுள்ளவர்கள் நிர்வாகச் சீர்திருத்தங்களில் ஈடுபட்டார்கள்.

ஆடிப்போயின அமெரிக்காவும், இஸ்ரேலும். ஏனெனில் ஓர் முழு எழுச்சி முதலில் அமெரிக்காவையும் பின்னர் இஸ்ரேலையுந்தான் பாதிக்கும்.

உடனேயே அமெரிக்கா அதிரடி திட்டங்களை வகுத்து தனது ஆட்களை அரபு நாடுகளை நோக்கி அனுப்பியது. இந்த எழுச்சியையும் புரட்சியையும் உடனேயே அடக்கிட வேண்டும் என்பதே இலக்கு.

துனியாசியாவில் புகுந்த அமெரிக்க எடுபிடிகள் அங்கு வடிவமைக்கப்பட்டுவரும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கே அதிகமாக அவர்களால் எதையும் இது வரைக்கும் சாதிக்க இயலவில்லை.



ஆனால் ரஷீத் கன்னவ்சியின் இஸ்லாமிய எழுச்சி இயக்கம் எந்த நிலையிலும், ஆட்சி அமைத்து விடக் கூடாது என்



பதில் கவனமாக இருக்கின்றார் கள். சவால்கள் எதிரே வரட்டும் சந்திக்கலாம் என்றிருக்கின்றார் கள். இஸ்லாமிய எழுச்சி இயக்கத் தைச் சார்ந்தவர்கள்.

அமெரிக்காவுக்கும், இஸ் ரேலுக்கும் எகிப்து மிகவும் முக்கியம். காரணம், இஸ்ரேலின் தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நாடு எகிப்து. அது மட்டுமல்லாமல், வெல்ல முடியாதவர்கள் என உலகில் கற்பனை செய்யப்படும் இஸ் ரேலை இரண்டு முறை வென்று காட்டியவர்கள் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்த வர்கள். இவர்கள் தோன்றியதும் வளர்ந்ததும் வாழ்ந்து கொண்டி ருப்பதும் எகிப்தில்தான். எண்பது ஆண்டுகளாக எதிர்வந்த எல்லா அடக்குமுறைகளையும் எதிர் கொண்டு வெற்றிகளை ஈட்டி வருபவர்கள் இந்த இஃ வானுல் முஸ்லிமூன் இயக் கத்தைச் சார்ந்த வர்கள்.

எகிப்தில் ஏற்பட்டுள்ள எழுச்சி இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தை ஆட்சியில் அமர்த்தி விட்டால் குரூர இஸ்ரேலும் அதற்கு பக்கத்துணையாக வரும், அமெரிக்காவும் அடக்கப்படும், தடுக்கப்படும் அநியாயங்களைச் செய்வதிலிருந்து.

எகிப்தின் மக்களை வஞ்சித்து இஸ்ரேலுக்கு அனுப் பப்படும் அனைத்து இயற்கை வளங்களும் நிறுத்தப்படும்.

இதனால் இஸ்ரேல் இன்னும் கொஞ்ச நாள்களில் அலைக்கழியும். பாலஸ்தீன மக் களுக்காக பாலஸ்தீனில் போரா டிக் கொண்டிருக்கும் ‘ஹமாஸ்’ இரட்டிப்பு உற்சாகத்தைப் பெறும். பாலஸ்தீன மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத் தும் நிறைவேற்றப்படும். இஸ்ரே லின் ஆதிக்கம் உடையும். இதனை இஸ்ரேல் எந்த நிலையிலும் தாங்கிக் கொள்ளாது.

ஹமாஸ் முதற்கொண்டு அத் தனை இஸ்லாமிய இயக்கங் களும் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத் தின் வழித்தோன்றல்கள்!

இதனால் எகிப்து எல்லா நாடுகளையும் விட இஸ்ரேலுக் கும் அமெரிக்காவிற்கும் முக்கியமான நாடு.

ஆகவே எகிப்தில் ஏற்பட்ட எழுச்சியை எந்த நிலையிலும் அடக்கியாகவேண்டும் என்பது அமெரிக்காவின் இலக்கு!

நன்றாக ஒருங்கிணைக்கப் பட்டிருந்த அந்த எழுச்சியின் பயனாக சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக் வெளியேறினான்.

தற்காலிகமாக எகிப்தை நிருவகிக்கும் பொறுப்பு எகிப் தின் இராணுவத்திடம் ஒப்படைக் கப்பட்டது. எகிப்தின் இராணுவத் தலைமை, முஹம்மத் ஹுஸை ஸன் தனாதாவி என்பவ ரிடம் ஒப் படைக்கப்பட்டது. இவர் எகிப் தை இஸ்ரேலுக்கும் அமெரிக்கா வுக்கும் அடிமையாக வைத்திருந்த முன்னாள் அதிபர் சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக் - இன் வலதுகை. இவர் இந்த எழுச்சியை அடக்க அமெரிக்கர்கள் சொல் வதற்கு அப்படியே அடிபணிபவர். ஹோஸ்னி முபாரக் இன் காலத் திலிருந்து அமெரிக்காவிடம் நேரடியாகப் பணம் பெறுபவர்.

எகிப்தில் ஏற்பட்ட பெப்ருவரி எழுச்சிக்குப் பின் ஒரு அரசியல் நிர்ணயச் சட்டத்தை யாத்திட வேண்டும். அதன் பின் மக்கள் ஒரு தேர்தல் மூலம் தங்கள் ஆட்சியாளர்களைத் தேர்ந் தெடுத் திடவேண்டும் என்பதே நிபந் தனை. ஆனால் இராணுவம் அதைச் செய்வதாகத் தெரிய வில்லை.

இராணுவத்தின் போக்கு மக்கள் இன்னொரு புரட்சிக்கு தயாராகிட வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்திவிட்டது.

இதனால் மீண்டும் ஏப்பிரல் எட்டாம் நாள் மக்கள் அதே விடுதலை சதுக்கம் என்ற தஹ்ரீர் சதுக்கத்தில் வந்து குழுமினார்கள்.

ஜனவரி பெப்ருவரி திங் களில் குழுமிய மக்களை இராணு வத்தினர் முதலில் கெடுபிடி களுக்கு உள்ளாக்கினார்கள். பின்னர் மக்களின் எழுச்சியும் அதன் இலக்கும் தங்களைக் கவர்ந்தாகக் கூறினார்கள். மக்களோடு சேர்நது கொண் டார்கள். சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக் எழுந்து வந்த மக்கள் வெள்ளத்தை நோக்கி துப்பாக்கி குண்டுகளைப் பாய்ச்சுங்கள் எனக் கூறியபோது, அவர் கள் நம் மக்களை வீழ்த்திட நாங்கள் துப்பாக்கி பயிற்சி எடுக்க வில்லை எனக் கூறிவிட்டார்கள்.

ஆனால் ஏப்பிரல் 8 ஆம் நாள் கூடிய மக்களை அவர்கள் எதிரிகளாகத்தான் பார்த்தார்கள். ஏப்பிரல் எட்டாம் நாள் மக் களைக் கலைத்தார்கள். மக்கள் கலையவில்லை. இரவு தங்கிடத் தொடங்கினார்கள். அவர்களை ரப்பர் புல்லட்களைப் பாய்ச்சி கலைத்தார்கள். அதில் ஒருவர் இறக்கவும் செய்தார்.

இப்போது மக்கள் எழுச்சியை ஏற்பாடு செய்தவர்கள் கைபிசைந்து நிற்கின்றார்கள். ஆனாலும் தளராமல் மாற்று வழிகளைப் ஆராய்ந்து கொண்டி ருக்கின்றார்கள்.

# ஒசாமா கொலை நடந்தது என்ன?

# எத்தனை முறை இறப்பாய்?

அப்பிரல் 29 2009 ஆம் நாள் ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்கு முன் ஒசாமா பின் லேடன் இறந்தார்.

அதன்பின் மீண்டும் இப்போது இறந்துள்ளார். இன்னொரு முறை இறக்கமாட்டார். அப்படி இறந்தால் நிச்சயமாக செய்தியாக மாட்டார். ஏனெனில் ஊடகங்களும் அமெரிக்காவும் இமயமென செய்திகளை குவித்துள்ளார்.

இனி எந்த காரணத்தைக் கொண்டும் இந்த பொய்களை பின்னுக்குத் தள்ளிட முடியாது.

ஏப்ரல் 29, 2009 இல் ஒசாமா பின்லாடன் அவர்கள் இறந்தபோது அவர் எங்கே அடக்கம் செய்யப்பட்டார் என்பதையும் கூறினார்கள். 'was buried in the Mountains of South east Afghanistan' அவர் கிழக்கு ஆப்கானிஸ்தானிலுள்ள மலையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றார்கள்.

இந்த 2001 பொய், அல் கெசீர 2003 இல் வெளியிட்ட பில்லேடன் ஒலி/ஒளி நாடா முஷாரப்பின் பொய்யை தோலுரித்துக் காட்டிற்று.



2001 டிசம்பருக்கும் பிரான்ஸ் அவர்களைக் கொலை செய்தது. இதை பிரான்ஸ் நாட்டின் குடியரசு தலைவர் ஜெக்கியூ ஜிராக் உறுதி செய்ய வேண்டும் என்று அமெரிக்கா. உடனே அவர் ஒரு முழு விசாரணைக்கு உத்தரவிட்டார். முடிவு இன்னும் வரவில்லை.

பெனாசிர், என்ற பாகிஸ் தானின் செல்லப் பிள்ளை, தான் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன், பின்லேடன் கொலை செய்யப் பட்டுவிட்டார் என்றார்.

2007இல் ஒசாமா பின் லேடன் அவர்கள்



அமெரிக்காவை எச்சரிப்பது போன்ற வீடியோ ஒன்றில் தோன்றினார். அப்போது அந்த வீடியோ 2008 இல் அமெரிக்காவில் நடக்கவிருந்த தேர்தலுக்குப்பின் பயன்பட்டது.

ஆமாம் அமெரிக்க அரசியல்வாதிகள் பின்லேடன் அவர்களை வைத்துத்தான் நாட்டு மக்களை அச்சமடைய செய்கின்றார்கள். அதை வைத்துத்தான் உள்நாட்டுப் பிரச்னைகள் அனைத்தையும் ஒன்றாய் மூடிவிடுகின்றனர்.

ஆகவே அமெரிக்கர்களால் அப்போது பில்லேடன் இறந்தார் என்பதை ஒத்துக்கொள்ள இயலவில்லை.

ஆனால் ஏப்பிரல் 29,2009 இல் அமெரிக்க ஊடகங்கள் இப்போது வெளியிட்ட படத்தையே வெளியிட்டன. அதாவது முகம் சிறந்த படம்.

ஆக பல முறை ஷஹீதாக் கப்பட்ட பின்லேடன் செய்தி. நம்புங்கள் "நாராயணை" என் கிறார்கள்.

**விடை இல்லா வினாக்கள்:**

எடுத்த எடுப்பிலேயே ஓர் உண்மையை ஒத்துக் கொள்ள லாம். அது மொத்த முஸ்லிம் உலகமும், பின்லேடன் அவர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டார் கள் என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது.

முஸ்லிம்களின் மனங்கள் அது ஏற்கவில்லை கவனிக் கின்றார்கள்.

தொலைக்காட்சியில் பின்லேடன் அவர்கள் ஷஹீதாக் கப் பட்டுக்கிடக்கும் படத்தைப் பார்க்க துடிக்கின்றார்கள்.

ஆனால் ஒரு 'அனிமேற் றடு' செயற்கையாகத் தயாரிக்கப் பட்டப் படம் காட்டப்படு கின்றது.

தொலைக்காட்சியில் படம் வந்து விட்டது என்றவுடன் பாமர மக்கள் அதனை நம்பி விடுகின் றார்கள்.

ஆனால் அந்தப்படம் ரப்பிரல் 29, 2009இல் எடுக்கப் பட்ட இல்லை வரையப்பட்டப் படம். அப்போதே இதை எல் லோரும் சந்தேகப்பட்டார்கள். Http://www.themeindia.org detila. aspnewsid:24gx2

இந்தப் படம் பொய் யானது, போலியானது, வரையப் பட்டது என்பதை பத்திரிகை யாளர்கள் அனைவரும் அறிவார் கள்.

தி இந்து பத்திரிகை இந்தப் படத்தை வெளியிடவோ பயன் படுத்தவோ இல்லை.

அது வெளியிட்டதெல் லாம் ஓசாமா அவர்கள் உயிருடன் இருக்கும் படங்களைத்தான்.

**போலியான படம்:**

இப்படித்தலையிட்டது டைம்ஸ் ஆஃப் இந்தியா "Fake Oasa PiC Fools Channels" அதாவது பொய்யான ஒபாமா படம் எல்லா சானல்களையும் முட்டாளிக்கிக் கொண்டிருக் கின்றது. அத்தோடு அந்தப்படம் இணையதளத்தில் 2009 இலிலிருந்தே இருக்கின்றது "It was on the internet in 2009" என்றும் கூறுகின்றது.

பாகிஸ்தானிலுள்ள ஜியோ டெலிவிஷன் "Geo Televison" என்ற தொலைக்காட்சி நிறுவனந் தான் இதனை முதன் முதலில் வெளியிட்டது. பின்னர் இந்தப் படத்தைப் பின்வாங்கிக் கொண் டது. காரணம் கேட்ட போது, 'When we Checked we found it to be fake so we pulled it out' நாங்கள் அதனை சோதித்தபோது அது பொய்யானது என்பதை அறிந் தோம். ஆனால் பின்வாங்கிக் கொண்டோம் என்றது. (Times of India: May 3, 2011 Page 8)

இதுதான் இந்தப்படத்தின் கதை.

**வீடும் பங்களாவும்**

பின்லேடன் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் வீடு 40 லட்சம் டாலர்களில் கட்டப்பட்டது என்றார்கள். ஆனால் இவர்களால் காட்டப் பட்ட படம் அத்தனை லட்சம் டாலர்களில் கட்டப்பட்டதாகத் தெரியவில்லை.

பின்லேடன் கடைசியாகக் சுடப்பட்டதாகக்காட்டப்படும், படுக்கை அறையில் தலையனைகள் கூட கலையாமல் கிடக்கின்றன. இந்த லட்சணத்தில் இவர்கள் ஹெலிகாப்டர்களில் வந்து தாக்கிய தாகக் கூட கூறுகின்றார்கள்.



பத்திரிகைகளும் இந்தச் செய்திகளை அவற்றில் ஒன்று ஓசாமா பின்லாடன் அவர்களை கடலில் அடக்கம் செய்து விட் டோம் என்பதைப் பற்றி எழுதும் போது தி இந்து பத்திரிகை இப்படி சொல்கிறது. "While U.S. Officials said DNA evidence confirmed that Osama was killed no official evidence of his identity who released yet". அதாவது, அமெரிக்க அதிகாரிகள் ஓசாமா கொலை செய்யப்பட்டுவிட்டார், மரபணு சோதனையும் நடத்தப் பட்டது என்று கூறினாலும் இதுவரை எந்த ஆதாரங்களும் தரப்படவில்லை. (தி ஹிந்து 3.5.2011 முதல் பக்க கட்டுரை)

"டைம்ஸ் ஆஃப் இந்தியா" நாளிதழில் "They dumped him in a sea in a perplexing move". புரிந்து

## மூன்றே நாள்களில் அமெரிக்காவின் முரண்பட்ட அறிக்கைகள்

# ஒசாமா Vs ஒபாமா

| | அன்று | இன்று |
|---|---|---|
| 1. | அமெரிக்காவின் சிறப்புப் படைகள் வந்த போது போது ஒசாமா பின்லேடன் ஏ.கே. 47 துப்பாக்கி | அவரிடம் ஆயுதங்கள் எதுவுமில்லை. ஆனால் எதிர்த்துச் சண்டை போட்டார். |
| 2. | ஒசாமா எதிர்த்து சண்டை போட்டார். அதனால் தான் அவர் கொலை செய்யப்பட்டார் அவர் பிடிக்கப்படவில்லை. (இதி திங்கட்கிழமை செய்தி) | ஒசாமா எதிர்த்து சண்டை போடவில்லை. (இது செவ்வாய்க்கிழமைசெய்தி) |
| 3. | தீவிரவாத எதிர்ப்பு சாணக்கியன் ஜான் பெரானன் சொன்னார், ஒசாமாவின் இளம் மனைவி அங்கே இருந்தாள். அவளை மனித கேடயமாகப் பயன் படுத்தினார்கள். அவளும் கொலை செய்யப்பட்டு விட்டாள். | ஒசாமாவின் 27 வயதான மனைவி அமல் அல் சாதா, அமெரிக்க இராணுவத்தினரை எதிர்த்து ஓடி வந்தாள். அதனால் அவளுடைய கால்களில் சுட்டார்கள். இறந்து போன பெண் அங்கிருந்த வேலைக்கார ஒருவரின் மனைவி. |
| 4. | வெள்ளை மாளிகையின் கணக்குப்படி ஓசாமாவின் ஹம்ஸாதான் சண்டையில் ஹதீதானார். இறந்தார் | அடுத்த நாள் அறிக்கையின்படி ஓசாமாவின் மகன் மகன் ஹாலித்தான் ஷஹீதானார் இறந்தார். |
| 5. | அன்று இரவு ஒசமாவின் இருப்பிடம் நோக்கிப் பறந்த ஹெலிகாப்டர்களில் ஒன்றுவீழ்ந்து போனது. காரணம் அத்ன இயந்திர கோளாறு | நாங்கள் அந்த ஹெலிகாப்டர் இயந்திர கோளாறால் தான் வீழ்ந்தது என்று சொல்லிடவில்லை. |

**அமெரிக்க ஹெலிகாப்டர்கள் எங்கிருந்து பறந்தன எங்கு வந்து இறங்கின என்பதைப் பற்றிய செய்திகள் இன்னும் வெளிவரவில்லை.**

கொள்ள இயலாத ஒரு செயலாக அவரை (ஒசாமா பின் லேடன்) அவர்களைக் கடலில் போட்டு விட்டதாகக் கூறுகின்றார்கள். டைம்ஸ் ஆஃப் இந்தியா 3.5.2011 முதல் பக்க கட்டுரை.

இஸ்லாத்திற்கெதிராக அதாவது ஊடகங்களின் கணிப்பில் தீவிரவாதத்திற்கெ திராக எதை வேண்டுமானாலும் எழுத லாம் என எழுதி வந்தப் பத்திரிகைகளே இப்படி எழுது கின்றன என்றால் அவர்களின் மனசாட்சியையே இஃது உறுத்தி இருக்கின்றது.

சரி ஒசாமா பின்லேடன் அவர்களோடு அவர்களின் மகனும் ஒரு பெண்ணும் (சில தகவல்களின்படி அவரது இளம் மனைவி) கொலை செய்யப் பட்டதாகக் கூறுகின்றார். இஃது எந்த அளவுக்கு உண்மை. அது உண்மையென்றால்ட அவர்களின் படங்களையுமா? எடுக்காமல் விட்டுவிட்டார்கள்.

பொய், பெரிய பொய், ஆனால் வேகமாக உலகை வலம் வந்து கொண்டிருக்கின்றது. என் செய்வது?

இதில் மிகப் பெரிய வேடிக் கை என்னவெனில் உலகின் எந்த பத்திரிகையும் - ஊடகமும் இதனை கேள்வி கேட்கவில்லை. மாறாக பாகிஸ்தானைப் பழிப் பதிலேயே காலத்தைக் கடத்து கின்றார்கள்.

இந்தப் பொய்யான நிகழ் வை அரங்கேற்றுவதன் மூலம் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு கிடைக்கும் இலாபத்தை எடுத்த எடுப்பிலேயே சுட்டிக் காட்டி னார்கள் பலர். தி இந்து பத்திரிகை தலைப்பிலேயே “A big political boost to Obama” ஒபாமா வுக்கு பெரிய அரசியல் இலாபம் என்று குறிப்பிட்டது.

2012 இல் அன்று இன்றும் சில மாதங்களில் அமெரிக்காவின் அதிபர் பதவிக்கான தேர்தல்கள் நடைபெற உள்ளத. தேர்தலுக் காகச் செலவு செய்யும் கோடிக் கணக்கான டாலர்களில் ஒரு பகுதி இந்தப் பொய்யைப் பரப்

பிடவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

**பாகிஸ்தானின் உதவி:**

ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போகமாட்டார் என்ற பழிமொழி எதுககுப் பொருந்துமோ இல்லையோ அது பாகிஸ்தானுக்குப் பொருந்தும்.

பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் அமெரிக்காவிடம் அதிகமான பணத்தையும் இதர வசதிகளையும் பெற்று வருகின்றார்கள். இந்தப் பணத்தை "War on Terror" தீவிரவாதத்திற்கு எதிரான போரின் உதவி எனக் கூறுகின்றது அமெரிக்கா. ஆனால் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் தனிப்பட்ட முறையில் அமெரிக்க உளவுத்துறையிடம் லஞ்சம் வாங்குகின்றார்கள்.

இப்போது நாங்கள் சொல்வதற்கெல்லாம் மௌனம் சாதிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். இப்படி மௌனம் சாதித்து பணம் சம்பாதிக்கின்றார்கள். இதனை பாகிஸ்தானின் முன்னாள் கிரிகெட் வீரரும் இன்னாள் அரசியல் தலைவர்களுக்கு ஒருவருமான இம்ரான்கான் பச்சையாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பாகிஸ்தான் ஆபியாசித்திகா போன்ற அப்பாவிகளையே பிடித்து தீவிரவாதிகள் என அமெரிக்காவிடம் கொடுத்துப் பணம் வாங்கிய நாடு என்பதை மறுப்பதிற்கில்லை இந்நிலையின் ஒசாமா பின்லேடன் அவர்கள் அதனிடமிருந்திருந்தால் நிச்சயமாக அவரை வைத்து பெரிய அளவில் அமெரிக்காவிடம் பணம் பிடிங்க இருக்கும்.

இதனை பாகிஸ்தானிலுள்ள ஊடகங்களே பறைசாற்றுகின்றன.

இந்தப் போலி நாடகத்தில் பாகிஸ்தான் எப்படி எத்தனை கோடியைக் கொள்ளையடித்து என்பது இப்போது தெரியாது. சில நேரங்களில் எப்போதும் தெரியாது.

**ஒபாமாவின் கூற்று**

அமெரிக்க அதிபர் ஒபாமா தன்னுடைய உரையில் இப்படிக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் உளவுத்துறை எங்களை பின்லேடன் அவர்களிடம் கொண்டு சென்றது எனக் கூறுகின்றார். ஆனால் அமெரிக்க அதிகாரிகளும், பாகிஸ்தான் அதிகாரிகளும் பாகிஸ்தானுக்குத் தெரியாது என்று கூறுகின்றார்கள்.

இந்த முரண்பாடும் நடந்தது மிகப்பெரியதொரு நாடகம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

source : Text of Obama Speech

But it is important to note that our counter terrorism cooperation with pakistan helped lead us to Bin Landen and the compound where he was hiding.

அதாவது இங்கே முக்கியமான ஒன்றை கவனித்தாக வேண்டும். நாம் பாகிஸ்தானோடு செய்து வரும் தீவிரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு நாம் பின்லேடனை அடையவும் அவரிருந்த கவளாகத்திற்குள் கொண்டு சென்றது.

**இன்னொருட முரண்பாடு**

இந்தியாவின் தலைவர்களும், பத்திரிகையாளர்களும், பாகிஸ்தானைப் புரிந்து கொண்டு பாகிஸ்தானை அமெரிக்கா ஒரு தீவிரநாடு என அறிவிக்க வேண்டும் என்றார்கள். ஆனால் ஒபாமா,

Tonight, I called President Zardari and my team, has also spoken with their Pakistani counter parts. They agree that this is a good and historic day for both of our nations. And going forward it is essential that Pakistan continue to join us in the fight against Al Queda and its affliate.

இன்று இரவு நான், குடியரசு சர்தாரி அவர்களை தொலைபேசியில் அழைத்தேன், என்னுடைய அலுவலர்களும் பாகிஸ்தானிலுள்ள அதிகாரிகளுடன் பேசினார்கள். அவர்கள் இந்நாள் இரண்டு நாட்டுக்குமே நல்ல நாள் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள். இன்னும் மேலே சென்றிட பாகிஸ்தான், அல்கொய்தாவுக்கு எதிரான போரில் நம்மோடு தொடர்ந்து இனைந்திருந்திட வேண்டும் என்பது மிகவும் முக்கியமே.

***ஒபாமா உரையின் கடைசிப் பத்தி***
**DC 3.5.2011**

**நடந்தது என்ன?**

ஒசாமா பின் லேடன் அவர்கள் பல உடல் உபாதைகளை உடையவர். நாளொன்றுக்கு மூன்று முறை டயாலிசிஸ் செய்திட வேண்டிய நிலையில் உள்ளவர். ஆகவே வெகு நாட்களுக்கு முன்னரே அல்லாஹ் அவரை அழைத்துக் கொண்டான்.

இதனை ஊர்ஜிதம் செய்த அமெரிக்க உளவுத்துறை ஒரு நாடகத்தை தங்களுக்கொரு பெருமையை தேடிக் கொண்டார்கள். அவ்வளவுதான்.

இதெற்கெல்லாம் ஒத்து போக பாகிஸ்தானை தங்கள் நண்பன் என அழைத்துக் கொண்டார்கள்.

**ஓசாமா பின்லாடனும் 9/11னும்**

ஒரு பெரும் உண்மையை மக்கள் இப்போது புரிந்திருப்பார்கள். உலகெங்கிலும் நடந்த குண்டு வெடிப்புகளுக்கு முஸ்லிம்கள் காரணமல்ல. ஆனால் அவர்கள் தொடர்ந்து பழி சுமத்தப்பட்டு வந்திருக்கின்றார்கள்.

9/11 என அடையாளப்படுத்தப்படுவது இஸ்லாத்தின் மீது ஒரு பெரும் போரை தொடுக்க அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் குறித்த நாள். இதனை நாம் வைகறை வெளிச்சத்தில் மிகவும் தெளிவான ஆதாரங்களோடு நிரூபித்து வந்திருக்கின்றோம்.

உண்மையைச் சொன்னால் இஃது சிலுவைப் போர்களின் தொடர்ச்சி. இதனை 13/11 அன்று அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் சொன்னார். பின்னர் கண்டலோசா ரைஸ் என்ற அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் உண்மைபடுத்தினார். இதனையும் வைகறை வெளிச்சத்தில் தெளிவுப் படுத்தி இருக்கின்றோம்.

9/11 என அடையாளப்படுத்தப்படும் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டவுடனேயே சில மணித்துளிகளுக்கு உள்ளேயே அமெரிக்கர்கள் ஓசாமா பின் லேடன் அவர்களையும் ஆப்கானிஸ்தானில் வீற்றிருந்த தாலிபான்களின் அரசையும் குறை சொல்லிட தொடங்கிவிட்டார்கள்.

அது போது, ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்து கொண்டிருந்த உமர் அப்துல்லாஹ் அவர்களிடம் ஓசாமா பின்லாடன் அவர்களையும் அவரோடு இன்னும் 26 பேரையும் ஒப்படைக்க வேண்டும் எனக் கூறினார்கள்.

முல்லா உமர் அவர்கள், அமெரிக்காவிடம் ஓசாமாபின் லேடன் அவர்களுக்கும் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதற்கும் தொடர்பு உண்டு என்பதை நிரூபிக்க ஆதாரங்களைக் தாருங்கள் நாங்கள் ஓசாமா பின் லேடன் அவர்களை எங்கள் நாட்டிலேயே விசாரிக்கின்றோம். இஸ்லாமியச் சட்ட திட்டங்களின் படி நாங்கள் விசாரிக்கின்றோம்.

இஸ்லாமியச் சட்டத்திட்டங்களின்படி நாங்கள் விசாரிக்கின்றோம்.

இஸ்லாமியச் சட்ட திட்டங்களின்படி நாங்கள் வழங்கிடும் தண்டனைகளைவிட கடுமையான வைகளாக இருக்கும் என்றார்.

ஆனால் அமெரிக்கர்கள், நாங்கள் எந்த ஆதாரங்களையும் தந்திடமாட்டோம். ஆனால் நீங்கள் நாங்கள் கேட்டவர்களை யெல்லாம் ஒப்படைக்க வேண்டும் இல்லையேல் நாங்கள் போர் தொடுப்போம் என்றார்கள். உங்கள் நாட்டு நீதிபரிபானத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றார்கள் அமெரிக்கர்கள்.

இதற்கு முல்லாஹ் உமர் அவர்கள் சரி நீங்கள் உங்களுக்கு நம்பிக்கையுள்ள ஏதேனும் ஒரு நாட்டிடம் ஆதாரங்களை ஒப்படையுங்கள். நாங்கள் அந்த நாட்டிடம் ஓசாமா பின் லேடன் அவர்களை ஒப்படைக்கிறோம். அதே போல் இன்னும் எத்தனை பேர் மீது நீங்கள் ஆதாரங்களைத் தருகின்றீர்களோ அவர்களையும் நாங்கள் ஒப்படைக்கின்றோம் என்று கூறினார்கள்.

இதையும் அமெரிக்கா செய்ய முன் வரவில்லை.

இறுதியாக முல்லா உமர் அவர்கள் சரி நீங்கள் சர்வதேசிய விதிகளைப் பின்பற்றி உரிய ஆவணங்களைத் தாருங்கள் - சாட்சியங்களைத் தாருங்கள் நாங்கள் ஓசாமா பின்லேடன் அவர்களையும், இன்னும் நீங்கள் சொல்பவர்களையும் ஒப்படைக்கின்றோம்.

ஆனால் அமெரிக்க எதேச்சதிகரமாக நாங்கள் எந்த ஆதாரத்தையும் தரமாட்டோம். நீங்கள் ஓசாமா பின் லேடன் அவர்களை ஒப்படையுங்கள் எனக் கேட்டார்கள்.

உமர் அவர்கள் நாங்கள் காதில் பூச்சுற்றிக்கொண்டிருக்க வில்லை நீங்கள் கேட்டவர்களை யெல்லாம் நாங்கள் ஒப்படைக்க, ஆதரமில்லை என்றால் யாரையும் ஒப்படைக்க மாட்டோம் வருவதை எதிர்கொள்வோம் எனக் கூறி விட்டார்கள்.

முல்ல உமர் அவர்களின் கேள்விகள் நியாயமானது. அவர் அப்பபாவிகளான ஓசாமா பின்லேடன் அவர்களையும் இன்னும் இருபது பேரையும் ஒப்படைக்க மறுத்தது தான் சரியான - நியாயமானது என்று அமெரிக்காவின் மிகப் பெரிய சிந்தனையாளன் நோம் சோம்ஸ்கி கூறினார். பல நூறு கட்டுரைகளை சர்வதேச பத்திரிகைகளில் எழுதினார்.

(Source: Terrer over democracy: By Pudr. forwarded by Noam Chamky)

இதில் மிகப்பெரிய வேதனை என்னவெனில் முஸ்லிம்களே இந்த உண்மையைப் புரிந்து

கொள்ளாமல் ஒசாமா பின் லேடன் அவர்களையும், தாலிபன்களையும் தீவிரவாதிகளாகக் கருதுவதுதான். அமெரிக்காவிலேயே 67 சதவிகித மக்கள் இரட்டை கோபுரங்களைத் தகர்த்தது ஒசாமாதான் என நம்பிடவில்லை. இது கடந்த 10 வருடங்களில் வெளிவந்த ஆவணங்களின் விளைவு.

நம் நாட்டில் நடந்த எத்தனையோ குண்டுவெடிப்புகள் அத்னையிலும் முஸ்லிம்களே பழி சுமத்தப்பட்டார்கள். நாம் அவற்றை உடனுக்குடன் தகுந்த ஆதாரங்களோடு மறுத்து வந்தோம். இப்போது அந்தக் குண்டு வெடிப்புகள் அனைத்திலும் இந்துத் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதே போல் உலக அரங்கில் முஸ்லிம்களின் பெயரால் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்புகளையும் தகுந்த ஆதாரங்களுடன் மறுத்து வந்துள்ளோம்.

இந்த வகையில் ஒசாமா பின் லேடன் அவர்களும் அவர் களோடு குற்றஞ்சாட்டப் பட்ட வர்களும் அப்பாவிகள் என்பதை தொடர்ந்து தெளிவுபடுத்தி வருகின்றோம். நமது முயற்சி தொடரும்.

**ஒபாமாவுக்கு ஏமாற்றம்**

அமெரிக்க அதிபர் ஒபாமா தான் ஒரு பெரும் போராளி என்பதைக் காட்டிக் கொள்ளவே 'ஒசாமா பின் லேடன் கொலை' என்ற நாடகத்தை அரங்கேற்றினார். பின்னர் தான் சொல்வதையெல்லாம் மக்கள் நம்புவார்கள் என்ற மமதையில் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட இடங்களுக்குச் சென்றார். அவர் எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் வரவில்லை.

அதே போல் முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷூம் கலந்து கொள்ளவில்லை. இத்தனைக்கும் அவர் தனது உரைகளில் கடந்த 10 ஆண்டுகளாக நடந்து வரும் 'ஒசாமா' தேடுதல் வேட்டையில் ஜார்ஜ் புஷூக்கும் பங்குண்டு எனக் கூறி வருகின்றார்.

இவையெல்லாம் அமெரிக்க மக்களே பாகிஸ்தானின் அபோதாபாத் இல் ஒசாமா பின் லேடன் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை நம்பிடவில்லை என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

**எம்.ஜி.எம்.**

## ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் தீர்மானங்கள்

மேலப்பாளையம்,(நெல்லை மாவட்டம்) ஷரீஅத் பாதுகாப்புப்பேரவையின் சார்பில், மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு பல சிறப்புகள் உண்டு.

1. ***அணிதிரண்ட மக்கள் வெள்ளம் மேலைப்பாளையம் மக்கள் தங்களிடையே சிலர் 'காதியானி'களாக மாறி நரக வாசிகளாக ஆகிடக் கூடாது என்பதில் காட்டிய ஆர்வமும் அக்கறையும் பளிச்சென வெளிப் பட்டது.***
2. ***உண்மையில் இந்தக் கூட்டம் ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையிலுள்ள மேலப்பாளையம் பிரதிநிதிகளின் அழுத்தமான வேண்டுகோளுக் கிணங்க ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.***
3. ***ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை முஸ்லிம்களின் அன்பை யும் ஆதரவையும் பெற்ற அமைப்பு என்பது பளிச்சிட்டது. இன்றைய சூழலில், எல்லா முஸ்லிம்களையும் ஒன்றிணைப்பதோடு கல்வியாளர்களையும் சமூக ஆர்வலர்களையும் ஒன்றி ணைக்க முடியும் ஒரே மேடையில் அமர்த்திட முடியும் என்பதை ஷரீஅத் பேரவை செயலில் காட்டிற்று.***
4. ***வழி தவறிவிட்டவர்களை நேர் வழிப்படுத்தும் முயற்சியில் அனைவரும் ஒன்றிணைந்தது வரவேற்கதக்கது.***

மேலப்பாளையத்தில் 'காதியானி' இசத்தை ஏற்றுக் கொண்டவர் ஷரீஅத் பாது காப்புப் பேரவை தங்கள் மீது காட்டிடும் ஆர்வம் அக்கறை ஆகிவற்றைக் கருத்திற்கொண்டு நேர் வழியின் பக்கம் திரும்புவார்கள் என எதிர்பார்க்கின்றோம். இன்ஷாஅல்லாஹ்.

# பின்லேடன் மரணத்தில் மட்டுந்தான் அமெரிக்கா பொய் சொன்னதா?

**- சாம் ஜோன்ஸ்**

அமெரிக்க அதிபர்கள் அடிக்கடி பொய்களைச் சொல்லி தங்கள் மக்களை ஏமாற்றுவார்கள் என்கின்றார் 'தி கார்டியன்' என்ற அமெரிக்க பத்திரிகையின் எழுத்தாளர் சாம் ஜோன்ஸ்.

2003 ஆம் ஆண்டு ஈராக்இன் மீது அமெரிக்கா படையெடுத்து சென்றது. அப்போது அமெரிக்கப் படையைச் சார்ந்த ஜெசீகா லிஞ்ச் என்ற பெண்மணியை மிகப் பெரிய ஹீரோவாகக் காட்டியது.

இந்தப் பெண்மணி மிகப் பெரிய சாதனை ஒன்றை நிகழ்த்தினாள். அது 'நசாரியா' என்ற ஈராக் முஜாஹித்கள் இந்தப் பெண்மணியின் பரிவாரத்தைத் திடுதிப்பென்று தாக்கினார்களாம். உடனேயே இந்தப் பெண்மணி கடுமையானதொரு எதிர் தாக்குதலை நடத்தினாளாம். அந்தத் தாக்குதலில் அத்தனை முஜாஹித்களும் கொலை செய்யப்பட்டு விட்டார்களாம்.

எதிர் தாக்குதலை நொடியில் திடப்படுத்திய இந்த ஜெசீகா லிஞ்ச் என்ற பெண் மணிக்கு பயங்கர காயங்கள் பட்டனவாம். என்றாலும் எதிரிகள் மேல் - அதாவது முஜாஹித்கள் மேல் குண்டுகளைப் பாய்சிடும் அசாதாரண செயலில் இந்த அம்மணி துப்பாக்கியின் விசை யை அழுத்துவதிலிருந்து தனது கைகளை எடுக்கவே இல்லையாம்.

இந்த அம்மணியை முஜாஹித்கள் தாக்கியது (அமெரிக்காவின் சொல்லாட்சியில் அவர்கள் தீவிரவாதிகள்) அமெரிக்காவில் ஒரு திரைக்கதையைப் போல் சித்தரிக்கப்பட்டதாகும்.

அமெரிக்க பத்திரிகைகள் ஜெசீசா லிஞ்ச் இன் இந்தத் தாக்குதலை சித்தரித்தது ஒரு ஸ்டில்ஸ்ஸோ படத்தைப் பார்ப்பதைப் போல அல்லது ஒரு ஜாக்கி ஜான் படத்தைப் பார்ப்பதைப் போல் இருந்தது என்கின்றார் சாம் ஜோன்ஸ் என்ற எழுத்தாளர்.

அமெரிக்க மக்களும் அப்படித்தான் பேசிக் கொண்டார்களாம். ஆனால் பின்னர் தான் அனைவருக்கும் தெரிய வந்ததாம் அப்படி ஒரு தாக்குதலே நடக்கவில்லை என்று.

அதாவது, ஜெசீகா லிஞ்ச் நாசாரியாவுக்குச் சென்றது உண்மைதானாம். ஆனால் கரடுமுரடாகத் தனது வாகனத்தை ஓட்டி எதிரே வந்த இண்னொரு அமெரிக்க வாகனத்தோடு மோதினானாம் ஜெசீகா லிஞ்ச் வந்த வாகன ஓட்டி. அதில் அவள் காயம் பட்டாளாம்.

ஜெசீகாலிஞ்ச் அமெரிக்க இராணுவத்தைச் சார்ந்த பெண் தானா? என்று கேட்டால் இல்லையாம். அவள் பாலஸ்தீனை சார்ந்த யூத பெண்மணி. அமெரிக்க இராணுவத்திற்கு அறிக்கைகள் தயாரிக்கும் ஒரு (Clerk) கிளார்க் எழுத்தர். அவ்வளவுதான். இவர் காயம் பட்டபோது ஈராக் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப் பட்டிருக்கின்றார்.

மருத்துவமனையில் அவளுக்கு சிறந்த வைத்தியம் செய்திருக்கின்றார்கள் ஈராக் முஸ்லிம் பெண் மருத்துவர்கள்.

சரி நசாரிய்யா பகுதியில் ஈராக் முஜாஹித்கள் இருந்தார்களா என்றால் இல்லையாம். அவர்கள் இரண்டு நாள்களுக்கு முன்பே அந்தப் பகுதியைக் காலி செய்திருக்கின்றார்களாம்.

இந்த உண்மைகள் எல்லாம் பின்னர்தான் (2005-இல்) தெரியவந்ததாம். அதனை கண்டு அமெரிக்க மக்கள் மனம் வெதும்பினார்களாம். ஆனால் அதற்குள் (2004) இல் புஷ் அமெரிக்கா அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டாராம்.

ஜெசீகா லிஞ்ச் என்ற அந்த (கிளார்க்) எழுத்தருக்குப் பின்னாளில் இது தெரிய வந்ததாம். அப்போது அவள் இப்படிக் கூறினாளாம்.

"Iam still confused as to why they chose to lie and tries to make me a legendï when the real heroics of my fellow soldiers that day were in fact legendary"

அதாவது "எனக்கு இப்போதும் குழப்பமாகவே இருக்கின்றது. அவர்கள் ஏன் என்னை ஒரு வரலாற்று

கதாநாயகியாக ஆக்கிட முயற்சி செய்தார்கள். உண்மையில் அந்த நாளில் என்னோடு வந்த என்னுடைய இராணுவத்தினர், பல சிறந்த சாகசங்களைச் செய்திருந்தார்கள்."

(The Guardian NewspaÃr Ltd. The Hindu May 6, 2011)

**சாதனை -2**

"பேட்டில்மேன் Pat Tillam" என்றறொரு அமெரிக்க குடி மகன். அவன் அமெரிக்க மக்களால் ரசிக்கப் படும் ஓர், கால்பந்து வீரன். 2001 செப்டம்பர் 11 ஆம் நாள் (9/11) அன்று அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப் பட்டதால் மனம் நொடிந்து போனான்.

மனம் நொந்தது மட்டு மல்ல கோபமும் வந்தது. ஆகவே ஆப்கானிஸ்தானில் சென்று அமெரிக்காவின் (தன் நாட்டின்) இரட்டைக் கோபுரங்களைத் தாக்கியவர்களைப் பழி வாங்கிட துடித்தான்.

ஓடோடி சென்று அமெரிக்க இராணுவத்தில் இணைந்தான். தனக்கு எல்லாப் பயிற்சியும் தந்து உடனேயே ஆப்கானிஸ்தான் அனுப்ப வேண்டும் என அமெரிக்க இராணுவத்தைக் கேட்டுக் கொண்டான்.

அவசர, அவசரமாக எல்லாப் பயிற்சிகளும் தரப்பட்டு ஆப்கானிஸ்தான் அனுப்பப் பட்டான்.

2004 ஆம் ஆண்டு அவன் ஆப்கானிஸ்தானிலிருந்து இறந்து விட்டான். அவர்களாகவே பேட்டில் மேனைக் கொலை செய்து விட்டு அவரை நாட்டுக்காக உயிர் துறந்த தியாகி எனக் அறிவித்துவிட்டார்கள்.

2006இல் வெளிவந்த பேட்டில்மேனின் வாழ்க்கை வரலாற்றுக்குப் பின் தான் அமெரிக்க மக்களுக்கே இந்த உண்மைத் தெரியவந்தது. காரி உமிழ்ந்தார்கள் புஷ்-ஐ.

**சாதனை - 3**

அமெரிக்கர்கள் தங்கள் தலைவர்கள் செய்த மற்றொரு சாதனையைக் கண்ணை மூடிக் கொண்டு பாராட்டினார்கள். பரவசப்பட்டார்கள்.

அதாவது, இப்போது பின் லேடன் அவர்களைக் கொலை செய்ததாகப் பீற்றிக் கொள்ளும் அமெரிக்காவின் Seal Team Co. சீல் டீம்டு : என்ற அணி நடத்திய சாகசந்தான் அது.

இந்த சாதனை அக்டோபர் 2010இல் நடந்ததாகப் பேசப் படுகின்றது.

Lind Norgrove லின்ட் நார்குரோவ் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியர் ஆப்கானிஸ்தான் முஜாஹித் களிடம் சிக்கிக்கொண்டாராம். அவரை மீட்கத்தான் இந்த சீல் டீம் 6 சென்றது. அதுவும் கிழக்கு ஆப்கானிஸ்தானிலிருந்து மீட்டு வந்திடவேண்டும். கிழக்கு ஆப்கானிஸ்தான் தாலிபானின் பிடியிலிருந்த பகுதி, அங்கே சென்று மீண்டு வருவது மிகவும் கடினமான செயல்.

நிச்சயமாக ஆப்கானிஸ்தானுக்குள் சென்று வருவது என்பது பாகிஸ்தானுக்குள் சென்று வருவதைப் போல் எளிதானதல்ல.

ஆகவே சீல் டீம் 6 அதீதமாக ஆப்கானிஸ்தானுக்குள் பறந்தாக வேண்டும். பறந்தது. லிண்ட் நார்குரோவ் -ஐ வைத்திருந்த குகைகள் சென்று மீட்கும் பணியை செய்து சாதித்தது. இப்படி ஒரு பெரும் களுக்கு அழகிய முன் மாதிரி அவருக்கு சில்வர் என்றெல்லாம் சண்டப் பிரகடனம் செய்தார் புஷ். அப்போது அவர்தான் அமெரிக் காவின் அதிபர்.

வெறும் அறிவிப்போடு நின்றுவிடவில்லை புஷ். அவருக்கு வெள்ளிப்பதக்கமும் வழங்கினார். பாராட்டினார். அமெரிக்க மக்கள் பேட்டில்மேன்-ஐயும் அதிபர் புஷ்-ஐயும் வானளாவப் பாராட்டினார்கள்.

2004இல் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் அமோக வெற்றிபெற்றார் புஷ்.

2006இல் ஒரு பெரும் உண்மை தெரியவந்தது. ஆப்கானிஸ்தான் அனுப்பப்பட்ட பேட் டில் மேன் கொஞ்ச நாள்களிலேயே அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மேல் தொடுத்த போர், அநியாயமானது. அடாவடித்தனமானது என்பதை அறிந்தான் 9/11 என்பதே அமெரிக்க உளவுத்துறையின் ஏற்பாடுதான் என்பதையும் கண்டு கொண்டான்.

உண்மையில் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா திணித்த போர் அநியாயமானது என்பதை தனக்குமேலுள்ள அமெரிக்க அதிகாரிகளிடம் சொன்னான். புஷ்ஐப் பற்றி இப்படிக் கூறினானாம்:

'A Cowboy who had led the country into an illegal and unjustwar'

ஒரு கோமாளி நமது நாட்டை ஒரு சட்ட விரோதமான அநியாயமான போரில் கொண்டு சென்று விட்டார். Guardian News Paper Ltd. The Hindu 6.5.2011

இப்படி அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததால் அவருடை தளபதி ஒருவர் அவரைச் சுட்டுக் கொன்று கதையைத் தயார் செய்து சாகசச் செயலுக்கு சீல் டீம் 6 சென்று வரும்போது அவர் இறந்து விட்டான்.

அமெரிக்க மக்களுக்கு நார்குரோவ் இறந்ததையும் சீல் டீம் 6 தோற்றத்தையும் சொல் லிடும் போது இப்படிச் சொன் னார்கள்.

"சீல் டீம் 6 தங்களுடைய அபார மூளையைப் பயன்படுத்தி, கிழக்கு ஆப்கானிஸ்தானுக்குள் பறந்து இறங்கினார்கள். அதிலி ருந்து அதிரடியாக நார்குரோவ் வை வைத்திருந்த குகைக்குள் நுழைந்து விட்டார்கள். ஆனால் அங்கிருந்த தாலிபன்களில் ஒருத்தி தனது இடுப்பில் கட்டியிருநத தற்கொலை வெடிகுண்டுடன் நார்குரோவ் மீது பாய்ந்ததில் நார்குரோவ் கொலை செய்யப் பட்டுவிட்டார் எனச் செய்தி களைப் பரப்பினார்கள்.

ஆனால் நடந்தது முற்றி லும் வேறுவிதமானது. நார்கு ரோவ் தாலிபன்களின் பிடியில் இல்லை அவராக சென்று திக்குத் தெரியாத காட்டில் சிக்கிக் கொண்டார். செய்தியைத் தனது அதிகாரிகளுக்குச் சொன்னார்கள்.

தளபதிகள் தேவை இல்லாத பரபரப்பை உருவாக்கி சீல் டீம் 6ஐ அனுப்பினார்கள். நார்குரோவ் இருந்த இடத்தி லிருந்து அவரை அழைத்து வரும் போது சீல் டீம் 6 ஐ சார்ந்த ஒருவர் வைத்திருந்த கைக்குண்டு நார்கு ரோவின் காலடியில் வீழ்ந்து அவர் காயம் பட்டார். பின்னர் இறந் தார்."

இந்த உண்மைகள் இப் போது ஓசாமா விவகாரம் விவாத மானபோதுதான் தெரிந்தட வந் தது.

இப்படி அடிக்கடி அமெ ரிக்க மக்களை அதிரடி தாக்குதல் என பொய்களைச் சொல்லி ஏமாற்றி வருகின்றார்கள்.

இந்தச் செய்தியைச் சொல்லும் போது கார்டியன் நியூஸ் பேப்பர் எழுத்தாளர் சாம் ஜோன்ஸ் அவர்கள் இவற்றையெல்லாம் நம்புகின்ற வகையில் அமெரிக்கா மக்கள் ஜோடிக்கப்பட்டுள் ளார்கள் என்கின்றனர்.

**எம்.ஜி.எம்.**

# கர்கரே நூல்: 20வது அறிமுக விழா தாம்பரத்தில் நடைபெற்றது!

27.05.2011 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் தாம்பரம் டி.ஜி.பி. மஹாலில் "கர்கரேயை கொலை செய்தது யார்?" நூல் அறிமுக விழா நடைபெற்றது.

தாருல் இஸ்லாம் மண்டலப் பொறுப்பாளர் சாதிக் தலைமையேற்றார். மக்கள் மாமன்றம் பொறுப்பாளர் ஆனை பன்னீர் செல்வம் முன்னிலை வகித்தார்.

வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் "கர்கரேயை கொலை செய்தது யார்?" என்ற தலைப்பிலும் துணையாசிரியர் இல்யாஸ் ரியாஜி "கர்கரே நூலின் தாக்கம்" என்ற தலைப்பிலும் சிறப்புரை நிகழ்த்தினர்.



சி.பி.எம். கட்சியின் தென் சென்னை மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, தீக்கதிர் பத்திரிகை ஆசிரியர் குழுவைச் சார்ந்த குமரேசன் ஆகியோர் நூல் விமர்சன உரை நிகழ்த்தினார்.

சகோதரர் பாசில் விழா ஏற்பாட்டை சிறப்பாகச் செய்திருந்தார்.

# பாலஸ்தீன மக்களுக்கு அமெரிக்கா மீண்டும் துரோகம்!

ஆக்கிய நாடுகள் சபையை 'அமெரிக்காவின் கழிவறை' என்றால் அஃது மிகையாகாது.

அதே ஐக்கிய நாடுகள் சபை, ஜனநாயக நெறிமுறைகளின் அடிப்படையில் செயல்படும் அமைப்பு என்றால் அதையும் ஏற்றிட முடியாது.

அன்மையில் நடந்த நிகழ்வு ஒன்று இதைத்தான் எடுத்துச் சொல்கின்றது.

பாலஸ்தீனில் மிகவும் முக்கியமான நிலப்பரப்பு மேற்குக் கடற்கரை. இந்த மேற்குக் கடற் கரையில் யூதர்கள் முஸ்லிம்களை விரட்டி அடித்துவிட்டு, யூதர் களைக் குடியேற்றி வருகின்றார் கள்.

அதே போல் கிழக்கு ஜெரூசலத்திலும் யூத குடியிருப்பு களை ஏற்பாடு செய்துவரு கின்றார்கள்.

மொத்த முஸ்லிம் உலகமும் தங்கள் நாடுகளிலுள்ள ஆட்சி யாளர்களை விரட்டிக் கொண்டி ருக்கின்றார்கள்.

முஸ்லிம் உலகம், அதில் கவனஞ் செலுத்திக் கொண்டி ருக்கும் போது அமெரிக்காவும், யூதர்களும் மேற்குக் கடற்கரை பகுதியிலும், கிழக்கு ஜெரூசலத் தில் வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம்களை விரட்டிக் கொண் டிருந்தார்கள். அந்த இடத்தில் யூதர்களை குடியமர்த்திக்



கொண்டிருந்தார்கள்.

இதனை தடுப்பதற்கு முஸ் லிம்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார்கள். இயல வில்லை.

உலக நாடுகளின் கருத்துக் களை ஒன்று திரட்டி, ஐக்கிய நாடுகளின் சபையில் தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தார்கள். இந்தத் தீர்மானம், பாலஸ்தீனில், மேற்கு கடற்கரையிலும், கிழக்கு ஜெரூசலத்திலும் யூதர்கள் ஏற் படுத்திவரும் குடியிருப்புகளை நிறுத்திட வேண்டும் என்று கேட்டு கொள்கின்றது. அத்

தோடு, யூதர்கள் தொடர்ந்து இழைத்து வரும் அநியாயங் களைக் கண்டிக்க வேண்டும் என உலக நாடுகளைக் கேட்டுக் கொள்வதாக அமைந் திருந்தது. உலக நாடுகளில் 122 நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஒரு மனதாக ஆதரித்தன.

122 நாடுகளின் ஒத்துழைப் போடு வந்த இந்தத் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவின் அங்கீகாரத்தையும் பெற்றது.

இந்தப் பாதுகாப்புக் குழுதான் ‘Security Council’ தான் உச்சப்பட்ச அதிகாரத்தைப் பெற்றது.

இதில் 15 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இந்த 15 உறுப் பினர்களும் ஒத்துக் கொண்ட நிலையில் இந்தத் தீர்மானம் நிறைவேறிடும் நிலையை எட்டி இருந்தது.

ஆனால் அமெரிக்கா தனக் கிருந்த “வீட்டோ” அதிகாரத் தைப் பயன்படுத்தி இந்தத் தீர்மானத் தைத் தடுத்துவிட்டது. மொத்த உலகமும் அதிர்ந்து போனது ஐக்கிய நாடுகள் சபையின் மேலிருந்த எல்லா நம்பிக்கையும் தகர்ந்தது.

மேற்கு கடற்கரையில் வாழ்ந்த பாலஸ்தீன மக்கள் தொடர்ந்து தங்கள் இல்லங் களிலிருந்து விரட்டப்பட்டு வருகின்றார்கள்.

ஒபாமா பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்த்து விடுவோம் எனப் பேசிய பேச்சுகள் அனைத் தும் போலியானவை.

**பாலஸ்தீனில் பேசப்படும் சமாதானங்கள்:**

அமெரிக்காவும் அதன் சட்டைப்பைக்குள்ளிருக்கும் ஐக்கிய நாடுகளும் அடிக்கடி பாலஸ்தீன சமாதான பேச்சுகள் என கூப்பாடு போடுகின்றனர்.

இந்தச் சமாதான பேச்சுகள் பணிந்து போங்கள் எனக் கேட்டுக் கொள்வதாகவே அமைந் திருக்கும். இப்போதும் அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் நீங்கள், யூத குடியிருப்புகளைச் சகித்துக் கொள்ளுங்கள் என்றே கேட்டு வருகின்றன.

இது ஐக்கிய நாடுகளின் சபை அமெரிக்கா இவற்றின் கொள்கை என்கின்றார் டயான டட்டா என்ற ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பாலஸ்தீன ஆலோசகர்.

**பாலஸ்தீனில் தொடரும் அமெரிக்க துரோகம்**

2009ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் 18 பதினெட்டு தீர்மானங்கள் கொண்டு வரப் பட்டன. இந்தத் தீர்மானங்கள்:

1. **பாலஸ்தீனில் குறிப்பாக கிழக்கு ஜெரூசலத்தில் யூதர்கள் ஏற்படுத்தி வரும் குடியிருப்புகள் அனைத் தும் சர்வதேச விதிகளுக்கு எதிரானவை என்பதை உறுதிப்படுத்தின. இஸ் லேரைக் கண்டித் தன.**

2. **பாலஸ்தீனில் வாழும் முஸ்லிம்களுக்குத் தான், தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானித்திடும் உரிமை உண்டு என்பதை அழுத் தம் திருத்தமாக கூறின.**

ஆனால் இந்தத் தீர்மானங் கள் 18ல் 16-ஐ அமெரிக்கா தனது ‘வீட்டோ’ பவரைப் பயன்படுத் தித் தடை செய்தது. இரண்டன வற்றில் ஓட்டுப் போடவில்லை.

‘ஐக்கிய நாடுகள் சபை தொடங்கிய நாளிலிருந்து இன்று வரை நிறைவேற்றப்பட்ட தீர் மானங்களில் 70 சதவிகிதம் இஸ்ரேலை காப்பாற்றிடும வகை யிலும் இஸ்ரேலின் அநியாயங் களை அங்கீகரிக்கும் வகையிலுந் தான் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன’ என்கின்றார் டயனா டட்டா என்ற ஐ.நா. வின் முன்னாள் பாலஸ்தீன ஆலோச கர்.

***ஃப்ரண்டலைன்***
***மார்ச் 25,2011***

2010 ஆம் ஆண்டிலும் பாலஸ்தீன மக்களின் உரிமை களை உறுதி செய்யும் தீர்மானங் களும், இஸ்ரேலின் அட்டூழியங் களைக் கண்டிக்கும் தீர்மானங் களும் அனேகம் கொண்டு வரப் பட்டன. அவை அனைத்தையும் அமெரிக்கா தனது வீட்டோ பவரைப் பயன்படுத்தித் தடைசெய்தது.

இப்படி

யூதர்கள் தங்கள் அநியாயங் களைத் தொடர்ந்து வருகின்றார் கள். அமெரிக்கர்கள் அவர் களுக்கு எல்லா உதவிகளையும் செய்து வருகின்றார்கள்.

இஸ்லாம் எங்கள் வழி! இன்பத் தமிழ் எங்கள் மொழி!

## காயல்பட்டினத்தில் 2011 ஜுலை 8,9,10 தேதிகளில்

# இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 15வது மாநாடு

பேரன்புடையீர் அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 15வது மாநாடு, தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 2011 ஜுலை 8,9,10 வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று தினங்கள் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது இன்ஷா அல்லாஹ்.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து அறிஞர்கள் பங்கேற்க உள்ள இம்மாநாட்டில் ஆய்வரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், இசையரங்கம், பட்டிமன்றம், மகளிர் அரங்கம், கண்காட்சி உள்ளிட்டவை நடைபெற உள்ளன.

எழுத்தாளர்களின் முகவரிகளோடு 'இலக்கிய இணையம்', ஆய்வுக் கட்டுரைகளோடு 'ஆய்வுக் கோவை', காயல்பட்டினத்தின் வரலாறு மற்றும் தொடர்புகளை உள்ளடக்கிய 'சிறப்பு மலர்', புலவர்களின் நூல்கள், ஆவணபடம் வெளியிடப்பட உள்ளன.

'ஊடகம்' என்னும் தலைப்பில் 40 வரிகளுக்கு மிகாமல் கவிதை, "இஸ்லாமும் இளைய தலைமுறையும்'' என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கும், "இலக்கிய வளர்ச்சிக்கு காயல்பட்டினத்தின் பங்களிப்பு'' என்ற தலைப்பில் பள்ளிக்கூடம் மற்றும் மதரஸா மாணவர்களுக்கும் கட்டுரைப் போட்டிகள் நடைபெறுகின்றன. இவைகளுக்கான ரொக்கப் பரிசுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மாநாட்டில் பங்கேற்போர்க்கு தங்குமிடம், உணவு, அன்பளிப்பு பொருட்களுக்காக பேராளர் கட்டணம் ரூபாய் முன்னூறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பேராளர் கட்டணம், ஆய்வுக் கட்டுரை, கவிதை, சிறப்பு மலருக்கான எழுத்தோவியங்கள், போட்டிகளுக்கான கட்டுரைகள் 15.06.2011 க்குள் கிடைக்குமாறு அனுப்பித்தர வேண்டுகிறோம். கால நீட்டிப்பிற்கு கண்டிப்பாக வாய்ப்பில்லை.

தொடர்புக்கு

**பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர்**

பொதுச் செயலாளர், இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம்

8, தம்பி சாயபு மரைக்காயர் வீதி – காரைக்கால் – 609 602 கைபேசி – 9842488047

கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்
பி.23/26, ஈ.வி.கே சம்பத் சாலை
வேப்பேரி, சென்னை – 600007
கைபேசி– 9500035786

காயல் எஸ்.இ. அமானுல்லாஹ்
484, நெய்னா தெரு
காயல்பட்டினம் – 628204
கைபேசி – 9443342222

## இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 15–வது மாநாட்டு குழு

" **செய்யது இபுராகீம் ஆலிம் கட்டிடம்**, 28, **பிராதான வீதி , காயல்பட்டினம்** – 628204.

**மின்னஞ்சல் : kitlc@kayalpatnam.com**

---

**சிறப்பு மலருக்கான கட்டுரைகள் மற்றும் விளம்பரங்களை சென்னை முகவரிக்கும் மற்றவைகளை காரைக்கால் முகவரிக்கும் அனுப்பித்தர வேண்டுகிறோம்.**

## அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# தூரமான உறவு

நபியே! மாதவிடாய் பற்றியும் உங்களிடம் கேட்கின்றார்கள்; நீங்கள் கூறுங்கள்: “அது (அசுத்தமான) ஓர் இடையூறு. எனவே மாதவிடாய்க் காலத்தில் பெண்களை விட்டு விலகி அவர்கள் சுத்தமாகும் வரையில் அவர்களை அணுகாதீர்கள். சுத்தமாகி விட்டால் அல்லாஹ் உங்களை ஏவிய முறைப்படி அவர்களிடம் செல்லுங்கள்”

**குர்ஆன்(*2:222*)**

“போன வாரம் அத்தை வீட்டின் மூலையில் ஒதுங்கி இருந்தாங்க. . . . இன்னைக்கு அம்மா வீட்டின் மூலையில் ஒதுங்கி இருக்கிறாங்க. . . ஏன் பாட்டி அம்மாவுக்கு என்ன?” என்று கிராமத்து சிறுமிகள் விஷயம் தெரியாமல் கேள்வி மேல் கேள்வி கேட்டு பாட்டிமார்களைத் துளைத்தெடுப்பார்கள்.

“அது ஒண்ணுமில்லை கண்ணு. . . . வானத்தில் பறந்த வெள்ளை காக்கா உங்கம்மா தலையில் தட்டிடுச்சு. . . அதான் தீட்டாயிட்டா” என்பார் பாட்டி.

மாசா மாசம் அம்மாவும், அத்தையும் படும் அவஸ்தைக்கு அந்த வெள்ளைக் காக்காத்தான் காரணமா. . .? என்று கிராமத்து சிறுமிகள் கோபப்படுவார்கள். அதே சமயம் இந்த சிறுமிகள்


**இலக்கியச் சுடர் ரஹ்மத் ராஜகுமாரன்**
**(கைபேசி: 9443446903)**



வீட்டு மாடிக்குப் போக நேரிடும்போது வானத்தில் பறக்கு எந்த வெள்ளை நிறப் பறவையைப் பார்த்தாலும் பயங்கரமாக மிரள்வதுவுண்டு! அது திடுதிப்பென்று வந்து நம் தலையைத் தட்டிவிட்டுப் போனால் என்னாவது என்ற திகிலில் தலையை மறைத்து ஒரு துண்டு கட்டிக் கொண்டு வீட்டுக்குள் ஓடுவார்கள்.

இதெல்லாம் பழைய கதை என்றாலும் இன்னும் சில சகோதர சமுதாயத்தார் வீடுகளில் வெள்ளைக் காக்கா தலையைத் தட்டிக் கொண்டுதான் இருக்கிறது. அந்த கதையெல்லாம் சிறுமிகள் வயதுக்கு வரும் வரைதான் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். அதன் பிறகு ஒரு நாள் வெள்ளை காக்கா அவர்களின் தலையையும் தட்டும் போதுதான் வீட்டு மூலையில் உட்காரும் விஷயம் புரியும்.

வீட்டுக்கு புறம்பாக ஒரு சிறு குடிலில் மாதவிடாய் பெண்களை இருக்கச் செய்வது. சகோதர சமுதாயதார்களிடம் இரண்டு தலைமுறைக்கு முன்னால் காணப்பட்டது போல, நபி(ஸல்) அவர்களின் காலத்திலும், அது நடை முறையில் இருக்கறிது. இது விஷயமாக அபுத்தஹ்தாஹ் (ரலி) என்கிற ஸஹாபி அவர்கள், “அல்லாஹ்வின் தூதர்அவர்களே. . பெண்கள் மாதவிடாய் உள்ள போது அவர்களிடம் நாங்கள் நெருங்கலாமா . ?” என்று வினவினார்கள். அப்



போதுதான் இறைவன் மேற் கண்ட குர்ஆன் வசனம் (2:222)யை இறக்கி அருளினான்.

இந்த வசனம் இறங்கிய பிறகும் சில ஸஹாபிகள், "மாத விடாய் காலத்தில் பெண்களை விட்டு விலகி அவர்கள் சுத்த மாகும் வரையில் அவர்களை அணுகாதீர்கள்" - என்று வேத வரியின் புறப் பொருளை மட்டும் கவனித்து மாதவிடாய் நாட்களில் அவர்களுக்கு மிக குறைவான துணிமணிகளை பயன்படுத்த அனுமதியளித்தனர். இதனால் இரவு நேரங்களில் மிக கடுமை யான குளிரில் வாடி வதங்கினார் கள் பெண்கள். இதனைக் கண்டித்த நபி (ஸல்) அவர்கள், "மாதவிடாய் காலத்தில் பெண் களிடம் நீங்கள் உடலுறவு கொள்வதைத்தான் தவிர்க்க வேண்டுமே தவிர பெண்களை வீட்டுக்குப் புறந்தள்ளும் யூதர்கள் மாதிரி நீங்கள் நடந்து கொள்ள வேணடாம்" என அறிவுறுத் தினார்கள்.

**மாதவிடாய் பற்றி விஞ்ஞான ரீதியாக . . .**

சங்க இலக்கியங்கள், ஒரு பெண்ணின் வாழ்கையை அவள் வயதை வைத்து பேதை (5வயது வரை), பெதும்பை (12 வரை), மங்கை (16வரை), மடந்தை (21வரை), அரிவை (27 வரை) தெரிவை (35வரை), 35வயதுக்கு மேல் பேரிளம் பெண் என்று ஏழு விதமாக, பிரிக்கின்றன.

. . . ஆனால் மருத்துவ விஞ் ஞானம் பெண்களே மொத்தம் நான்கு பிரிவுகளாகத்தான் பிரிக்கிறது. வயதுக்கு வரும் காலம் வரை அதாவது, 14 வயது வரையிலான சிறுமிப் பருவம்... 14 முதல் 40 வரையான குழந்தை பெறும் பருவம். . . 40முதல் 55 வயது வரை மெனோபாஸை (மாதவிலக்கு நிற்கும் காலம்) எதிர்பார்க்கும் பருவம். மெனோ பாஸைுக்கு அப்புற மான முதிர்ந்த பருவம் என்று பிரிக் கிறார்கள்.

முதலில் சிறுமிப் பருவம். . . இந்த வயதில் பெரும்பாலும் ஆணுக்கும் பெண் பெண்ணுக்கும் பெரியதாக வித்தியாசம் தெரியா மல் உடல் வளர்ச்சி இருக்கும். . . அதற்கப்புறம் ஹார்மோன்கள் விழித்துக் கொண்டு பெண்களின் உடலில் மாயா ஜாலம் புரிய ஆரம்பிக்கின்றன.

இந்த வயதில்தான் அந்தச் சிறுமியின் சினைப் பையிலிருந்து உருவாகக்கூடிய ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டீரான் ஹார்மோன் கள் தம் வேலையை ஆரம்பிக் கின்றன. உடம்பின் மறைவிடங் களில் முடிவளர ஆரம்பிப்பதில் இருந்து, மார்பு திடப்படடுக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரி தாக ஆரம்பிப்பது, இடுப்புச் சிறிதாவது என்று அந்தப் பெண்ணின் உடம்பே பூரித்து, மலர்வதற்கு ரெடியாகிறது.

அதிலும் பெண்களுக்கு 12க்கும் மேல் 15க்குள்ளான வயது, ஒரு மேஜிக் கால கட்டம்! கண்ணுக்கு முன்னே பாவாடை சட்டையில் ஓடியாடிக் கொண்டி ருந்த சிறுமி, அற்புதமான கிரா பிக்ஸ் வேலைபாடுகள் செய்தது போல் மடமடவென மாறி, பெண்மையின் முழு எழிலோடு நிற்பாள்! உடல்ரீதியாக ஒரு பெண் மெல்ல மெல்ல வளர்ச்சியடைய ஆரம்பிக்கும் இந்த நேரத்தில் தான் அவள் 'பெரியவளாகும்' அந்த நிகழ்ச்சியை பூப்படைவது, சடங் காவது, வயது வருவது, மஞ்சள் நீராட்டுவது என்று விதவிதமான பெயர்களில் எல்லாம் அழைக்கப் படும் மாந்திரத் தீட்டு என்கிற மாதவிடாய் ஒவ்வொரு மாதமும் வரத் தொடங்குகிறது.

கருப்பையை மையாக வைத்து விரித்த ஷேப்பில் இருக் கின்றன சினைப் பைகள் இரண் டும்! இதில் ரொம்பவும் ஆச்சயரிய மான விஷயம் என்னவென்றால் அம்மாவின் வயற்றில் ஒரு மாதச் சிசுவாக இருக்கும் போதே, ஒரு பெண் குழந்தைக்கு இந்தச் சினைப் பைகள் வளர்ந்துவிடுகின்றன. பிறந்தவுடன் இது சினை முட்டை களையும் உற்பத்தி செய்ய ஆரம் பித்து விடுகின்றன!

சினை முட்டை ஒவ்வொன் றும் பல்லி மிட்டாய்க்குள் சீரகம் இருப்பது போல் திரவம் நிறைந்த திசுப் பைகளான 'சினை முட்டைக் கூடு' களுக்குள் அமைந்திருக்கும். குழந்தையாக இருக்கும்போது ஒரு பெண் உற்பத்தி செய்யும் இது போன்ற சினை முட்டைகள் எல்லாமே முதிராத முட்டைகள் என்பதால், அவை தன்னைச் சுற்றியிருக்கும் இந்தப் பையைக் கிழித்துக் கொண்டு வெளிவராம லிருக்கும்! சிறுமி 14 வயது ஆகும் போதுதான் அவை வளர்ந்து முதிர் ச்சியடைய ஆரம்பிக்கின்றன. முழுசாக வளர்ந்த சினை முட்டை அதற்கு மேல் தாங்காமல் திமிறிய படி "பளக்"கென்று அந்த திரவப் வையைக் கிழித்துக் கொண்டு வெளிவருகிறது.

இதுதான் 'ஒரு பெண் பருவம் எய்திவிட்டாள்' என்பதற் கான உள்அடையாளம்! பெண் கள் குழந்தைகள் பெற்றுத் தரும் இயந்திரம் அல்ல என்று பெண்

ணியவாதிகள் உரக்க குரல் கொடுத்தாலும் இயற்கை என்னவோ, பெண்ணை ஒரு குழந்தை பெறும் இயந்திரமாகத் தான் படைத்திருக்கிறது. முன்பெல்லாம் பெண்களுக்கு மாத விலக்கு ஒரு பிரச்சனையாக இருந்ததில்லை. ஆனால் இன்றைய பெண்களுக்கு மாதவிலக்கு பெரிய பிரச்சனையாக இருக்கிறது.

இரண்டு தலைமுறைக்கு முன்பு வரை பெண்கள், பெரும்பாலும் கர்ப்பமான நிலையிலேயே இருந்தார்கள். இதனால் அன்றைய பெண்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் 10 முதல் 20 தடவைகள் மட்டுமே மாத விலக்கு பிரச்சனையை சந்தித்தார்கள். ஆனால் இன்றைய வருடத்திற்கு 13முறை மாதவிலக்கை அனுபவிக் கிறார்கள். ஒரு பெண்ணுக்கு 2 முதல் 4 குழந்தைகள் இருந்தால் அவள் தன் வாழ்நாளில் 350 முதல் 400 முறையும், குழந்தை இல்லாத பெண்கள் என்றால் 600 முறையும் மாத விலக்கை சந்திக்கிறார்கள்.

மாத விலக்கு முடிந்து எப்போது முழு சுத்தம் ஆவோம் என்பதில் சில பெண்களுக்கு சந்தேகம் இருக்கிறது.

ஒரு முறை இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் ஒரு பெண் ‘கொணுஞ்சி’ என்ற ஒரு பழத்தைக் கொடுக்கிறான். கொணுஞ்சி பாரசீக நாட்டில் விளையக்கூடிய பழம். இப்பழத்தின் தோல் கருஞ்சிவப்பு நிறத்திலிருந்து வெளிர் மஞ்சள் நிறம் வரை இரண்டு நிறத்திலும் இப்பழத்தின் நிறம் இருக்கும். இப்பழத்தைக் கொடுத்தவிட்டு ஏதோ ஒரு கேள்விகணை தொடுப்பது போன்று இமாம் அவர்களைப் பார்க்கிறாள். இமாம் அவர்கள் அப்பழத்தை இரண்டாக பிய்த்து உள்ளே இருக்கும் வெள்ளை நிற பழத்தை காட்டுகிறார். உடனே அந்த பெண்ணும் தலையை ‘சரி’ என்று ஆட்டிவிட்டு போய் விடுகிறாள்.

இமாமைச் சுற்றி இருந்தவர்கள் என்ன விபரம் எனக் கேட்கிறர்கள். உடனே இமாம் அவர்கள் “அந்தப் பெண்ணுக்கு மாதவிலக்கு முதலில் கருஞ் சிவப்பு நிறத்தில் வந்து பின் வெளிர் மஞ்சள் நிறமாகி விடு கிறது. இத்தருணத்தில் முழுச் சுத்தம் அடைந்துவிட்டேனா. . .?” என்று பழத்தை காண்பித்து கேட்டாள். நானும் “முழுச் சுத்தம் என்பது வெள்ளை நிறமாக வரும்வரை” என்று சைகை மூலமே காண்பிக்க, அப்பழதத் தை பிய்த்த அதனுள் இருக்கும் வெள்ளைநிற பழத்தைக் காட்டி னேன் என்றார்கள்.

கருத்தடை மாத்திரைகள் வந்த பின் தான் பெண்களுக்கு மாதவிலக்கு பிரச்சனை ரீதியான ஏற்ற இறக்கம் உண்டு என்பதை தெரிந்து கொண்டனர்.

மாதவிலக்கு முடிந்த முதல் நாளில் இருந்து 21 நாட்களுக்கு ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன்கள் நல்ல எண்ணங்களை, மகிழ்வான உணர்வுகளை ஏற்படுத்துகின்றன. பாசிட்டிவான மனநிலையை உண்டாக்குகின்றன. பெண்ணின் ‘இனப்புணர்ச்சி’ உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கின்றன. மாத சுழற்சியின் நடுவில் கருமுட்டை வெளிப்படும் நாளில் அவளது புணர்ச்சி உணர்வு உச்சக்கட்டத்தை அடைகிறது. அப்போதுதான் அவளது உடலில் “டெஸ்டோஸ்டிரான்” என்ற ஆணுக்கான ஹார்மோன் அதிகமாக சுரக்கத் தொடங்குகிறது. இந்த ஹார்மோன் அதன் இயல்பான புணர்ச்சி உணர்வை மேலும் தூண்டி விடுகிறது.

இயற்கை மிக அற்புதமானது. பெண் விலங்குகளும் இது போன்ற காலகட்டங்களை சந்திக்கின்றன. கருமுட்டை வெளிப்படும் காலங்களில் மட்டும் அவை ஆண் விலங்குகளை வலுக்கட்டாயமாக தூண்டி விட்டு உறவுக்கு இழுக்கும். மனித இனப் பெண்ணுக்கும் இதே உணர்வு உண்டு.

ஒரு பெண் மிக உன்னிப்பாக தனது உணர்வுகளை கவனித்தால், அவள் உடலில் கருமுட்டை வெளியாகும் நேரத்தை சரியாக கவனிக்க முடியும். அந்த நாளில் பெண் இயல்புக்கே மீறி உற் சாகமாக இருப்பாள். இனிமை யாக பழகுவாள். கணவன் மீது மதிப்பு, மரியாதை இனம் புரியாத ஒரு ஈர்ப்பும் ஏற்படும். ‘கணவர் மிக நல்லவர்’ என்ற பாசிட்டீவான சிந்தனை மலரும். தன்னை மிக அழகாக மாற்றிக் கொள்வாள். தன் கணவனிடம் தன்னை ஒப்படைக்கத் துடிப்பாள். அதற்காக தனது அழகை எடுப்பாக வெளிக்காட்டுவாள். இது எல்லாமே வெளிப்பட்டிருக்கும் கருமுட்டையை கருவாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள்தான். புரிந்தால் சரிதான்.

அதன் பிறகு மேலே சொல்லப்பட்ட வசனத்தின் கடைசி வரியை அமலாக்க வேண்டியதுதான் பாக்கி. பெண்கள் சுத்தமாகிவிட்டால் அல்லாஹ் உங்களை ஏவிய முறைப்படி அவர்களிடம் செல்லுங்கள்

**- குர்ஆன் (2:222)**




# கர்கரேயை கொலை செய்தது யார் ?

## அத்தியாயம் 3

# குண்டு வெடிப்புகளின் விசாரணைகள்

**C) ஏடிஎஸ் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தல்:**

பிறகு ஏ.டிஎஸ் (மராட்டிய தீவிரவாத தடுப்பு படை) குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட 13 நபர்களுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது.

**ஏடிஎஸ் குற்றப்பத்திரிகையில் சமர்ப்பித்த சாட்சியங்களானது:**

1. **குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்கு மூலங்கள்**
2. **செல்போன்கள் மூலம் நடந்த உரையாடல்களை இடைமறித்து கேட்டறிந்த தகவல்கள்**
3. **நார்கோஅனலிசிஸ் டெஸ்ட் என்ற மயக்க நிலை சோதனை**
4. **போலிஸாருடன் நடந்த துப்பாக்கி சண்டையில் என்கவுன்டரில் கொல்லப்பட்ட பாகிஸ்தானியனின் டிஎன்ஏ மரபணு சோதனை**
5. **குற்றவாளிகளின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆர்டிஎக்ஸ் வெடிப் பொருட்கள்**
6. **கோவாண்டியில் இருந்து பாந்த்ராவிற்கு வெடி குண்டுகளை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட மாருதி கார்**

ஏடிஎஸ் சுட்டிகாட்டிய சாட்சிகளில் 2 முக்கிய சாட்சிகளில் ஒருவர் மேற்கு இரயில்வேயில் வழக்கமாக பயணிப்பவர். அவரின் கூற்றுப்படி சம்பவம் நடந்த நாளன்று குண்டு வெடிப்பில் சந்தேகிக்கப்படும் நபர்களில் ஒருவர் எடுத்து வந்த கனமான ஒரு பொருள் அவரை இடித்ததால் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பிறகு சந்தேகிக்கப்படும் நபர்களை பற்றிய அங்க அடையாளங்களை பத்திரிகையில் பார்த்த உடன் தான் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நபர் தான் இந்த சந்தேகிக்கப்படும் நபர் என்பதை அறிந்தார். உடன் தானாகவே முன் வந்து அவரை அடையாளம் காட்டினார்.

**சென்ற இதழ் தொடர்ச்சி**

இரண்டாவது சாட்சி ஒரு வாடகை கார் ஓட்டுனர். சம்பவம் நடந்த நாளன்று சிலர் மூன்று நபர்களை கோவாண்டியில் ஏற்றிக் கொண்டு சர்ச்கேட்டில் கொண்டு வந்து இறக்கிவிட்டனர். அவர்கள் தங்களுடன் கொண்டு வந்த சில பெரிய பெட்டிகளை காரின் முன்பக்க இருக்கையில் வைத்திருந்தனர். பயணத்தின் போது கார் டிரைவர் திடீரென்று பிரேக் அடித்ததில் ஒரு பொருள் கீழே விழுந்தது. இதனால் கோபம் கொண்ட அவர்கள் இவரை கடிந்து கொண்டனர். சிலர் இதனால் சற்று ஆச்சர்யமடைந்தார்கள். பிறகு இந்த மர்ம நபர்களை பற்றிய மாதிரி புகைப்படங்களை பத்திரிகைகளில் பார்த்த உடன் இவர் அவர்களை அடையாளம் காட்ட முன் வந்தார்.

**D)சாட்சியங்கள் எந்த அளவு நம்பத்தகுந்தவை?**

1. நெரிசல் மிகுந்த புறநகர் ரயிலில் பல வாரங்களுக்கு முன் வாக்குவாதத்தில் ஈடு

பட்ட தன்னுடன் பயணித்த ஒருநபரை வெறும் அங்க அடையாளங்களை பத்திரிகையில் பார்த்தவுடன் நினைவுபடுத்தி எப்படி அடையாளம் காட்ட முடியும்?

2. அதே சந்தேகக் கேள்விதான் டாக்ஸி ஓட்டுனர் விஷயத்திலும் தொங்கி நிற்கிறது. குண்டு வெடித்த நாளிலிருந்து தான் ஏற்றி சென்ற நூற்றுக்கணக்கான பயணிகளில் அந்த சில நபர்களை மட்டும் எப்படி ஞாபகத்தில் கொள்ள முடியும்?

3. எங்கு எப்படி செல்போன் உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டன? ஒரு வேளை அவர்களது தொலைபேசி எண்கள் முன்பே கிடைத்து கண்காணிக்கப்பட்டும் பதிவு செய்யப்பட்டு வந்திருந்தும் ஏன் இந்த நபர்கள் முன்பாகவே கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்படவில்லை? இல்லை குண்டு வெடிப்புக்கு பின்பு தான் அவர்களது செல்போன் உரையாடல் கண்காணிக்கப்பட்டது என்றால் எதன் அடிப்படையில் அது செய்யப்பட்டது? செல்போன் உரையாடல் விஞ்ஞான பூர்வமாக அடையாளம் காணப்பட்டதா?

4. எம் சி ஒ சி எ என்ற மராட்டிய மாநில பொடாவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சில பிரிவுகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதன் அடிப்படையில் வழக்கு உச்ச நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும் பொழுது போலீஸால் மராட்டிய பொடா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் எந்தளவுக்கு நம்பகத்தன்மை கொண்டவை?

5. குற்றத்தை உறுதி செய்திட வேறு அதிகப்படியான ஆதாரங்கள் இல்லாமல் மயக்க நிலை சோதனை அடிப்படையில் மட்டும் ஒருவரை குற்றவாளி என்று நிரூபிக்க முடியுமா?

6. டிஎன்ஏ என்ற மரபணு சோதனை மூலம் ஒரு பாகிஸ்தானியரை எப்படி அடையாளம் காட்டிட முடியும்? இந்த சோதனை மூலம் இவரின் மதம் நாடு அல்லது இவர் சார்ந்த தீவிரவாத இயக்கத்தை அடையாளம் கண்டுபிடிக்க இயலுமா?

7. யாரோ ஒருவரின் வீட்டில் இருந்து மும்பை காவல் துறையால் கைப்பற்றப்பட்ட ஆர்டிஎக்ஸ் பற்றிய செய்தி எந்த அளவுக்கு நம்பத்தகுந்தவை?

இவ்வாறாக இந்த வழக்கின் புலன் விசாரணையில் பலவிதமான முரண்பட்ட செய்திகளே நிறைந்து காணப்படுகின்றன, ஏடிஎஸ் மராட்டிய தீவிரவாத எதிர்ப்புப்படை (ஐபி என்ற மத்திய உளவுத்துறை என வாசிக்கவும்)யால் சாட்சியங்கள் கையாளப்பட்டிருக்கும் விதத்தை எந்த சராசரி அறிவுபடைத்தவரும் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தளவுக்கு என்றால் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்கே நாராயணன் அவர்களே இந்த சாட்சியங்களில் திருப்தி கொள்ளவில்லை. அவர் கூறுகிறார் சில சிக்கலான புதிர்கள் தீர்க்கப்படவில்லை. ஆகவே சாட்சியங்கள் சரியாக உள்ளன என்று கூற இயலாது

இவ்வாறு சிக்கலான பல பதில்களுக்கான விடை கிடைக்காத நிலையிலும் மற்றும் பாகிஸ்தானிய உளவுத்துறையின் தொடர்பு இந்த குண்டு வெடிப்பில் உள்ளதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கும் எந்த சாட்சியமும் இல்லாத சூழ்நிலையில் மும்பை நகர போலீஸ் ஆணையர் ஏ.என்.ராய் இந்த வழக்கின் விசாரணையை வெற்றிகரமாக முடித்து விட்டோம் என்று எக்காள முழக்கமிட்டிருக்கக்கூடாது

உண்மை என்னவென்றால் குண்டுவெடிப்பானது மும்பை போலீஸ் கமிஷனரின் நீதிவரம்பு அதிகார எல்லைக்குள் நடைபெறவில்லை. ஆதலால் இந்த வழக்கில் ஈடுபட எந்த அதிகாரமும் இல்லை என்பதோடு மும்பை நகர காவல்துறை இந்த வழக்கினை புலன் விசாரணை செய்யவும் இல்லை என்பதே உண்மை. மும்பை இரயில்வே காவல் துறை கமிஷனரின் வரம்பு அதிகார எல்லைக்குள் இந்த குண்டு வெடிப்பு நடந்துள்ளது. இரண்டாவதாக இந்த வழக்கின் புலன் விசாரணை மஹாராஷ்டிரா காவல் துறை இணை ஆணையரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏடிஎஸ் தீவிரவாத தடுப்புப்

படை செய்துள்ளது. ஆகவே இந்த வழக்கு பற்றி பத்திரிகையாளர் சந்திப்பினை கூட்டி அதை விளக்கிடும் உரிமையை மும்பை இரயில்வே கமிஷனருக்கோ அல்லது ஏடிஎஸ் தீவிரவாத தடுப்பு தலைவருக்கோ அல்லது காவல் துறை இணை ஆணையருக்கோ தான் இருக்கின்றது. ஆனால் ஐபி என்ற உளவுத் துறையின் உத்தரவிலோ அல்லது மாநில அரசாங்கத்தின் உத்தரவிலோ அல்லது வேறு சில காரணங்களுக்காகவோ மும்பை காவல் துறை கமிஷனர் ஏ.என். ராய் அவர்கள் பத்திரிகைகளுக்கு தகவல்களை சொன்னார்கள். ஒரு நேர்மையான அதிகாரியாக இருந்திருந்தால் இதை அவர் மறுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. துரதிருஷ்டவசமாக இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து ஐபி என்ற மத்திய உளவுத்துறை இதுபோன்று சாட்சியங்களை திரித்து வருகின்றது. இதன் உண்மையான நோக்கத்தையும் நமது நாட்டு தலைவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.

இந்தியாவில் நடக்கும் குண்டுவெடிப்புகளின் மூலம் உளவுத்துறை பாகிஸ்தானையும் அதன் ஐஎஸ்ஐ மீதும் முழுப் பழியையும் சுமத்தி இந்திய முஸ்லிம்களின் நன்மதிப்பை கெடுத்து அதன் மூலம் பொது மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பு ஏற்பட செய்வதன் மூலம், பிராமண மற்றும் சங்பரிவார் தங்களது கொடூரமான செயல்களை எந்த தடங்களுமின்றி செய்து வருகின்றன. இதன் மூலம் ஏற்படும் பலன்களை சங்பரிவாரின் அரசியல் பிரிவு பாரதீய ஜனதா கட்சி அறுவடை செய்து வருகிறது என்பதே நிதர்சனமாக உண்மை. ஏடிஎஸ் மராட்டிய தீவிரவாத எதிர்ப்பு படையின் இதுபோன்ற செயல்களால் உலகளவில் இந்தியாவிற்கு பலவகையில் நெருக்கடியும் தலைகுனிவும் ஏற்பட்டுள்ளன.

## E) மத்திய உளவுத்துறையின் புதிய (ஐ.எம்) இந்திய முஜாஹிதீன் கோட்பாடு

இந்தியன் முஜாஹிதீன் (ஐ.எம்) என்ற அமைப்பு தான் 2006ல் மும்பை இரயிலில் நடந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்பதை கண்டுபிடித்து அதை மும்பை குற்றப்பிரிவு வெளியிட்டதன் மூலம் ஏ.டி.எஸ்-இன் நம்பகத்தன்மையின் அடிவேரையே உலுக்கிவிட்டது. மும்பை குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளில் ஐந்தில் மூன்று நபர்கள் குண்டு வெடிப்பை நிகழ்த்திய 3 பேர் கொண்ட குழுவில் ஒரு பகுதியினர். இதை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளனர். மேற்சொன்ன ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்தவர்கள் இந்திய முஜாஹிதீன்கள் என்ற அமைப்பை நிறுவியவர்களுள் ஒருவரான சாதிக் ஷேக். இவர் செப்டம்பர் 24ல் மும்பையில் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் டில்லி பாட்லா ஹவுஸில் 19 செப்டம்பர் 2010ல் போலீஸாருடன் நடந்த துப்பாக்கி சண்டைக்குப்பின் சேக் ஆரிஃப் என்பவருடன் சயீப் என்பவரும் கைது செய்யப்பட்டார். சாதிக் மற்றும் ஆரிப் தாங்கள் ஒப்புதல் வாக்குமூலங்களை மும்பை காவல் துறையிடம் தந்தார்கள்.

அதில் சயீஃப் (saif) டெல்லி போலீசாரிடம் பேசியதாக ஒத்துக்கொண்டார். சிலர் டெல்லி துப்பாக்கி சண்டை யில் ஈடுபட்ட ஆதிஃப் அமீன் மற்றும் முஹம்மது சாஜித் ஆகியோரின் பெயர்களையும், துப்பாக்கி சண்டைக்குப் பிறகு போலீசாரால் கைது செய்யப் பட்ட ஜிசான் மற்றும் தலைமறை வாக உள்ள சயீஃபின் (saif) சகோதரர் Dr. சாநவாஸ்கான் மற்றும் அபுரஷீத் ஆகியோரின் பெயர்களையும் சேர்த்து மொத்தம் 5 நபர்களை மும்பை குண்டு வெடிப்புக்கு காரணமான வர்கள் என்று அடையாளம் காட்டி உள்ளனர்.

முன்னதாக குறிப்பிட்ட 13 பேர்கள் இரகசியமாக செயல்படும் குழுவாக (Sleeper cell) இருக்கலாம் அல்லது வற்புறுத்தலின் பேரில் காவல்துறை அவர்களை கைது செய்து இருக்கலாம். ATS - தீவிரவாதத் தடுப்புப் படையால் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களிலும் மும்பை குற்றப்பிரிவு காவல் துறையினரால் சமீபத்தில் கைது செய்யப்பட்ட 3 நபர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களிலும் பல முரண்பாடுகள் காணப்படுகிறன என்பதை கீழ்காணும் உண்மைகள் உறுதி படுத்துகிறன.

1. ATS - மராட்டிய தீவிரவாத தடுப்புப்படையின் கூற்றுப்படி பைசல் ஷேக், ஆஷிப் கான் பஷீர், ஆகிய இந்த இருவர்தான் முக்கிய சதிகாரர்கள். ஆனால் மும்பை குற்றப்பிரிவு காவல்

துறையினரோ (Indian mujahideen) இந்தியன் முஜாஹிதீன் அமைப்பை சேர்ந்தவர்களில் ஒருவரான சாதிக் ஷேக்தான் இந்த குண்டு வெடிப்பின் சதிகாரர் என கூறகின்றனர்.

2. வெடிகுண்டுகள் முஹம்மது அலியின் இல்லத்திலும் (Gowandi) கோவாண்டி செம்பூர் பகுதியிலும் ஒன்று சேர்க்கப்பட்டன என்ற ATSஇன் கூற்றுக்கு முரணாக அலி ரஹித் செவ்ரி (sewri) பகுதியில் வாடகைக்கு எடுத்த ஒரு அடுக்குமாடி குடியிருப் பில் ஒன்று சேர்க்கப்பட்டது (assemble) என்று குற்றப்பிரிவு கூறுகிறது.

3. ATS - மராட்டியத் தீவிர வாதத் தடுப்புப் படையைப் பொருத்தவரை வெடிகுண்டு களை தயாரிக்க பஷிர்கான், ஆசிப்கான் ஆகியோர் அமோனியம் நைட்ரேட்டும் மற்றும் வெடிப்பான்களைக் (detonators) கொண்டு வந்தனர். அதே நேரத்தில் பாகிஸ்தானியரான (Ehsanullah) இஹ்ஸாணுல் லாஹ் கொண்டு வந்த ஆர்.டி.எக்ஸ்ஸை கமால் அன்சாரி எடுத்து (transport ) சென்றார். இந்த கூற்றுக்கு முரண்படும் விதத்தில் ரியாஜ் பட்கல் என்ற ரோஷன்கான் சவ்ரி அடுக்குமாடி குடியிருப்பில் வெடிகுண்டுகளை தயாரிக்க அமோனியம் நைட்ரேட் கொண்டுவந்தார் என மும்பை குற்றப்பிரிவு கூறுகின்றது. இந்த குண்டு வெடிப்பில் ஆர்டிஎக்ஸ் பயன்படுத்தப்படவில்லை என்றும் மும்பை குற்றப்பிரிவு கூறுகின்றது. இது ஒரு முக்கியமான முரண்பாடாகும்.

4. சாஜித் அன்சாரி குண்டை வெடிக்கச் செய்ய கடிகாரம் மற்றும் வேறு சில பொருட் களை கொண்டு வந்தாரென்று ATS கூறும் அதே வேளையில் எலெக்ட்ரிசியன் ஆரிப் ஷேக்தான் சீதாக்கேம்பில் (cheetah camp) உள்ள தனது வீட்டில்தான் வெடிகுண்டு சர்கியூட்டை தயாரித்து குண்டு வெடிப்புக்கு இரு தினங் களுக்கு முன் சவ்ரி (sewri) அடுக்குமாடி குடியிருப்புக்கு எடுத்துவந்தார் என்றும் கூறுகின்றது. இதுவும் முற்றி லும் முரண்பட்டத் தகவல். இவையெல்லாம் மும்பைக் குற்றப்பிரிவின் தகவல்கள்.

5. ATS தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையில் பாகிஸ்தானிய தீவிரவாதிகள் கோவாண்டி என்னுமிடத்தில் உள்ள ஷேக் முஹம்மது அலீ வீட்டில் வெடி குண்டுகளைத் தயாரிக்க, அதனை ஆசிப்கான், பஷீர் கான், சாஜித் அன்சாரி மற்றும் இஹ்ஸான் சித்திக் ஒன்று இணைத்து வடிவமைக்க உதவி புரிந்தனர் என்று குறிப்பிட்டுள் ளனர். ஆனால் மும்பை குற்றப்பிரிவோ, வெடிக் குண்டுகளை சாதிக்ஷேக், முஹம்மது சயீஃப் மற்றும் இவரது சகோதரர் சாநவாஸ் கான் போன்றோர் ஒன்றி ணைக்க (assemble) அதற்கு ஜீசான் ஷேக், ஆரிப்ஷேக், முஹம்மது சாஜித், அபுரஷீத் மற்றும் ஆதிஃப் அமீன் உதவினர் என்று சுட்டிக் காட்டி உள்ளனர்.

6. குண்டுகளைக் கொண்டு சென்றவர்களும் குண்டுகளை வைத்தவர்களும் முற்றிலும் வேறு வேறானவர்கள்.

7. சயீஃப், டெல்லி காவல்துறை யிடம், “ இந்த 13 பேரும் யார்? யார்? என்பது எனக்குத் தெரியாது என்று கூறியுள் ளார். (புனே மிரர் (THE TIMES OF INDIA , 3 ஆக்டோபர் 2008. ) THE TIMES OF INDIA, MUMBAI , 15th Oct 2008)

பின்னர் வந்த செய்திகள் ஓர் உண்மையை ஊர்ஜிதம் செய்தன. அது இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பிற்கும் குற்றம் சாட்டப்பெற்ற 13 பேருக்கும் இடையே உள்ள தொடர்பை நிரூபிக்க இயலாமற் போனது என்பதே. இது IB என்ற மத்திய உளவுத் துறைக்கு பயங்கர ஆதங்கத்தை ஏற்படுத்தியது.

இதில் ஐபி என்ற மத்திய உளவுத்துறை ஆதங்கப்படுவதற்கு எதுவுமில்லை. காரணம் இரண்டு புலனாய்வுகளுமே அவர்களின் நாட்டப்படியும், திட்டபடியும் தான் நடத்தப்பட்டன. ஒன்றை ஏடிஎஸ் என்ற தீவிரவாத தடுப்புப் படைநடத்தியது. இதன் தலைவர் K.P.ரகுவான்ஷி ஐபி என்ற மத்திய உளவுத்துறைக்கு செஞ்சோற்றுக் கடனாற்றுபவர். இன்னொரு புலனாய்வை மும்பை குற்றப் பிரிவு செய்திருக்கின்றது. அதன் தலைவர் ரகேஷ்மாரியா ஐபி என்ற உளவு துறைக்கு தோட்டத்து தொழும்பர் அடிமை.

உண்மையிலேயே எது எல்லோரையும் ஆதங்கப் படுத்தி இருக்க வேண்டும் என்றால் ஐபி

என்ற உளவுத்துறை புலனாய்வின் போக்கை மாற்றியதுதான் காரணம். இந்தப் புதிய வெளிப் பாடுகள் மோக்கா என்ற மாரட்டிய பொடா நீதிமன்றத் திலிருக்கும், மும்பைக் குண்டு வெடிப்பின் வழக்கை முற்றாகப் பாழ்படுத்திவிடும் என்பதே!

இதில் ஐபி என்ற மத்திய உளவுத்துறை நடந்து கொண்டது முற்றிலும் சந்தேகத்திற்குரியதே. ஐபி என்ற மத்திய உளவுத்துறை மும்பைக் குற்றப்பிரிவு கொண்டு வந்த இரண்டாவது கதையைத் தலையெடுக்க விட்டிருக்கக் கூடாது. காரணம் அது அரசை மிகப் பெரியதொரு நெருக்கடிக்கு உள்ளாக்கி விட்டது. இந்தக் காரணத்தைச் சொல்லியே மத்திய உளவுத்துறை மும்பை குற்றப் பிரிவின் இரண்டாவது கதையை நிறுத்தி இருக்கலாம். ஏனெனில் (ஐபி) மத்திய உளவுத் துறை மும்பைக் குண்டு வெடிப்புகளில் ISI என்ற பாகிஸ்தானின் உளவுப் படைக்குப் பங்குண்டு எனக் கூறிவிட்டது. இப்படித்தான் ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் ரயில் குண்டு வெடிப்பிலும் (ஐபி) மத்திய உளவுத்துறை பாகிஸ்தானிடம், அந்தக் குண்டு வெடிப்பிற்கும் பாகிஸ்தானின் உளவுத்துறைக்கும் பங்குண்டு எனக் கூறியது. பாகிஸ்தானுக்கு மட்டும் இந்த செய்தியை சொல்லிடவில்லை. உலகநாடுகள் அனைத்திற்கும் இந்த செய்தியைச் சொன்னது நமது அரசு. இதற்கு ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் தகவல் களையே நம்பியது நமது அரசு!

ஆனால் பின்னர் 2008இல் மாலேகானில் நடந்த குண்டு வெடிப்புகளை ஆய்வு செய்திடும் போது இந்துத்துவ வாதிகளே ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்புகளையும் நடத்தி னார்கள் என்பதை ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார். நிச்சய மாக ஹேமந்த் கர்கரே ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் அடா வடித் தனங்களுக்கு ஆட்பட வில்லை. அவர் பிராமணர் களின் பேயாட்டங்களை வெளிப்படுத் தினார். உடனேயே ஐபி என்ற மத்திய உளவுத்துறை களமிறங்கி, கர்கரேயின் கையைப்பிடித்தது. கர்கரேயின் போக்கில் அவரை விட்டால், நம் நாட்டின் நம்பகத் தன்மை உலகநாடுகளில் கெட்டுப் போகும் . ஆகவே நாம் அதற்கு வழிவிடக்கூடாது. தடுத்தாக வேண்டும் என்றார்கள். (THE TIMES OF INDIA JUNE 2008) ஆச்சரியப்படும் அளவில் ஐபி இதே வாதத்தை (வெளிநாடுகளில் நமது பெயர் கெட்டுப் போகும் என்ற வாதத்தை ) மும்பைக் குண்டு வெடிப்பு விசாரணையில் முன்வைக்கவில்லை. மாறாக ஐபி என்ற மத்திய உளவுத்துறை புதியதாக கொண்டுவந்த கட்டுக் கதையை ஆதரித்தது.

இங்கே தான் ஐபி என்ற மத்திய உளவுத்துறையின் செயல் கள் நமக்கு வியப்பைத் தருகின்றன. மராட்டிய தீவிரவாத தடுப்புப் படை, ஷம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் ரெயில் குண்டுவெடிப்பு வழக்கை புலனாய்வு செய்த வகை நம்பிடும் வகையில் இருந்தது. ஆனால் மும்பை ரெயில் பெட்டி குண்டு வெடிப்பு வழக்கில், நடந்த புலன் விசாரணை புதிர் புதர்களால் நிரம்பியனவாக இருக்கின்றன. எதுவும் நம்பும் வகையில் இல்லை. அதனால் அதனை விசாலமாக ஆய்ந்தாக வேண்டும்.

அஹ்மதாபாத் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னால், மும்பையின் குற்றப்பிரிவு தலைவர் ராகேஷ் மாரியா, பிரிந்திட முடியாத அளவில் ஐபி என்ற உளவுத்துறையின் முழுமையான கட்டுப்பாட்டில் இயங்கினார். அந்த முழு புலனாய்வையும் அவர் ஐபியின் விரல் அசைப்பிலேயே நடத்தினார். ஆகவே புதிதாக மும்பை குற்றப்பிரிவு கொண்டு வந்த கதை ஐபிக்குத் தெரியாது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. மாறாக அவர்கள் புதிதாகக் கொண்டுவந்த கதையை புனைந்ததே (ஐபி) என்ற மத்திய உளவுத்துறைதான். இது உண்மை என்றாகும் பட்சத்தில் எழும் வினா? ஐபி உளவுத்துறை ஏன் ஒரு புதுக்கதையைக் கொண்டுவந்திட வேண்டும்? இந்தப் புதுக்கதை யால் முதலில் பதிவு செய்த வழக்கு கெட்டுப்போகும். சர்வேதேச அளவில் இந்தியாவின் நம்பகத் தன்மையும் கெடும். இதையெல் லாம் நன்றாகத் தெரிந்திருந்தும் ஐபி உளவுத்துறை ஏன் இந்தப் புதுக்கதையை புனைந்திட வேண் டும்.

ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருட்களை மும்பை குண்டு வெடிப்பில் பயன்படுத்திட வில்லை எனக் கூறிட வேண்டிய

கட்டாயம் ஏன் வந்தது ஐபி என்ற மத்திய உளவுத்துறைக்கு? ஆர்.டி. எக்ஸ் வகை வெடி பொருள்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்பது தெளி வானால் பல பிராமிணர்கள் கைது செய்யப்பட லாம் என ஐபி அஞ்சியது. சில வேளைகளில் ஐபி என்ற மத்திய உளவுத்துறையே இதற்குத் துணை போயிருக்கலாம். இதனால் மும்பைக் குண்டுவெடிப் பில் மத்திய உளவுத் துறையும் சிக்கலாம் என்ற நிலை உரு வானது. இதற்கான சாட்சியங் களும் கிடைக்கவே செய்தன.

மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புக்காவல் துறை மாலேகான் 2008 குண்டுவெடிப்பு களை ஆய்வு செய்தபோது பல உண்மைகள் வெளியே வந்தன. அவற்றுள் முக்கியமானது புரோகித் என்ற இராணுவ அதி காரி இராணுவத்தில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள் களை கடத்தி இருக்கின்றார். இராணுவத்திலிருந்து கடத்தப் பட்ட இந்த வெடிப் பொருள் களைப் பயன்படுத்தியே 2003க்குப் பின் நடந்த பல குண்டு வெடிப்பு கள் அரங்கேற்றப்பட்டுள்ளன.


துவக்கம் 1996 15ம் ஆண்டு சேவை

2011-ம் வருட புனித ஹஜ்
உம்ரா பயண அழைப்பு

கோடை கால உம்ரா பயணம்
மே / ஜுன் / ஜுலை மாதம்

Super Delux Class - 15 நாட்கள் ₹ 62,000/-
Economy Class - 15 நாட்கள் ₹ 49,000/-

புனித ரமளான் உம்ரா பயணம்-30 நாட்கள்

இன்ஷா அல்லாஹ் புறப்படும் தேதி 01.08.2011

Super Delux Class ₹ 1,25,000/-
முந்திய 5 நாட்கள் மதினாவில்
பிந்திய 25 நாட்கள் மக்காவில்

Economy Class ₹ 95,000/-
முந்திய 20 நாட்கள் மக்கா
பிந்திய 10 நாட்கள் மதினா

மக்கா : அல்ஜுத் போன்ற ஹோட்டல் மதினா : அல் அமல் குரூப்

புனித ஹஜ் பயணம்

இன்ஷா அல்லாஹ் புறப்படும் தேதி 31-10-2011 - 40 நாட்கள்

V.I.P. குரூப் ₹ 2,25,000/-
மக்கா, மதீனாவில் டபுள் பெட்ரூம்
+ ₹ 10,000/-

மக்காவில் : ஹரமுக்கு மிக அருகில் அல்கரீம் அது போன்ற ஹோட்டல்
மதினாவில் : ஹரமுக்கு மிக அருகில் அல் அமல் குரூப் ஹோட்டல்
மினா - முஜ்தலிஃபா - அரஃபாவிற்கு தனி பேருந்து வசதி. தவாஃபே ஜியாராவிற்கு அழைத்துச் செல்லுதல் மற்றும் சிறப்பான சேவைகளுடன்

குறைந்த செலவில் மனதிற்கு நிறைவான சேவையில்

மவ்லானா ஹஜ் சர்வீஸ்®

இந்திய-சவுதி அரசின் அங்கீகாரம் பெற்றது.

M/HAJ/REGN/PTO/MUM-129/2010-11

65, பொன்னப்பா தெரு, புரசைவாக்கம், சென்னை-84.
Phone: 044-26414692, 26611650, 42174912 Cell : +91-9444158283, 9791126263 / 4 / 5
www.moulanahaj service.com Email: moulana_imdadullah@yahoo.com


# சென்னையில் நூல் வெளியீட்டு விழா!

சகோதரர் சிராஜுதீன் எழுதிய 'சாதியத்திலிருந்து சகோதரத்துவம் வரை' நூல் வெளியீட்டு விழா சென்னை மந்தைவெளி மதீனா பள்ளிவாசலில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு தொழிலதிபர் அஹ்மது மீரான் தலைமை யேற்றார். ஹுமாயூன் கபீர் வரவேற்புரையாற்றினார். இர்பான் சேட் நூலை வெளியிட்டார். டி.எம். உமர் பாரூக் நூலை பெற்றுக் கொண்டார்.


முஜீபுர் ரஹ்மான் உமரீ, டி.எம். உமர் பாரூக் ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழா ஏற்பாடுகளை ஜரூக் அலி சிறப்பாகச் செய்திருந்தார்.





# எக்ஸெல் 2007

ஒரு குறிப்பிட்ட செல்களில் இருப்பதை கூட்ட AutoSum என்ற சுலபமான வழியை உபயோகிக்கலாம்.

AutoSum என்ற இந்த முறையை உங்களுக்கு தேவையான செல்லில் அதாவது எந்த செல்லில் உங்களுக்கு கூட்டுத்




தொகை வர வேண்டுமோ அதில் வைத்து தேர்வு செய்தவுடன் அந்த செல்லில் பின்வருமாறு அதுவே குறிப்பிட்ட செல்களை தேர்வு செய்து கொண்டு அந்த செல்களை கூட்டலாமா என




கேட்கும். அதுவே சரியான தேர்வு எனில் அப்படியே என்டர் கீயை தட்டினால் அந்த கூட்டு தொகை வந்து விடும். அல்லது நீங்கள் வேறு செல்களை கூட்ட விரும்பினால் என்டர் கீயை தட்டுவதற்கு முன் மௌஸைக் கொண்டு தேவையான செல்களை தேர்வு செய்து கொண்டு பின்னர் என்டர் கீயை தட்டினால் உங்களுக்கு தேவையான செல்களின் கூட்டுத்தொகை அதில் வந்து விடும்.


எப்படி பல செல்களில் உள்ளதை கூட்டுவதற்கு Sum என்பதை உபயோகப்படுத்துகிறோமோ அதே போல் பல செல்களில் உள்ளதை பெருக்க என்ற ஃபார்முலாவை பயன்படுத்தலாம்.

உதாரணத்திற்கு A1 முதல் A5 வரை உள்ள செல்களில் உள்ளதை பெருக்க பின்வரும் ஃபார்முலாவை உபயோகிக்கலாம்.

=Product(A1:A5)

ஃபார்முலாக்களைப் பற்றி அதிகமாக பின்னர் பார்க்கலாம்.

எக்ஸெலில் உள்ள Home மெனுவில் உள்ள டூல்களைப் பற்றி இப்போது பார்ப்போம். Home மெனுவில் உள்ள பல டூல்களை நாம் ஏற்கனவே வேர்டில் உபயோகப்படுத்தி உள்ளோம்.





உதாரணத்திற்கு எழுத்துருக்களை மாற்றுவது, எழுத்தின் அளவை மாற்றுவது, சென்டர் செய்வது, Bold, Italic, UnderLine, Copy, Paste போன்றவை ஏற்கனவே நாம் உபயோகித்ததை போன்றதே.

அதைத் தவிர்த்து உள்ள சில டூல்கள் எக்ஸெலுக்கு என்றே பிரத்யேகமானவை.

பார்டர் டூல் என்பது அதில் குறிப்பிடத்தக்கது.


இந்த பார்டர் டூலையும் நாம் வேர்டில் டேபிள் வரையும் போது உபயோகப் படுத்தியுள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

எக்ஸெலில் உள்ளவற்றை பிரிண்ட் செய்யும் போது அதில் உள்ள கட்டங்கள் எதுவும் பிரிண்டில் வராது.





உங்களுக்கு எந்தெந்த பகுதிகளில் கட்டங்கள் பிரிண்டில் வரவேண்டுமோ அவற்றை தேர்வு செய்து அவற்றை நீங்கள் விரும்பிய வண்ணம் பார்டர் தந்தால் மட்டுமே அதன்படி அது பிரிண்டில் வரும்.

உதாரணத்திற்கு Outside Border, All Border, Bottom Border, Top Border, Thick Border என்று பலவகைகளில் பார்டர்களை வரைந்து கொள்ளலாம். இவ்வாறு பார்டர்களை வரைந்த பின்னர் அந்த பார்டர்கள் பிரிண்டில் வரும்.




இதே போன்று ஒவ்வொரு செல்லிற்கும் எந்த வண்ணம் வேண்டுமோ அந்த நிறத்தை கொண்டு நிரப்பிக் கொள்ளலாம்.


இதற்கு Fill Colour என்ற Option ஐ தேர்வு செய்ய வேண்டும். பல செல்லிற்கு வண்ணத்தை நிரப்ப அந்த செல்களை மொஸைக் கொண்டு தேர்வு செய்து கொண்டு பின்னர் தேவையான நிறத்தைக் கொண்டு நிரப்ப வேண்டும்.




அதே போல் செல்லில் உள்ள நீங்கள் டைப் செய்தவற்றிற்கு நிறத்தை மாற்ற Fontcolor என்ற Option உபயோகிக்க வேண்டும்.

எக்ஸெலில் உள்ள அடுத்த முக்கியமான டூல் Merge & Center ஆகும்.

பல செல்களை




ஒருங்கிணைத்து ஒரே செல்லாக மாற்ற இந்த மெர்ஜ் டூல் உதவும். எக்ஸெலில் தலைப்புகளை தருவதற்கு இது மிகவும் உபயோகமான டூல் ஆகும்.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1 | Year | | | |
| 2 | 2010 | | 2011 | |
| 3 | Male | Female | Male | Female |

உதாரணத்திற்கு பின் வரக்கூடிய டேபிளை பாருங்கள்.

இந்த டேபிளில் ஏ,பி,சி,டி ஆகிய நான்கு கலங்களை

ஒருங்கிணைத்து வருடம் என்ற தலைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதேப்போல் ஏ,பி என்பது இணைக்கப்பட்டு 2010 என்பதும் சி,டி இணைக்கப்பட்டு 2011 என்பதும் உருவாக்கப் பட்டுள்ளது. ஆக இது போன்ற தலைப்பு களை உருவாக்க மெர்ஜ் உப யோகமாக இருக்கும்.

Merge & Center என்பது மெர்ஜ் செய்த பின் அந்த செல்லில் உள்ளதை சென்டர் செய்ய உதவும்.

பல வரிசைகளைகளையும் பல கலங்களையும் ஒன்றாக தேர்வு செய்து மெர்ஜ் என்பதை தேர்வு செய்தால் அவை அனைத்தும் ஒரே செல்லாக மாறிவிடும். அதற்கு பதிலாக அவற்றை தனித்தனி வரிசையாக




மெர்ஜ் செய்ய Merge Across என்பதை தேர்வு செய்யலாம்.

Wrap Text என்பதும் மிகவும் உபயோகமானதொரு டூல் தான்.

ஒரு செல்லில் டைப் செய்வது அந்த செல்லின் அகலத்தை விட கூடுதலாக செல்லும் போது அதை அந்த செல்லிற்குள்ளேயே பல வரிசை களாக வர இந்த டூல் உபயோகப் படும்.

பொதுவாக நீங்கள் எக்ஸெலில் டைப் செய்வது அனைத்தும் ஜெனரல் என்ற ஃபார்மட்டில் தான் இருக்கும் இந்த ஃபார்மட்டில் இருக்கும் போது அதில் எண்களையும் எழுத்துக்களையும் அல்லது இரண்டையும் டைப் செய்யலாம். அதை தவிர்த்து சில குறிப்பிட்ட வகையில் எண்களை மட்டுமோ அல்லது தேதியை மட்டுமோ ஒரு செல்லில் டைப் செய்ய வேண்டும் என்றால் அதற்கு ஃபார்மட் டூலை உபயோகப்படுத்தலாம்.


## வரப்பெற்றோம்




**ஆசிரியர் : பி. சிராஜுத்தீன்**

**கிடைக்குமிடம்**

**இஸ்லாம் அழைக்கிறது**
**214/55, முதல் தளம்,**
**(அஞ்சலகம் அருகில்) மெயின் ரோடு,**
**காயல்பட்டிணம் - 628 204.**
**தூத்துக்குடி மாவட்டம்**

## வைகறை வெளிச்சம் இப்போது துபாயிலும்...

துபாய் வாசகர்கள் வைகறை வெளிச்சம் மாத இதழை பெற்றிட தொடர்பு கொள்ள வேண்டிய

தொலை பேசி எண் : +971551390923

சென்னை தொடர்புக்கு : 9941813362

வைகறை வெளிச்சம் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!

| | | |
|---|---|---|
| **பின் அட்டை** | - | **ரூ. 6000/-** |
| **உள்பக்க அட்டை** | - | **ரூ. 4500/-** |
| **முழுபக்கம்** | - | **ரூ. 1000/-** |
| **அரைபக்கம்** | - | **ரூ.500/-** |
| **விசிட்டிங்கார்டு அளவு** | - | **ரூ.250/-** |

**புதைக்கப்பட்ட மக்கள்! மறைக்கப்பட்ட வரலாறுகள்!**

## சாட்சியங்கள்

**அன்பார்ந்த வாசகர்களே!**

**யூதர்கள் பாலஸ் தீனில் செய்துவரும் அநியாயங்கள் அனை வரும் அறிந்ததே! அங்கிருந்து விரட்டி அடிக்கப் பட்ட அந்த மக்கள் அடைக்கலம் புகுந்த நாடுகளில் ஒன்றான லெபனானில் புகுந்து லெபனானின் ஒரு பகுதியை ஆக்கிரமித்ததையும் அங்கே உலக நாடுகளின் பார்வை யின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த அகதிகள் முகாம்களான ஷாப்ரா, ஷத்திலாவில் செய்த கொலைகளை யாரும் அறிய மாட்டார்கள்.**

**காரணம், அவற்றை யூதர்கள் உலக நாடுகளின் கண்களிலிருந்து மறைத்துவிட்டார்கள். அந்தப் படுகொலைகளை உடனிருந்து பார்த்த டாக்டர் ஆங்சூவீ–ஐ யூதர்கள் சமூக சேவையாற்றிட வந்த ஒரு மருத்துவர் னை விட்டுவிட்டார்கள். இதனால் ஆங்சுவீ ஷாப்ரா ஷத்திலா படு கொலைகளின் ஒரு சாட்சி என்றாகிவிட்டார். இந்தத் தொடரில் அவர் அதனை விவரிக்கின்றார். இன்னும் பலர் நேரில் கண்டார்கள் என்றாலும் அவர்கள் ஆங் சுவியைப் போல் உலகுக்குச் சொல் லும் நெஞ்சுரத்தைப் பெறவில்லை.**


**யூதர்களின் மிரட்டகளுக்கு அஞ்சாமல், ஷாப்ரா ஷத்திலா படுகொலைகளை அவர் இங்கே உலகறிய தருகின்றார்.**

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை!

### டாக்டர் அங்க்சுவீ

### தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மத்

**மீண்டும் சாப்ரா, ஷத்தீலா அகதிகள் முகாம்கள்**




ஷாப்ரா ஷத்திலா அகதிகள் முகாம்களில் முஸ்லிம் களைப் படுகொலை செய்த இஸ்ரேலிய இராணுவத்தினர், மொத்தப் படுகொலைகளையும் உலகத்தின் கண்களிலிருந்து மறைத்து விட்டார்கள்.

சுற்றிச் சுற்றி வந்து அந்த முகாம்களைப் படமெடுத்தவர் கள், தொலைக்காட்சிப் பதிவு களைப் பதித்தவர்கள் யாரும் இதனை உலகுக்குச் சொல்லிட வில்லை.

மறைத்தே விட்டார்கள்.

இந்தப் பின்னணியில்தான் என்னுடைய பொறுப்பு மிகவும் பாரதூரமானது என்பதை நான் உணர்ந்தேன்.

உலகத்தின் பார்வையிலி ருந்து இந்த மாபாதகத்தை மறைத்தவிட்டோம் என இறு மாந்து கிடக்கும் இஸ்ரேலியரின் மமதையை நொறுக்கிட வேண் டும்.

இந்த உண்மைகளை உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு

வந்திடவேண்டும். அதில் ஏற்படும் இழப்பு எத்துணை பெரியதாக இருந்தாலும் சரியே என முடிவு கட்டினேன்.

என்னுள்ளத்தை தங்கள் அன்பால், ஆக்கிரமித்துக் கொண்ட அந்த அகதிகளுக்காக நான் செய்திட வேண்டிய தலையாயப் பணி இது என முடிவு செய்து கொண்டேன்.

என்னிடமிருந்த தகவல்களை ஒன்று திரட்டினேன். தினமும், எதிர்வந்த இடற்களையெல்லாம் எதிர்கொண்டு நான் எழுதிய நாள் குறிப்புகள் எனக்கு வெகுவாகப் பயன்பட்டன. அவற்றை ஒன்று திரட்டி சாட்சியங்களாக மாற்றினேன்.

பவுல் மோரிஸ், பிர், இன்னும் வீட்டுக்குப் போகாமல் தங்கி இருந்த மருத்துவர்கள், இவர்கள், அனைவரும் எனக்கு வெகுவாகப் பயன்பட்டார்கள். யூதர்கள் மக்கள் மன்றத்திலிருந்து மறைத்த இந்த உண்மைகளை உலகுக்கு அறிவித்தால் எப்படிப்பட்ட விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்பதை நானறிவேன்.

விளைவுகள் எதிர்பாராத விதமாகத் தானிருக்கும் என என்னிடம் பலர் எச்சரித்தார்கள். நான்அதனைப் பற்றிக் கவலைப் படவில்லை.

நாளையே நான் வெளியே செல்லும் போது நடு ரோட்டிலே வைத்து சுட்டுக் கொல்லப்படலாம்.

அல்லது நிலத்தடியிலிருந்து ஒரு குண்டு, நான் கால் பதித்தவுடன் வெடிக்கலாம். எதைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை.



நான் கவலைப் படுவதெல்லாம் நான் கொலை செய்யப்படுவதற்கு முன் இந்த உண்மைகள் உலகை சென்றடைந்திட வேண் டும்.

அதுவரை நான் உயிரோடு இருந்தால் போதும்.

எனவே உண்மையான சாட்சியங்களை ஒன்று திரட்டினேன். நான் திரட்டியவற்றை எழுதி ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட்டேன். ஏனெனில் இதில் எழுதப்பட்டிருப் பவற்றிற்கு நானே பொறுப்பு என்பதை பறைசாற்றிடத்தான்.

ஆனால் பவுல் மோரிசும், பிர்வும் சில பக்கங்களில் கையெழுத்துப் போட்டார்கள். அந்தப் பக்கங் களில் பதியப்பட்டிருந்த உண்மைகளுக்கு அவர்கள் பொறுப் பேற்றிட விரும்பினார்கள். ஆகவே அவர்களும் சில பக்கங்களில் கையெழுத்துப் போட்டார்கள்.

இதே போல் இன்னும் சில பெண்மருத்துவர்களும் சில பக்கங்களில் கையெழுத்துப் போட்டார்கள். பவுல் மோரிஸ் என்னிடம் இப்படியொரு தயாரிப்பு இங்கே நடக்கின்றது. அது வெளி உலகத்திற்கு செல்லுகின்றது என்பது யாருக்கும் தெரியாமல் பார்த்திட வேண்டும். மிகவும் கவனமாக இரு எனச் சொல்லி என்னை எச்சரித்தார்.

என்னைப் பொறுத்தவரை இந்த உண்மைகள் வெளி உலகத்தைச் சென்றடைந்திடும் வரை நான் உயிரோடு இருந்திட வேண்டும். அதற்கு பின் எனக்கு என்ன நடந்தாலும் சரியே! இது என்னுடைய தெளிவான முடிவாக இருந்தது.

நான் தயாரித்தவற்றை தொலை அஞ்சல் வழி "FAX" லண்டனிலுள்ள எனது கணவருக்கு அனுப்புவதுஎன முடிவு செய்தேன். பின்னர் அங்கிருந்து உலகெங்கிலுமுள்ள ஊடகங்களுக்கு அவரை அனுப்பிட சொல்ல வேண்டும் என்பது எனது முடிவு.

இதனை 'FAX' வழி என் கணவர் பிரான்சிஸ்க்கு அனுப்புகின்ற பொறுப்பை ஜோர்டானைப் சார்ந்த ஒரு கிருஸ்தவ சகோதரியிடம் ஒப்படைத்தேன். அவளும் அதைக் கச்சிதமாக செய்து முடிப்பதாகச் சொன்னாள். அதை முழுக்க முழுக்க இரகசியமாகவே செய்ய வேண்டும் என்றேன். முழு மனதுடன் ஒத்துக் கொண்டாள்.

என்னுடைய முழு நம்பிக் கையும் பார்வையும் அவள் மேல் விழுந்தது.

என் இதயம் அதிக வேகத்தில் இயங்கத் தொடங்கியது. காரணம், இஸ்ரேலியர் செய்த படுகொலைகளைப் பற்றிய முதல் செய்தியும் சாட்சியங்களும் ஒரு கிருஸ்தவ சகோதரியின் கைகளில் இப்போது இருந்தது.

என் முழு உழைப்பு மட்டுமல்ல என் வாழ்வின் ஏக இலட்சியமும் அந்தச் சகோதரியின் கைகளிலேயே இருந்தது.

என்னுள் எழுந்த பதற்றம் நாற்பது நிமிடங்கள் நீடித்தன.

ஆமாம்! நாற்பது நிமிடத்தில் அந்தச் சகோதரி அந்த செய்தியை என் கணவருக்கு அனுப்பிவிட்டாள்.

அதை என் கண்முன்னே தான் செய்தாள்.

இனி என்ன ஆனாலும் கவலை இல்லை. ஏதோ பெரிதாகச் சாதித்து விட்டோம் என்ற எண்ணங்களைச் சுமந்தவளாக நான் நிம்மதி பெருமூச்சு விட்டேன்.

ஒரு வெற்றி இன்னொரு வெற்றிக்கு வழி வகுக்கும் என்பார்கள்.

ஆகவே இன்னும் அதிகமாக அத்தாட்சிகளை ஒன்று திரட்ட வேண்டும் அவற்றையெல்லாம் உலக மக்கள் மன்றத்தில் வைத்திட வேண்டும். இது அந்த அகதிகள் முகாம்களில் குரூரமாக கொலை செய்யப்பட்டவர்களுக்கு நாம் செய்யும் மகத்தான சேவை - என்றது எனது ஆன்மா!

என் திட்டத்தை முழுமையாக வெளிப்படுத்தாமல் என் இதயத்தில் தேக்கிக் கொண்டேன். மெதுவாக, என்னோடிருந்த மருத்துவர்களிடம் ஷாப்ரா, ஷத்திலா அகதிகள் முகாமிற்கு மீண்டும் செல்லலாமா? எனக் கேட்டேன். எல்லோரம் ஒத்துக் கொண்டார்கள்.

நாங்கள் மீண்டும் படுகொலைகள் நடந்த ஷாப்ரா ஷத்திலா முகாம்களை நோக்கிப் பயணித்தோம்.

பவுல் மூர் அவர்களும், பிர், அவர்களும் வந்து ஒரு சிறு புன்னகையோடு மீண்டும் சாட்சியங்களைத் தேடவா என்றார்கள்.

பதிலுக்கு ஒரு புன்முறுவலை வரவழைத்தேன் என் முகத்தில்.

அவர்களும் உதவுவார்கள் பிற்றை நாள்களில் ஏதேனும் நீதிமன்றங்களில் சாட்சியங்கள் சொல்லிட வேண்டியது வந்தால் பயன்படுவார்கள் என்பது என் எண்ணம். அதுவே அவர்களின் உள்ளத்திலுமிருந்தது என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

ஆக எல்லோரும் ஒரே லட்சியத்துடன் ஷாப்ரா ஷத்திலா முகாம்களை நோக்கிப் பயணமானோம். வழியெல்லாம் சோதனைச் சாவடிகள். இஸ்ரேலிய இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது.

எல்லா தடைகளையும் கடந்து ஒரு வழியாக ஷாப்ரா ஷத்திலா அகதிகள் முகாமை வந்தடைந்தோம்.

பிணங்களைத் தோண்டி எடுத்துக் கொண்டே இருந்தார்கள். பிணங்கள் அழுகியதால் துர்நாற்றம் வீசிக்கொண்டே இருந்தது.

அந்த நாற்றத்திற்கிடையேயும் உயிர் பிழைத்தோர் அங்கே வந்துதான் வாழ்ந்திட வேண்டும் என்ற நிலை. ஆமாம் பாலஸ்தீனலிருந்து விரட்டப்பட்ட அந்த மக்கள் எங்கே செல்வார்கள்? பாலஸ்தீனிலிருந்து வெளியேற்றப்பட்ட பின் ஒவ்வொரு அரபு நாட்டிலும் தஞ்சம் புகுவதும் அங்கிருந்து விரட்டப்படுவதும் இன்னொரு நாட்டில் தஞ்சம் புகுவதும், என்றே அவர்களின் நிலை ஆகிவிட்டது.

அந்த முஸ்லிம்கள் சோர்வடைந்து போய்விட்டார்கள். நடந்த படுகொலைகளால் அவர்கள் பீதி அடைந்திருந்தார்கள்.

ஆனால் அவர்களுக்கு வேறு வழி இல்லை.

இப்படியொரு பயங்கர படுகொலையைச் செய்துதான் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட போது இவர்கள் பெற்றோரும் மற்றோரும் பாலஸ்தீனை விட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

படுகொலைகளுக்குப் பயந்து வெளியேறியவர்களுக்கு இன்று வரை வீடுகள் ஏதும் கிடைக்கவில்லை. அந்த நினைவு இவர்களை விட்டு இன்னமும் அகலவில்லை. ஆகவே அவர்கள் ஷாப்ரா, ஷத்திலா அகதிகள் முகாம்களிலேயே தொற்றிக் கொண்டு வாழ்வது என முடிவு செய்துவிட்டார்கள்.

அதனால்தான் மரண பீதிகளுக்கிடையேயும், அடிக்கும் துர்நாற்றத்திற்கிடையேயும் அங்கே தொற்றிக் கொண்டு வாழ வந்துவிட்டார்கள்.

குடும்பத்தவர்களை கொலை செய்த கொலை பீடத்திற்கே திரும்பிட வேண்டிய கட்டாயத்திற்குள்ளான அந்த

மக்கள் சோகமே உருவாய், எங்களைக் கட்டிபிடித்துக் கொண்டு அழுதார்கள். நாங்களோ எப்படி ஆறுதல் சொல்வதென்றே தெரியாமல் திணறினோம்.

இறந்துவிட்டார்கள் என நாங்கள் கருதி பலர் உயிருடன் இருந்தது எங்களுக்குச் சற்றே ஆறுதலாக இருந்தது.

ஆனாலும் அதனை எங்களால் வாய்விட்டுச் சொல் விட இயலவில்லை.

காஸா மருத்துவமனையில் துப்புறவு தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பாலஸ்தீன முஸ்லிம் பெண்மணி எங்களைப் பார்த்து ஓடோடி வந்தாள். எங்களைக் கட்டி தழுவி அழுதாள்.

எல்லாம் கெட்டு போய் விட்டது என்றாள். அவளை ஆறத்தழுவி ஆறுதல் சொன்னோம்.

திடீரென அந்த சகோதரி என் கழுத்தில் தொங்கிய சிலுவையைப் பார்த்துவிட்டாள்.

கூனி குறுகி போய் என்னை விட்டு அகன்றாள்.

அவளிடம் பொங்கிவந்த பாசம் ஆதங்கமாக ஆகிவிட்டது. அவளுடைய குழந்தைகள் இரண்டு பேரின் கழுத்துக்களை சிலுமை அணிந்த இரண்டு பேர் தான் தாம் அறுத்தார் களாம். அதனால் சிலுவையைப் பார்க்கவே அவளுக்கு வெறுப் பாய் இருந்தது.

சிலுவையைப் பார்த்தவுடன் தன் மழலைகளின் நினைவு வந்திடவே கதறிக் கதறி அழ தொடங்கிவிட்டாள்.

கிருஸ்தவத்தின் அடையாளம் அவளைப் பொறுத்த வரை மரணத்தின் அடையாளம்.

நான் அவளுக்கு ஆறுதல் சொன்னேன். கிருஸ்தவத்திற்கும் இந்தப் படுகொலைகளுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என்றேன். எனக்காக, அவள் நான் சொன்னதை ஏற்றுக் கொண்டாள். ஆனால் அழுகையை நிறுத்திட வில்லை.

கடவுள் மனிதனுக்கு துரோகம் செய்வதில்லை. மனிதன் தான் கடவுளுக்கு துரோகம் செய்கின்றான். எனக் கூறி அவளை என் நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன். அவள் தேம்பித் தேம்பி அழுதுக் கொண்டே இருந்தாள். அதனை என்னால் பொறுத்துக் கொள்ள இயல வில்லை. நானும் அழுதேன்.

காஸா மருத்துவமனை உடைக்கப்பட்டு சின்னாபின்னமாக ஆக்கப்பட்டி ருந்தது. அதிலிருந்த எல்லா மருத் துவ கருவிகளையும் இஸ்ரேலியர் கொள்ளையடித்துச் சென்றிருந் தார்கள்.

அந்த மருத்துவமனை இனி என்ன ஆகும் என்பது பெரிய கேள்வியே.

இஸ்ரேலியர் பாலஸ்தீனியர்கள் ஏற்படுத்தி வைத்திருந்த எல்லா நிறுவனங்களையும் அழித்திட வேண்டும் ஒட்டு மொத்தமாக ஒழித்திட வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார்கள்.

பெய்ரூத்திலிருந்த பாலஸ்தீன ஆய்வுமையத்தை மூடிவிட்டார்கள். அதில் சேர்த்து வைத்திருந்த ஆவணங்கள் அனைத்தையும் இஸ்ரேலிய இராணுவத்தினர் எடுத்துச் சென்று விட்டனர்.

பாலஸ்தீன மக்களுக்காக இயங்கிக் கொண்டிருந்த செம்பிறை சங்கத்தை "Red Cresent Society" சட்டங்களுக்குப் புறம்பான அமைப்பு என அறிவிக்கக் காத்துக்கிடந்தார்கள்.

சாலைகளிலெல்லாம் சோதனைகள், வாகனங்களை சோதனை செய்து. பாலஸ்தீன முஸ்லிம்கள் என தாங்கள் கருதியவர்களை அழைத்துச் சென்றனர் கொலை செய்திட தட்டிக் கேட்பார் யாருமில்லை.

ஜோர்டானின் முக்கிய வீதிகளுக்குள் இஸ்ரேலிய இராணுவம் புகுந்தது. ஒவ்வொரு வீடாக நுழைந்து பாலஸ்தீன முஸ்லிம்களை தேடும் வேட் டையை தொடர்ந்தது.

வாடகைக்கு வீடுகளை பாலஸ்தீனர்களுக்குத் தந்திருந்தால் அவற்றை உடனேயே காலி செய்திட வேண்டும். இல்லையேல் அந்த வீடுகளை இஸ்ரேலிய இராணுவம் கைப்பற்றிக் கொள்ளும் என அறிவித்தார்கள்.

பாலஸ்தீனர்களுக்குச் சொந்தமானவை அனைத்தும் இஸ்ரேலிய இராணுவத்திற்கு போரில் கிடைத்த சொத்துக்கள் என அறிவிக்கப்பட்டன.

"All property owned by Palestinans was treated as war booty" (P75)

பாலஸ்தீன அடையாளத்தோடு அல்லது அடையாள அட்டையோடு ஒருவர் இருந்தால் அவரை எந்தக் கேள்வி கணக்குமின்றி கொலை செய்யலாம் என்பதே நிலை.

அவர்கள் ஜோர்டானில் அகதிகள் முகாம்களில் வாழ்ந்து

கொண்டிருந்தார்கள். அந்த அகதிகள் முகாம்கள்தான் ஷாப்ரா, ஷத்திலா முகாம்கள். அவர்களுக்கு அகதிகள் என்ற அடையாள அட்டை வழங்கப் பெற்றிருந்தது. இந்த அடையாள அட்டையின்றி அவர்கள் வெளியே உலவ முடியாது.

இந்த அடையாள அட்டையே அவர்களை இன்று அடையாளப்படுத்தி அழைத்துச் சென்று, கொலை செய்ய இஸ்ரேலியர்களுக்குப் பயன்படும் அட்டையாக ஆகிப்போனது.

ஒவ்வொரு நிமிடமும் அந்த அகதிகள் முகாம்களைப் பற்றி அதிகமான செய்திகளையும் தடயங்களையும் சேகரித்தோம். அத்தனையும், நெஞ்சைப் பிளப்பனவாகவே இருந்தன.

இதனிடையே பாலஸ்தீன செம்பிறை சங்கத்வர்களை (PRCS) Palestinean Red Cresent Society இஸ்ரேலிய இராணுவத் தினர் துரத்தியதாகவும், அவர் களை செஞ்சிலுவை சங்கத்தினர் தங்கள் பாதுகாப்பில் வைத்திருப் பதாகவும் அறிந்தோம். ஆகவே அங்கே சென்று செம்பிறை சங்கத்தினரை சந்திப்பதுஎன முடிவு செய்தோம்.

சென்றோம்.

அங்கே பாலஸ்தீன மக்களுக்காக உழைத்துக் கொண்டிருந்த பல அதிசயப் பெண்களைச் சந்தித்தோம்.

செம்பிறை சங்கத்தைச் சார்ந்தவர்களை தங்களுடைய அலுவலகத்தின் ஆறாவது மாடியில் வைத்திருந்தார்கள். செஞ்சிலுவை சங்கத்தைச் சார்ந்தவர்கள். (இதனை எழுதுகின்ற ஆங்க் சுவீ. They are alive at the sixth floor அவர்கள் ஆறாவது மாடியில் உயிரோடிருந்தார்கள் என்கின்றார்.) அந்த அளவுக்கு பாலஸ்தீன செம்பிறை சங்கத்தைச் சார்ந்தவர்கள் உயிரோடிருப்பதே ஓர் அதிசயம் என்றானது.

செஞ்சிலுவை சங்கத்தின் அலுவகத்தில் நாங்கள் பல அதிசய பெண்களைச் சந்தித் தோம். அதில் என் நெஞ்சை அள்ளிய பெண் ஹட்லா அய்யூபி. மங்கை இவன். PRCS,இன் Director of Public Relations. அதாவது செம்பிறை சங்கத்தின் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்தவர். இவர் வழியாக பல உதவிகளை காஸா மருத்துவமனைக்குப் பெற்றிருக் கின்றார் அஜீசா ஹாலித்.

இஸ்ரேலிய இராணுவம் விதித்த அனைத்துத் தடைகளையும் தாண்டி இவர் நிவாரணப் பொருள்கள் காஸா மருத்துவ மனை வந்திடைந்திட காரணமாக இருந்தவர்.

இவரைப்பற்றி அஜீசா ஹாலித் அடிக்கடி சொல்லுவார். அதே போல் இன்னொரு பெண் உம்முவாலித். இவர் PRCS. என்ற பாலஸ்தீன செம்பிறையின் ஒட்டுமொத்தமான டைரக்டராக இயக்குனராக இருந்தவர்.

இவர் ஏற்றிருக்கும் பொறுப்பை வைத்தே இவர் எத்துனை ஆற்றல் மிக்கவராக இருந்தால் இந்தப் பணிகளைச் செய்ய முடியும் என்பதைத் தெரிந்திடலாம்.

இவர்களிடம் சற்று தனிய பேசிடவேண்டும் என்று நினைத்தேன். என் விருப்பத்தை அவர் களிடம் சொன்னேன். அவர்களும் ஒத்துக் கொண்டு ஒரு தனியறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

நான் என்னை டாக்டர் ஆங்க் சுவீ என்று அறிமுகப் படுத்தினேன். இவர்களுக்கு என் ஆருயிர் தோழி அஜீசா ஹாலித் ஐ அவசியம் தெரிந்திருக்கும் என நான் நம்பி னேன். அவளைப் பற்றி இவர் களிடம் விசாரிப்பதில் தவறில்லை என்றது என் மனம்.

ஆனால் நான் அஜீசா ஹாலித்-ஐ பற்றிப் பேச்சுகளை எடுக்கும் முன்னரே அவர்கள் அந்தப் பேச்சை எடுத்தார்கள்.

அஜீசா ஹாலித் உங்களைப் பற்றி அடிக்கடிப் சொல்லுவாள் என்றார்கள். அஜீஸா ஹாலித் -ஐ பற்றிப் பேசிடும்போது அவர்கள் முகத்தில் எந்தப் பதற்றமுமில்லை.

அது அஜீஸா ஹாலித்க்கு எதுவும் நடந்துவிடவில்லை என்பதைக் காட்டிற்று.

நான் இரட்டிப்புத் தைரியம் வரப் பெற்றவளாய் அஜீஸா எப்படி இருக்கின்றாள். நான் அவரைப்பார்க்க வேண்டும் என்று சொல்லி முடிப்பதற்குள் என் கண்கள் குளமாகின. என்னைப் போலவே அவர்களின் கண்களும் பனித்தன.

அஜீசா அந்த அளவுக்கு அனைவரின் உள்ளத்திலும் இடம் பிடித்திருந்தார்கள். ஹாட்லா என் மீது உரிமை எடுத்துக் கொண்டு இப்படிக் கூறினாள்.

அழாதே! சுவீ அஜீசாவை நீ சந்திக்க ஏற்பாடு செய்கின்றோம் என்றார்கள்.

வானம் என் கைகளுக்கு எட்டியது போன்றது எண்ணினேன்.

இரவு நீ இங்கே இருந்தால் தருவிக்கின்றோம். மன்னிக்க வேண்டும் உன்னை அவளிருக்கு

மிடத்திற்கு அழைத்துச் செல்ல முடியாது என்றார்கள்.

நான் எப்படியாவது இங்கே தங்கிவிடுகின்றேன். நீங்கள் அஜீசாவை தருவியுங்கள் என்றேன். சரி என்றவர்கள். விவகாரம் நமக்குள் இருக்கட்டும் என்றார்கள். நானும்சரி என்றேன்.

பவுல் மூர், பிர், இன்னும் என்னோடு வந்தவர்களிடம் நான், இன்று இரவு செஞ்சிலுவைச் சங்கத்தில் தங்கிடப் போகின்றேன் என்றேன்.

அவர்கள் என்னிடம் சொன்ன பதில் என்னை சற்று சங்கடத்தில் ஆழ்த்திற்று.

அவர்கள் அனுமதித்தால் அனைவரும் தங்குவோம் என்றார்கள். நான் பவுல் மூர் - ஐ தனியாக அழைத்து விசயத்தைச் சொன்னேன். ஏனெனில் பவுல் மூர் நம்பிக்கையானவர் இஸ்ரேலியரின் அநியாயங்களை உலகுக்குச் சொன்னத்தில் முக்கிய இடத்தைப் பெற்றவர். நான் எழுதிய அறிக்கையில் கையெழுத்திட்டவர் அதனால் அவரை நிச்சயமாக நம்பலாம் என எண்ணினேன்.

அவரும் அஜீசாவை சந்திக்க விரும்பினார். ஆனால் எல்லோரும் செஞ்சிலுவை சங்கத்தில் தங்கி அது இஸ்ரேலிய இராணுவத்தின் பார்வைக்குச் சென்று எல்லாம் கெட்டுவிடக் கூடாது என்பதினால் என்னை விட்டுச் செல்ல அனுமதித்தார்கள்.

மட்டுமல்லாமல் நாங்கள் வந்தவாகனம் மீண்டும் அதே இடத்திற்கு சென்றாக வேண்டும். இல்லையேல் எல்லோரும் வாகனத்தைத் தேடிடத் தொடங்கி விடுவார்கள். அப்போதும் ஆபத்தில் சிக்கிக் கொள்வோம். இதனால் நாங்கள் திரும்புகின்றோம். நாளை காலை இங்கே வந்து விடுகின்றோம். இதற்கிடையே நாம் தொலைபேசிகளில் பேசிக் கொள்ள வேண்டாம்" என்றார்.

அவருடைய திட்டங்களை அப்படியே ஒத்துக் கொண்டேன். இரவு வரைக்கும் செஞ்சிலுவை சங்கத்தைச் சுற்றி வருவது என முடிவு செய்தோம்.

எனக்கு ஒவ்வொரு நிமிடமும் ஒரு நாள் போல் தெரிந்தது.

இரவு வந்தது.

பவுல் மூர், பிர், இன்னும் என்னோடு வந்தவர்கள் எல்லோரும் சென்று விட்டார்கள்.

நான் செஞ்சிலுவை சங்கத்தில் ஹட்லாவும் உம்முவாலித்-ம் சொன்ன இடத்திற்குச் சென்றேன்.

உலகமே உடைந்து போனது போல் அங்கே ஒரு காட்சி,

ஆமாம் அங்கே அஜீசா இல்லை

மாறாக இஸ்ரேலிய இராணுவம் நின்று கொண்டிருந்தது.

என் தலை சுற்றியது

இதயமற்ற இவர்கள். . . ஏன். . . ?

இன்ஷா அல்லாஹ்

**தொடரும்**

# பயங்கரவாத எதிர்ப்புப் போரில் ஜமாஅத்துல் உலமா!

29.03.2011 செவ்வாய்க் கிழமை தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா சபையின் உயர்மட்டக்குழு கூட்டம் மதுரையில் மாநில தலைமையகக் கட்டிடத்தில் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் "ஷைகுல் ஹதீஸ்" அப்துர்ரஹ்மான் ஹழ்ரத் தலைமையேற்றார்.

கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவில் பல்வேறு இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகளை நாங்கள் தான் நடத்தினோம் என்று வனவாசி கல்யாண் என்ற நிறுவனத்தைச் சார்ந்த சுவாமி அசீமானந்தா ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

எனவே குண்டு வெடிப்புக்களைக் காரணம் காட்டி கைது செய்யப்பட அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும்.

போலியான ஆதாரங்களின் அடிப்படையில் இளைஞர்களைக் கைது காவல்துறை அதிகாரிகளை சட்ட ரீதியாக தண்டிக்க வேண்டும்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தகவல் : செய்தி தொடர்பாளர்**



# V.K.R.

## மூலம், பவுத்திரம் (கட்டி) ஆஸ்பத்திரி

(தமிழக அரசு பதிவு பெற்றது)

**Dr. T.H.** பத்மநாபன் R.I.M.P.
(தமிழக அரசு பதிவு பெற்ற மருத்துவர்)

குறிப்பு : 1) **ஆப்ரேஷன், பத்தியம் இல்லாமல் சித்த மருத்துவ முறையில் ஆயுட்கால உத்திரவாதத்துடன் குணப்படுத்தப்படும்.**

2) **ஆப்ரேஷன் மற்றும் பல சிகிச்சைகள் செய்தும் குணமடையவில்லையா ? கவலை வேண்டாம்.**

3) **ஆசனவாயில் ஏற்படும் மூலம்** (Piles) **பவுத்திரகட்டி** (Fistula) **ஆசன வெடிப்பு** (Ano-in Fissure) **நோய்களுக்கு மட்டும் சிகிச்சையளிக்கப்படும்.**

**நெ. 9, ஜி.எஸ்.டி. ரோடு (MEPZ எதிரில்), சானிடோரியம், தாம்பரம், சென்னை–45.** 97908 47383, 99403 06717

**நெ. 35/ஏ, ராஜாஜி தெரு, செங்கை டிரஸ்ஸஸ் மாடியில், செங்கல்பட்டு.** 98943 56195


## வைகறை விஷன் - வீடியோ -சி.டி., டி.வி.டி

1. நாளைய முஸ்லிம் பெண்கள் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
2. இஸ்லாம் தாக்கப்படுவது ஏன்? (மு.குலாம் முஹம்மது)
3. இஸ்லாமிய நாகரிகம் (மு. குலாம் முஹம்மது)
4. முஸ்லிம்கள் பலமும், பலவீனமும் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
5. இஸ்லாம் சோதனைகள், சவால்கள், சாதனைகள் (எம்.ஜி.எம்)
6. எதிர்காலம் இஸ்லாத்திற்கே (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
7. கர்கரேயை கொலை செய்தது யார்? புத்தக வெளியீட்டு விழா (மதுரை)
8. கர்கரே விருது நிகழ்ச்சி (மதுரை)
9. தீவிரவாத எதிர்ப்பு பொதுக்கூட்டம் (சென்னை)

தொடர்புக்கு : **வைகறை விஷன்**
52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் 7, மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 044-45566909

Owned and Published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed, Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Chennai - 600 002.